# இஸ்லாம்

## புரிதலுக்கான விளக்கங்கள்

# இஸ்லாத்தின் கொள்கைகள், மதிப்புக்கூறுகள் மற்றும் மரபுகள்

இஸ்லாம் புரிதலுக்கான விளக்கங்கள்

பெரும்பாக்கியமுடையவனான அவன் தன்னுடைய அடியார்மீது (முஹம்மது) அகிலத்தார் அனைவரையும் எச்சரிப்பவராக இருக்கவேண்டும் என்பதற்காக (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கக்கூடிய ஃபுர்ஃகான் (ஃகுர்ஆன்) எனும் வேதத்தை இறக்கியருளினான்.

அல்ஃகுர்ஆன் 25:1

# இஸ்லாத்தின் புரிதலுக்கான விளக்கங்கள்

## இஸ்லாத்தின் கொள்கைகள், மதிப்புக்கூறுகள் மற்றும் மரபுகள்

நான்காவது இதழ்: முஹர்ரம் 1446 / ஜூலை 2024

## பதிப்புரிமை

இஸ்லாமிய மார்க்கத்தை மனித இனத்தினர் அனைவரும் சீரான முறையில் புரிந்துகொள்வதில் உதவியாக இருக்க வேண்டும் என்ற உயர்வான நோக்கத்திற்காக இந்தப் புத்தகத்தில் எவ்வகையிலான மாற்றங்களையும் அறிமுகப் படுத்தக்கூடாது மற்றும் வியாபாரத்திற்காகப் பயன்படுத் தக்கூடாது என்ற நிபந்தனையுடன் எந்த மொழியிலும் வெளியிட இஸ்லாமியத் தகவல் மையம் அனுமதி அளிக் கின்றது.

## தொகுத்து வெளியிட்டவர்கள்

இஸ்லாமிய தகவல் மையம்
சுல்தான் கபூஸ் பெரிய மசூதி,
மஸ்கட், ஓமன் சுல்தான்
இணையதளம்: www.iicoman.om
மின்னஞ்சல்: info@iicoman.om




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்

# பொருளடக்கம்

## பிரிவு பக்கம்


முன்னுரை ........ 1
1. வரலாற்றில் இஸ்லாம் ........ 2
2. இஸ்லாத்தின் பொருள் மற்றும் அடிப்படை கோட்பாடுகள் ........ 8
3. அல்லாஹ்வின் இயல்புகள் மற்றும் பண்புக்கூறுகள் - படைப்பாளன் ..19
4. நபிகள் நாயகம் (ஸல்) - அவர்களுடைய வாழ்க்கை மற்றும் தனித் தன்மை ........ 21
5. நபிகளாரின் (ஸல்) நம்பகத்தன்மை ........ 24
6. திருக்ஃகுர்ஆனின் வரலாறு மற்றும் செய்தி ........ 30
7. திருக்ஃகுர்ஆனின் நம்பகத்தன்மை ........ 39
8. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நபிமொழிகள் ........ 42
9. மரணத்திற்குப்பின் வாழ்க்கை ........ 44
10. பிற மதங்களைப் பற்றிய இஸ்லாமியப் பார்வை ........ 49
11. இஸ்லாத்தின் பார்வையில் ஈசா.அ (இயேசு) ........ 52
12. இஸ்லாம் ஏன்? அனைத்து மதங்களும் உண்மையானவை இல்லையா? ... 55
13. நாத்திகம் மற்றும் உலோகாயதவாதத்தின் மீது நல்லறிவு புகட்டுதல் 57
14. இஸ்லாத்தில் பெண்களின் நிலை ........ 61
15. மத தீவிரவாதம் மற்றும் வன்முறை ........ 62
16. இஸ்லாமிய ஜிஹாத் ........ 64
17. இஸ்லாமிய சட்டங்கள் ........ 66
18. இஸ்லாத்தில் பிரிவுகள் ........ 68
19. இஸ்லாத்தில் அடிப்படை மனித உரிமைகள் ........ 70
20. இஸ்லாத்தில் கலாச்சாரப் பன்முகத்தன்மை ........ 74
21. மதம் ஏன் முக்கியமானது? ........ 78
22. ஒருவர் எவ்வாறு முஸ்லிமாக முடியும்? ........ 80

அருஞ்சொல் விளக்கக் கோர்வை ........ 82

இறுதி குறிப்புகள் ........ 84

மேற்கோள் ........ 88

# முன்னுரை

தனக்குக் கீழ்ப்படியவேண்டும் மற்றும் அவனுடைய கட்டளைகளுக்கிணங்க வாழ்க்கையினை மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அல் லாஹ் மனிதர்களைப் படைத்தான். இந்த நோக்கத்திற்காகவே அவன் தன்னு டைய மார்க்கத்தை அமைத்துத்தந்துள்ளான். அதுவே நாம் அவனுடைய நாட் டத்திற்கு தலைவணங்கவேண்டும் என்பதாகும் (அரபிமொழியில் இஸ்லாம்), மனிதர்களுக்கு மார்க்க நேர்வழியினைக் காட்டுவதற்காக இறைத்தூதர்களை யும் அனுப்பி வேதங்களையும் இறக்கியருளினான். இவ்வகையில், அனைத்து மனிதர்களும் இறைவனுடைய இந்த மார்க்கத்தைப்பற்றி அறியும் மற்றும் விசுவாச அடிப்படையிலான தங்களுடைய விருப்பத்தெரிவினை செய்யும் உரிமையும் உடையவர்கள். துரதிஷ்டவசமாக ஆரம்ரத்திலிருந்தே இஸ்லாம் அதனை விமர்சிப்பவர்களால் மெய்மை திரித்துக்கூறப்பட்டு, அதன் விளை வாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு வந்துள்ளதோடு, ஆன்மீக சத்தியத்தை நாடுபவர்களுக்காக ஒரு தடையாகவே அமைந்துள்ளது. மேலும், வல்லுநர் கள் என்று கூறிக்கொள்பவர்களால் இஸ்லாத்தைப்பற்றி இன்று முன்வைக் கப்படும் கருத்துக்களில் பெரும்பாலானவை பல்வேறு தப்பெண்ணங்கள் மற் றும் முற்சார்புகளால் களங்கப்படுத்தப்படுகின்றன உண்மையில், மேலைநாட்டு ஆசிரியர்களால் பெருமளவில் எழுதப்படாத மதம் எதுவுமே இல்லையென் றாலும், இஸ்லாத்தைப்பற்றி எதிர்மறையாகவும் தவறாகவும் எழுதியுள்ள அளவிற்கு அவை இருக்கவில்லை ஆகவே, கடந்த பத்தாண்டுகளில் இஸ்லாத் தைப்பற்றி எழுதியவை அதிகரித்திருந்தாலும், ஆதாரப்பூர்வமான, உண்மை மற்றும் பரஸ்பர புரிந்துகொள்ளும் பண்பினை உருவாக்கும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை அரிதானவை, மாறாக, ஒருதுருவ முனைப்பு டையவையே.

இந்த நூலின் நோக்கம் இந்த மாபெரும் மார்க்கத்தினைப்பற்றித் தெளிவான விளக்கமளிப்பது மற்றும் உருத்திரிபுகளைக் களைவதாகும். இவ்வகையில், மனித இனத்தினர் இஸ்லாத்தைப்பற்றி சரியான, உண்மையான கண்ணோட் டத்தில் பார்க்கும் வாய்ப்பினை பெறவும் தனிநபர்கள் உண்மையின் அடிப் படையிலான விசுவாசத்திற்கான நேரான வழியினைக் காணவும் வழிவகுக் கின்றது. விசுவாசம் பெரும்பாலும் ஒருவருடைய கலாச்சாரத்தால் தீர்மானிக் கப்படுகின்றது. இருப்பினும், ஒருவர் உண்மை எங்கு நிலைத்திருக்கின்றது என்பதை அறிவாற்றலின் மூலம்தான் வேறுபடுத்திக் கண்டறியமுடியும்.

# வரலாற்றில் இஸ்லாம்

இஸ்லாம் என்பது ஒரு மார்க்கமும் நாகரீகமும் ஆகும். இது பதினான்கு நூற்றாண்டுகளுக்கும் மேலான மனித வரலாறு மற்றும் அனைத்துக் கண்டங்களிலும் பரந்தகன்று காணப்படுவதோடு உறுதியாக நிலைத்திருக்கும் வரலாற்று உண்மையாகும். நாகரீகங்களின் சில அம்சங்களின் வளர்ச்சியில், குறிப்பாக மேலைநாட்டு நாகரீக வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளதோடு உலகெங்கிலும் வாழும் மக்களின் உள்ளார்ந்த மற்றும் புறத்தோற்றமான வாழ்க்கையினையும் மாற்றியுள்ளது. இன்று பல்வேறு குலமரபு, இன மற்றும் கலாச்சாரப் பின்னணியினைக்கொண்ட ஏறத்தாழ இரண்டு பில்லியன் மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர். இன்றைய உலகில் இஸ்லாம் ஒரு முக்கிய மார்க்கமாகத் திகழ்வதோடு மட்டுமல்லாது அதன் தாக்கமும் மேலைநாடுகள், ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிலும் தெளிவாகக் காணப்படுகின்றது. அதனால்தான், தற்கால மனித சமுதாயத்தினரின் நிலை மற்றும் மேலைநாட்டு அறிவாற்றல் மற்றும் கலாச்சார வரலாற்றுடன் ஈடுபாடு கொண்டுள்ள, அத்துடன் பல்வேறு சமயங்கள் மற்றும் அவற்றின் ஆன்மீக யதார்த்தத்தினால் ஈர்க்கப்பட்டவர்களுக்கும் இஸ்லாமிய மார்க்கத்தினைப் பற்றிய அறிவு மிகவும் முக்கியமானதாகும்.

உம்மத்து எனும் பொதுக்கருத்தின் முக்கியத்துவம் அல்லது முஸ்லிம்களாகக் கருதப்படும் மக்களின் கூட்டுமொத்தமான மற்றும் இணைந்து உருவாக்கும் இஸ்லாமிய உலகின் முக்கியத்தைப்பற்றி தெளிவாக விளங்கிக் கொள்ளாத வரையில் ஒருவர் இஸ்லாத்தைப்பற்றிப் புரிந்துகொள்ள முடியாது. இஸ்லாமிய சமுதாயம் என்பது ஒன்று மட்டுமே. இது திருக்ஃகுர்ஆனின் அடிப்படையிலான ஏகத்துவ இறையாண்மை மற்றும் இறைமை, முஹம்மது (ஸல்)[1] அவர்களுடைய இறைத்தூதுவம் மற்றும் இறைவனுடைய கட்டளைகளை (மார்க்க ஷரீஅத் சட்டங்களை) ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும். முஸ்லிம்கள் சகோதரத்துவம் எனப்படும் வலுவான கட்டுப்பாட்டினால் ஒன்றிக்கப்பட்ட, சில முஸ்லிம் சமூகங்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்ட அனைத்துக் குழப்பங்கள் மற்றும் இடர்பாடுகளுக்குமிடையில் இன்றளவும் உறுதியாகப் பற்றிப்பிடிக்கப்பட்டும் பேணப்பட்டும் வரும் பிணைப்பாகும். முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டிருக்கவில்லை என்றாலும், அவர்கள் ஒரே சமயக்கோட்பாட்டினைக்கொண்ட சமூகமாகும். இஸ்லாமிய சமூகத்தில் சிலரேனும் இணைந்திராத உலகத்தின் எந்த ஒரு குலமரபு அல்லது இனத்தினரும் இல்லை என்றே கூறவேண்டும். ஆரம்பத்திலிருந்தே மனித இனத்தினர் அனைவருக்கும் அறைகூவல்விடும் மார்க்கம் என்ற வகையில் இஸ்லாம் அனைத்துவித இன, பிரிவினை மற்றும் குல மரபமைப்புகள் ஆகியவற்றை மிக உறுதியாகவே எதிர்த்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய சமுதாய அமைப்பு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பிய, வட மற்றும் தென் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய அனைத்துக் கண்டங்களிலும் உலகின் அனைத்து இனங்கள் மற்றும் குலமரபுகளை உட்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமிய சமுதாயம், அதன் பல்வேறு அமைப்புகள் மற்றும் நாகரீக வளர்ச்சியில் பிரதிபலிக்கும் வரலாற்றிலிருந்து இணைபிரியாத ஒன்றாகும். மதீனாவில் உருவாக்கப்பட்ட முதல் சமுதாய அமைப்பினைக்

குறிக்கும் மக்காஹ் மாநகரிலிருந்து மதீனாவிற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட அந்த நிகழ்வு முதற்கொண்டு அவர்களுடைய (ஸல்) மறைவு மற்றும் நேர்மையான நான்கு க்ஹலீ∴பாக்களின் ஆட்சிக் காலம்வரை (கி.பி. 622 முதல் கி.பி. 661 வரை) இஸ்லாமிய வரலாற்றின் தனித்தன்மை வாய்ந்த காலக்கட்டமாக அமைகின்றது. இக்காலக்கட்டம் பிற்காலத்தில் முஸ்லிம்கள் தங்கள் இலட்சியத்திற்கான இலக்கினை அடைவதற்கான வழிகாட்டுதல்களைத்தேடும் முன் மாதிரியான காலமாகும்.

நேர்மையான நான்கு க்ஹலீ∴பாக்களின் ஆட்சிக்காலத்திற்குபின் பதவியேற்ற ஆட்சியாளர் க்ஹிலா∴பத்து முறையினை மாற்றியமைத்து டமாஸ்கஸை தலைநகரமாகக்கொண்டு ஒரு விரிவான மரபுவழி மன்னராட்சியாக ஒரு பரந்த பேரரசினை நிறுவினார். முதன்முதலான முஸ்லிம் மன்னராட்சியான உமையாதுகள் மத்திய ஆசியா முதற்கொண்டு ஸ்பெயின் மற்றும் பிரான்சு வரையிலும் ஆட்சி நடத்தியதோடு தொலைத்தொடர்பு, செயலாட்சி, நீதி மற்றும் இராணுவ அமைப்புகளையும் நிறுவினர். இவற்றில் பெரும்பாலானவை பல நூற்றாண்டுகள் நிலைத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்கள் பொது நிர்வாகம், வர்த்தகம், வேளாண்மை மற்றும் தபால் சேவைகளில் முன்னேற்றத்தைச் சார்ந்தவையாக இருந்தன. அரபிமொழியினை முஸ்லிம் உலகின் இடையீட்டு மொழியாக ஆக்கியது, தங்கம் வெள்ளி நாணயங்களை பேரரசின் ஒரே நாணய முறையாக அறிமுகப்படுத்தியது நினைவுச்சின்னமாகக் கருதப்படும் உமையாது பேரரசின் உச்சக்கட்டமாகும். டமாஸ்கஸில் உள்ள உமையாது பள்ளிவாசல், ஜெருசலேமில் உள்ள டோம் ஆ∴ப் திராக் எனப்படும் மலைக்



**ஸ்பெயின் நாட்டின் கிரனாடாவிலுள்ள அல்ஹம்ரா அரண்மனை**

கவிமாடம் ஆகியவை உமையாதுகளின் கட்டிடக்கலைத் துறையின் முக்கிய சாதனைகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

கி.பி. 750 ஆம் ஆண்டில் உமையாதுகள் அப்பாஸியர்களால் தூக்கியெறியப் பட்டு இஸ்லாமிய அரசின் தலைநகரமாக புதிதாக நிறுவப்பட்ட பாக்தாது நகரத்திற்கு மாற்றப்பட்டது. அப்பாஸியர்களின் ஆட்சிக்காலம் இஸ்லாமிய நாகரீகம் உச்சக்கட்டத்தை எட்டிய காலத்தைக் குறிக்கின்றது. அப்பாஸிய ஆட்சியாளர்கள் கலை, அறிவியல் மற்றும் தத்துவ ஆய்வுகளை ஆதரிப்பவர் களாக இருந்தனர். இக்காலக்கட்டத்தில்தான் இஸ்லாமிய அறிவியல் மற்றும் தத்துவம் இரண்டுமே செழித்தோங்கின. அப்பாஸியர்கள் ஒரு அறிவுத்திறம் வாய்ந்த கலாச்சாரத்தை உருவாக்கியதோடு, அது பண்டைய கிரேக்க மற்றும் ரோம கலாச்சாரத்திற்குப் போட்டியாகவும் அமைந்தது. காலப்போக்கில் அதி காரத்தின் மையமாக அமைந்த பாக்தாத் இஸ்லாமிய உலகின் அதிகாரமளிக் கப்பட்ட பல்வேறு மையங்களையும் கல்விக்கூடங்களையும்கொண்ட நகர மாக மாற்றியமைக்கப்பட்டது. அங்கே, கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங் கள் அமைக்கப்பட்டு ஒன்றோடொன்று போட்டியாக அமைந்தன. அக்காலக் கட்டத்தில், அறியப்பட்ட உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள கல்வியறிவு நாடுபவர்கள் பாக்தாத், டமாஸ்கஸ், புக்ஹாரா, கெய்ரோ, ஃபெஸ், கார்டோவா, ஷீராஸ் போன்ற கல்விமையங்களின் மூலம் பயனடைந்தனர். பல்கலை வல்லுநர்களான அல்-கிந்தி, அல்-ஃபாராபி, இப்னு சீனா, இப்னு ருஷ்து, இப்னுல் ஹய்த்ஸம், அல்-பைரூனி, அல்-க்ஹவாரிஜ்ஸிமி மற்றும் எண்ணற்ற அறி ஞர்கள் புதுப்புதுக் கருத்துக்கள், கோட்பாடுகளின் அடிப்படையில் நட்சத்திரங் களாகப் பிரகாசித்தனர். தத்துவம், வானியல், மருத்துவம், கணிதம், விஞ் ஞானம், அறிவியல் ஆகிய துறைகளில் அக்காலக்கட்டத்தில் பெரும்பாலான ஆய்வுகள் இஸ்லாமிய உலகில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவை அரபிமொழி வழியாகவே- அக்காலக்கட்டத்தின் சர்வதேச புலமை மற்றும் ஆய்வுமொழி - நடத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தில்தான் உமையாதுகளால் மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமிய சட்டங்களின் (ஷரீஅத் மார்க்கச்சட்டங்கள்) குறியீடு முறைப்படுத்தப்பட்டு இன்று நம்மிடையே காணப்படும் சம்பிரதாய தனிமுறை மரபுகள் (சுன்னி, ஷியா மற்றும் இபாதி) கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இதே காலக்கட்டத்தில்தான் நிலையான விதிமுறை தழுவிய நபிமொழி தொகுப்புகளான புக்ஹாரி, முஸ்லிம் மற்றும் பல்வேறு ஹதீத்ஸ் தொகுப்புகளும் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டன. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் பாக்தாத், கார்டோவா நகரங்கள் உலக அதிசயங்களாகவே வடிவெடுத்ததோடு, மிகப்பெரும் நாகரீக நகரங்களாகவும் அறிவாற்றல் மற். றும் கலாச்சாரப் பண்புடையவர்களை ஈர்க்கும் தலங்களாகவும் அமைந்தன. பிரான்சு, இங்கிலாந்து அல்லது இத்தாலிய ஆட்சியாளர்களுக்கு ஆலோசகர் கள், அறுவைசிகிச்சை நிபுணர்கள், கட்டிடக்கலைஞர்கள் அல்லது இசைக் கலைஞர்கள் மற்றும் ஆடை தயாரிப்பாளர்கள் தேவைப்படும்போதெல்லாம் அவர்கள் பாக்தாத் அல்லது கார்டோவாவுடன் தொடர்புகொள்வார்கள். முஸ் லிம் நகரங்களில் கற்களைக்கொண்டு கட்டப்பட்ட வீடுகள் மற்றும் அரண் மனைகள், விளக்கேற்றப்பட்ட, தளம் அமைக்கப்பட்ட வீதிகள், ஓடும் தண் ணீர்க்குழாய்கள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், மருத்துவமனைகள், மருந் தகங்கள், கலைக்கூடங்கள், பொது குளியலறைகள் கட்டப்பட்டிருந்தன. இடைக் கால முஸ்லிம்கள் ஏற்கனவே நவீன சுகாதாரத் தயாரிப்புகளான சோப்புகள்,

அழகுசாதனப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களை நுகர்வோராக இருந்தனர். அப்பாஸியர்களின் காலம் உண்மையில் அறிவியல் மற்றும் புதிது உருவாக்கும் உயர்ந்த வாழ்க்கைத்தரம் மற்றும் நவீன வளமான சமுதாயம் என்ற வகையில் முஸ்லிம்களின் பொற்காலமாகவே அமைந்தது.

இருப்பினும், படிப்படியாக, அப்பாஸிய ஆட்சியாளர்களின் அதிகாரம் குறையத் துவங்கியது மற்றும் க்ஹிலாஃபத்தைக் கைப்பற்றிய உத்ஸ்மானியர்களால் கி.பி. 1517-ல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. முன்னாள் பைசான்டிய நகரமான கான்ஸ்டான்டிநோபிளை (இன்றைய இஸ்தான்புல்) ஆட்சி செய்த (வீறார்ந்த) சுல்தான் சுலைமான் காலத்தில் உத்ஸ்மானியப்பேரரசு அதன் உச்சக்கட்டத்தில் இருந்தது. அவருடைய மறைவுக்கு முன்பாகவே சிரியா முழுவதும், எகிப்து, வட ஆப்பிரிக்கா, அரேபிய தீபகற்பம் மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பாலான பகுதிகள் அவருடைய ஆட்சியின் கீழ் வந்துவிட்டன. உத்ஸ்மானிய சுல்தான்கள் மிகப்பிரமாண்டமான பேரரசை முதல்தர மேம்பட்ட அதிகார செயல்திறனுடன் அக்காலத்தில் எந்த ஒரு அரசுடனும் ஒப்பிடமுடியாத வகையில் ஆட்சி செய்துவந்தனர். சுல்தான்கள் தங்களுடைய ஆட்சியின்கீழ் இருந்த பல்வேறு அடிப்படைக்கல்விக்கூறுகளை எவ்வகையிலும் ஒரே கலாச்சாரமாக அமையும் வகையில் கட்டாயப்படுத்தாமல், சகிப்புத்தன்மையுடனும் பன்மைவாதிகளாகவும் செயல்பட்டனர். உத்ஸ்மானியர்கள் வேறுபட்ட பிரிவினர் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் ஒன்றாகவே வாழும் மற்றும் அவர்களுக்கே உரிய விசுவாசக்கொள்கைகள் கலாச்சாரம், சட்டங்கள் மற்றும்



**துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சுலைமானியா பள்ளிவாசலின் உட்புறக்காட்சி**

அவர்களைச் சார்ந்தவர்கள், தலைவர்களுக்கிடையில் பற்றுறுதிக்கான ஒரு வரைச்சட்டத்தினை வகுத்துத்தந்தனர். உத்ஸ்மானிய ஆட்சியாளர்கள் ஆறு நூற்றாண்டுகள் நீடித்த, வெற்றிகரமான பேரரசை நிறுவமுடிந்தது. பதினேழாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டுவரை ஐரோப்பியக் குடியேற்ற விரிவாக்கம் காணப்பட்ட நிலையில் முஸ்லிம் அல்லாத வணிகர்கள், சமயப் பரப்பாளர்கள், படைவீரர்கள் மற்றும் குடியேற்ற நிர்வாகிகள் முஸ்லிம் நாடு களின்மீது ஆதிக்கம் செலுத்தத்துவங்கினர். போர்ச்சுக்கீசியர்கள், இஸ்பானியர் கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் பிரென்சுக்காரர்கள் அனைவரும் குடியேற்ற அரசுகளை நிறுவினர் மற்றும் சீனர்களும் ரஷியர்களும் முஸ்லிம் பெரும்பான்மை பகுதிகளை தங்கள் ஆட்சிக்குட்படுத்தி விரிவுபடுத்திக்கொண் டனர். இத்தகைய வெளிநாட்டு ஆதிக்கம் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், இஸ்லாமிய சமுதாயத்தின் அஸ்திவாரத்தையே அச்சுறுத்தும் வகையில் ஐரோப்பிய ஆட்சியாளர்கள் முஸ்லிம் பாரம்பரிய கல்வி, சட்டம் மற்றும் அரசு நிறுவனங்களையெல்லாம் மேலைநாடுகளில் உள்ளவைபோன்றே மாற்றிவிட்டனர் ஐரோப்பியர்கள் கிறித்துவ செல்வாக்கு, மதச்சார்பற்ற மற்றும் உலகாயதக் கொள்கைகளுக்கு தனிச்சலுகை அளித்ததன் மூலம் முஸ்லிம் பிரதேசங்களின் சிறப்புப்பண்பு களை சூழ்ச்சிகளால் தகர்த்துவிட்டனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத் தில், ஒரு நலிந்த பலவீனமான உத்ஸ்மானிய ஆட்சி, அதுவும் முதல் உலகப் போருக்குப்பின் தோற்கடிக்கப்பட்டு அகற்றப்படும் வரையில் மட்டுமே ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. உத்ஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் இன்றைய துருக்கி குடியரசு மேலைநாட்டுப் பாணியிலான மதச்சார்பற்ற அடிப்படை யில் நிறுவப்பட்டது. மீதியாயிருந்த உத்ஸ்மானியக் கூட்டாட்சியினர் அவர் களுக்கான சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

நவீன காலங்களில் அவர்களின் பாரம்பரியக் கண்ணோட்டத்தின்மீது அனைத்து தாக்குதல்கள் இருந்தபோதிலும், பெரும்பான்மையான முஸ்லிம்கள் தங்கள் சொந்த மரபுகளைப் பின்பற்றியவர்களாக உலகில் தொடர்ந்து வாழ்கின்றனர். இன்று இஸ்லாத்தை புரிந்துகொள்ளவேண்டுமானால், வெவ்வேறு மதங் களின் வரலாறு அனைத்தும் ஒரே பாதையை பின்பற்றுவதில்லை என்பதை முதலில் உணரவேண்டும். கிறித்துவம் பதினாறாம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கத்தை மேற்கொண்டது, இதன் விளைவாக புராட்டஸ்டன்டிசம் எனப்படும் கத்தோலிக்க கொள்கைக்கு ஏதிரான கோட்பாடு எற்பட்டது. யூத மதமும் சீர் திருத்த மற்றும் பழமை பேணும் மரபுகளை கடைபிடிக்கத்துவங்கியது. இருப் பினும், இஸ்லாம் அதற்கு ஆளாகவுமில்லை, குறிப்பிடத்தக்க அளவிற்கு எவ் வகையிலும் சட்டரீதியாகவோ அல்லது இறையியல் ரீதியாகவோ மாற்றத்தை மேற்கொள்ளும் சாத்தியக்கூறுமில்லை. மேலும், மதரீதியான வாழ்க்கை முறை மற்றும் சிந்தனை மரபுகளில் பெரும்பாலும் சமய உறுதி மற்றும் வழி மரபின் கட்டமைப்பிற்குள் உள்ளது. இஸ்லாமிய சமுதாயத்தின் சில துறை களிலும், நாடுகளிலும் காணப்படும் புதுமனப்பான்மை மற்றும் மாறா மரபேற் புக்கோட்பாடு இஸ்லாமிய மரபுவழி வாழ்க்கையில் தளர்வுக்குக் காரணமாக இருந்தாலும் நபி நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் நான்கு நேர்மையான க்ஹலீஃபாக்களின் காலத்தில் வகுக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு சவால் விடும் வகையில் எந்த ஒரு இறையியல் அல்லது சட்ட ரீதியான உலகளாவிய கண் ணோட்டத்தையும் உருவாக்க முடியவில்லை.. முஸ்லிம்களில் மிகப்பெரும்

பான்மையானவர்கள் மேற்கூறப்பட்டபாரம்பரிய சடங்குகளை இன்னும் கடை பிடித்துதான் வருகின்றனர், மேலும் அவர்களுடைய வாழ்க்கை மரபின் ஒழுங்கியைபு வழிவழியாகவே புரிந்து கொள்ளப்பட்ட வகையில் இஸ்லாம் சார்ந்த நிகழ்வுகளால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும், ஃகுர்ஆன், ஹதீஸ், ஷரிஅத் எனும் மார்க்கச் சட்டங்கள் போன்ற பாரம்பரிய இஸ்லாமியக்கல்வி மற்றும் சட்டஅமைப்புகளில் பேரழிவுகளின் தாக்கம்இருந்தபோதிலும், பல நூற்றாண்டுகளாக அவர்கள் மேற்கொண்டு வந்துள்ளதைப் போன்றே இன்றும் தொடர்கின்றன.



ஒரேஇறைவனானஅல்லாஹ்வின் வணக்கத்திற்காகபூமியில்கட்டப்பட்டமுதல் இல்லம் மக்காஹ்வில் உள்ள கஅபா ஆகும்.

# இஸ்லாத்தின்பொருள்மற்றும்அடிப்படைக் கோட்பாடுகள்

இஸ்லாமிய மார்க்கம் என்பது படைப்பாளனான அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் மீதான நம்பிக்கை, அவனை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவனுடைய இறுதித்தூதரான முஹம்மது (ஸல்) அவர்கள்மீது இறக்கியருளப்பட்ட அவனுடைய கட்டளைகள் மற்றும் நாட்டத்திற்குக் கீழ்ப்படிதல் என்பதாகும்.

இவ்வகையில், இஸ்லாம் என்பது விருப்ப, உள்ளார்ந்த, அமைதியான முறையில் அல்லாஹ்வின் நாட்டத்திற்கு அடிபணிதல் என்பது பொருள். அல்லாஹ்வின் நாட்டத்திற்கு அடிபணிவது என்பது படைப்பாளனுக்கு கண்ணியம், பக்தி மற்றும் ஒருமுக நோக்குடைய கடவுட்பற்று ஆகியவற்றைக் குறிக்கிறது, மேலும், இவையே இறைவனுடனான, தன்னுடனும், மற்ற உயிரினங்களுடனும் சுற்றுச்சூழலுடனும் சமாதானமாக இருப்பதற்கான சரியான நிபந்தனைகளாகும். இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் எவர் இறைவன் மீது விசுவாசம்கொண்டு அவனுடைய நாட்டத்திற்கு கீழ்படிவார்களோ அவர்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவார்கள்.

இஸ்லாம் ஒருபுதிய மார்க்கமல்ல.ஆதம் (அ)முதல் நூஹ்(அ), இப்ரஹீம்(அ), இஸ்மாயீல் (அ),இஸ்ஹாஃக் (அ) மற்றும் மூசா (அ), ஈசா (அ)மற்றும் இறுதியாக முஹம்மது (ஸல்) அவர்கள்வரை அனைத்து இறைத்தூதர்கள் மூலம் அருளப்பட்டஅதே மார்க்கம்தான். இந்த இறைத்தூதர்கள் அனைவரும் முஸ்லிம்களாகவே இருந்தனர், ஏனெனில், அவர்கள் அனைவரும் அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்கி, அவனுடைய நாட்டத்திற்கு மட்டுமே அடிபணிந்தனர்[2]. இதேபோல், இறைவனுடைய அனைத்து தூதர்களாலும் கொண்டுவரப்பட்டமார்க்கத்தைப் பின்பற்றிய அனைவரும் முஸ்லிம்கள் என்றுதான் அழைக்கப்படுகிறார்கள். ‘இஸ்லாம்’ என்ற சொல்லின் இந்த உள்ளார்ந்த பொருளின் பின்னணியில்தான் அல்லாஹ் ஃகுர்ஆனில் அறிவிக்கிறான் (3:19),

> **இறைவனின்பார்வையில் மார்க்கம் என்பது அவனுடைய நாட்டத்திற்குமுன் தம்மை சமர்ப்பிப்பதாகும் (இஸ்லாம்)**

இஸ்லாம் விசுவாசத்தின் ஆறு கோட்பாடுகளை அடிப்படையாகவும் (ஈமான்) மற்றும் மார்க்கத்தின் ஐந்து கடமைகள் ஆகியவற்றை அடிப்படையாகவும் கொண்டது (இஸ்லாம்). விசுவாசம் என்பது ஒருவர் மனஉறுதியுடன் நம்புவதாகும், மேலும், மார்க்கம் என்பது அந்த நம்பிக்கையினை செயல்வடிவில் உறுதிப்படுத்துவதாகும். இஸ்லாம் விசுவாசம் கொள்வதை மார்க்கம் பின்பற்றப்படுவது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான முன் நிபந்தனையாகக் கருதுகின்றது, ஏனெனில், விசுவாசம் படைப்பாளன் மற்றும் அவனுடைய தெய்வத்தன்மை, இறைமை மற்றும் அவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியும் உரிமையுடையவன் என்று அங்கீகரித்து ஒப்புக்கொள்வதாகும் (அரபிமொழியில் உலூஹிய்யதுன், ருபூபிய்யதுன் மற்றும் உபூதிய்யதுன்).

# விசுவாசத்தின் ஆறு கோட்பாடுகள்

விசுவாசத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் ¬ஃகுர்ஆனில் பல்வேறு வசனங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன[3]. உதாரணமாக, முதல் அடிப்படையைப்பற்றி அல்லாஹ் 112 ஆம் அத்தியாயத்தில் கூறுகிறான்:

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ * اللَّهُ الصَّمَدُ * لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ *
وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ

**அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்**

(நபியே!) நீர் கூறுவீராக: அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ், (எவரிடத்திலும் எத்தேவையுமில்லாதவன்), அவன் யாரையும் பெற்றெடுக்கவுமில்லை, எவராலும் பெறப்படவுமில்லை, மேலும், அவனுக்கு நிகரானவன் எவனுமே இல்லை.

**முதல் அடிப்படையினைப்பற்றி**

அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை என்று நம்புவது. அவனே பிரபஞ்சத்தின் படைப்பாளன், ஒருவனேயான ஏகன், அவனுடைய இயற்பண்புகள் தனித்துவமானவை, அவனின்று பிரிக்க முடியாதவை, அவனுடன் யாரையும் இணையானவர்களாக தொடர்புபடுத்தவே முடியாது. இறை நம்பிக்கையின் இந்தக்கொள்கை ஏகத்துவவாதம் (அரபிமொழியில் தவ்ஹீத்) எனப்படும்.

**விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** (அ) படைப்பாளனின் ஏகத்துவம் என்பது படைப்பிற்கான நோக்கத்தின் கூட்டொருமையைக் குறிக்கின்றது, எனவே, வாழ்க்கை முறையின் ஒற்றுமையே ஒரே மார்க்கம் என்பதாகும். மனித இனத்தினரின் பெரும்பகுதி இந்த நோக்கத்தின் கூட்டொருமையின் பற்றாக்குறையின் காரணமாக ஆன்மீக ஏமாற்றம் மற்றும் ஒத்திசைவின்மையில் சிக்கியுள்ளது. (ஆ) இறைவனுடைய இயற்பண்புகளை மற்ற படைப்பினங்களுக்கு கற்பிப்பது மூடநம்பிக்கைகளை உருவாக்குவதோடு அச்சம், ஒழுக்கக்கேடு மற்றும் தன்னலப்போக்கிற்கு வழிவகுக்கும்.

**இரண்டாவது அடிப்படை**

அல்லாஹ்வின் ஆன்மீக ஏவலர்கள் மற்றும் முகவர்களான வானவர்கள்மீது நம்பிக்கை கொள்வது. மனிதர்களைப் போன்றல்லாமல், வானவர்கள் புனித ஆவிகள் மற்றும் உடற்கட்டில்லாத படைப்புகளாகும். அல்லாஹ்வை என்றென் றும் வணங்குவதும் அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதும் அவர் களின் இயல்பாகும்.

**விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** மனித புலனுணர்வு களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை நம்புவது விசுவாசத்திற்கான நிபந்தனை களில் ஒன்றாகும். நமது புலனுணர்வை மீறி ஆன்மீக புரிதல் மற்றும் நுண் ணறிவுக்கான வழியைத் திறக்கும் வகையிலான, படைப்பாற்றலை உணரும் மற்றும் பாராட்டும் வகையிலான மனித அறிவுசார் திறனை இந்த அடிப்படை மென்மேலும் மேம்படுத்துகிறது.

**மூன்றாவது அடிப்படை**

அல்லாஹ்வின் தூதர்களுக்கு அருளப்பட்ட அனைத்து வானவேதங்கள் அல்லது விவிலிய ஏடுகளின்மீது நம்பிக்கை. உதாரணமாக, தாவூது (அ) அவர்களுக்கு அருளப்பட்ட வேதமான வழிபாட்டுப்பாடல்கள் (அரபியில் ஜ்ஸபூர்), மூசா (அ) அவர்களுக்கு அருளப்பட்ட வேதமான தோரா (அரபியில் தவ்ராத்), ஈசா (அ) அவர் களுக்கு அருளப்பட்ட வேதமான நற்செய்தி அல்லது சுவிசேஷம் (அரபியில் இன்ஜீல்), ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இறுதி வேத மான (திருக்ஃகுர்ஆன்), ஆகிய அனைத்து வேதங்களின் மீதும் ஈமான் கொள்வ தாகும்.

**விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** இது ஒரு தர்க்கரீதி யான கொள்கையாகும், ஏனெனில் அனைத்து வேதங்களும் ஒரே படைப்பாளனிட மிருந்து வந்துள்ளதோடு ஒரே அடிப்படைக்கொள்கைகள் மற்றும் நெறிமுறை களைக்கொண்டுள்ளன. ஒரு வேதத்தை ஏற்றுக்கொள்வதும் மற்ற ஒன்றை நிரா கரிப்பதும் முரண்பாடான ஒன்றாக ஆகிவிடும். அத்துடன், படைப்பாளண் மனிதர் களுக்கு மாறுபட்ட, முரண்பட்ட செய்திகளை அனுப்புவதும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். திருக்ஃகுர்ஆன் முந்தைய வேதங்களை உறு திப்படுத்துவதோடு இறைவனுடைய அருள்வாக்குகளை மனிதர்களுக்காக நிறை வுபடுத்தவும் செய்கிறது மற்றும் முந்தைய தூதர்களுக்கு அருளப்பட்டதாகக் கரு தப்படும் வேதங்களில் மனிதர்களால் செய்யப்பட்ட மாற்றங்களையும் சுட்டிக் காட்டி திருத்தவும் செய்கின்றது.

**நான்காவது அடிப்படை**

**ஆதம் (அ) முதல் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) வரை அல்லாஹ்வின் அனைத்து தூதர்கள்மீதும் நம்பிக்கை வைப்பது. (அவர்கள் அனைவர்மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக).**

**விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** இதுவும் ஒரு தர்க்க ரீதியான கொள்கையாகும், ஏனெனில், அனைத்து இறைத்தூதர்களும் ஒரே படைப்பாளனிடமிருந்து வந்தவர்கள் மற்றும் ஒரே அடிப்படைக் கொள்கைகள்

நெறிமுறைகளை மக்களுக்கு போதித்தனர். ஒரு இறைத்தூதரை ஏற்றுக் கொள்வதும் மற்றவர்களை நிராகரிப்பதும் முரண்பாடான ஒன்றாக ஆகிவிடுவது மட்டுமல்லாமல் இறைவனுடைய மார்க்கத்திலும் பிரிவினைகளை உண்டாக்கி விடும்.

**ஐந்தாவது அடிப்படை**

இறுதித்தீர்ப்பு நாளின்மீது நம்பிக்கை. வானவர்களானவர்களைப் போன்றல்லாமல், மனிதர்களுக்குத் தெரிவுசெய்யும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது: ஒருவர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியவும் விருப்பத்தெரிவு செய்யலாம் அல்லது மாறுசெய்யவும் தெரிவு செய்யலாம். இருப்பினும், இந்த சுதந்திரம் பொறுப்பு மற்றும் அல்லாஹ்வுக்கு பதில்கூறும் பொறுப்புடன்தான் வருகின்றது. இறுதித்தீர்ப்பு நாளில் நாம் உலக வாழ்கையில் செய்த தெரிவுகளுக்கெல்லாம் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும். சரியான தெரிவுகளை மேற்கொண்டு அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றுபவர்கள் நிரந்தரமான சுவர்க்கத்திற்குச்செல்வார்கள், தவறான தெரிவுகளைச் செய்தவர்கள் மற்றும் அல்லாஹ்வின் கட்டகளைப் புறக்கணித்தவர்கள் நிரந்தரமான நரகத்திற்குச் செல்வார்கள்.

விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்: இந்த அடிப்படை இறைவனுக்கு முன் பதில்கூறும் மற்றும் இந்த உலகில் நம்முடைய செயல்களுக்கு அங்கே கணக்குக்கொடுக்கவேண்டியிருப்பதை குறிக்கின்றது. உண்மையான தீர்ப்பு மற்றும் நித்திய மனநிறைவு அடைவதற்கான நம்முடைய ஏக்கமும் நம்பிக்கையும் உண்மையான நீதி மற்றும் முழுமையான தெய்வீகத் தீர்ப்பு இறுதித்தீர்ப்பு நாளன்று நிலைநாட்டப்படும்போது நிறைவேற்றப்படும்.

**ஆறாவது அடிப்படை**

இறைவன் நிர்ணயித்தவை மற்றும் விதியின் மீதான நம்பிக்கை: படைப்புகளில் நிகழும் ஒவ்வொன்றும் (நன்மை, தீமை அல்லது இடைநிலையானவை) அல்லாஹ்வின் எல்லையற்ற ஞானம் மற்றும் அறிவில் முன்னரே தீர்மானிக்கப்பட்டும் விதிக்கப்பட்டும் உள்ள சட்டங்கள் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப (அரபியில் ஃகஜ்தா வ ஃகதர்) நிகழ்கின்றன. படைப்புகளில் எதுவும் அல்லாஹ்வின் ஆளுகை மற்றும் இந்த சட்டங்களின் கட்டுப்பாட்டுக்கு (இயற்பியல் மற்றும் ஆன்மீக சட்டங்கள்) மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவிற்கு (அதாவது அளவுப்படி மற்றும் பரவெல்லை) அப்பாற்பட்டவையல்ல. மேலும், அல்லாஹ் தனது சட்டங்கள் மற்றும் விதித்துள்ள அளவீடுகளின் மூலம் எல்லையில்லா கட்டுப்பாட்டைக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், இடம் மற்றும் காலங்களை உள்ளடக்கிய எல்லையில்லா அறிவையும் கொண்டிருக்கிறான், மேலும், கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் அனைத்தையும் பதிவுசெய்தும் வைத்துள்ளான். நாம் திருக்ஃகுர்ஆனில் காண்கின்றோம் (6:59);

> **மறைவானவற்றின் திறவுகோல்கள் அவனிடமே உள்ளன, அவற்றை அவனைத்தவிர வேறு யாரும் அறிவதில்லை. தரையிலும் கடலிலும் உள்ள அனைத்தையும் அவன் அறிந்திருக்கின்றான். மரத்திலிருந்து எந்த இலையும் அவன் அறியாமல் உதிர்வதில்லை. பூமியின்**

**இருள்களில் மறைந்திருக்கும் எந்த விதையும் அவன் அறியாமலில்லை, பசுமையானவை உலர்ந்தவை அனைத்தும் தெளிவான பதிவேட்டில் எழுதப்பட்டுள்ளன.**

அல்லாஹ்வின் எல்லையில்லாத அறிவில் மனித வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களின் ஓட்டம் மற்றும் அலைகளும் அடங்கும். எவ்வாறாயினும், மனிதர்களின் செயல்கள் அனைத்தும் அவை செய்யப்படுவதற்கு முன்கூட்டியே அல்லாஹ்வின் அறிவில் இருந்த போதிலும், உதாரணமாக, வானூல் ஆய்வாளர்கள் விஞ்ஞான அறிவைப்பயன்படுத்தி பல ஆண்டுகளுக்கு முன்பே சூரிய கிரகணம் நிகழவிருப்பதைக் கணித்து பதிவுசெய்ய முடிவதைப்போன்று அவற்றை செய்யும்படி ஒரு நபரை கட்டாயப்படுத்தாது. அவர்களின் அறிவு அல்லது கணிப்பின் காரணமாக சூரிய கிரகணம் ஏற்படுவதில்லை. இதுபோன்றே, அல்லாஹ் (நேரம் மற்றும் இடத்தால் வரையறுக்கப்படமுடியாத) எல்லையற்ற அறிவைக்கொண்டிருப்பதன் மூலம் மனிதர்கள் என்ன செய்வார்கள் என்பதை அறிந்திருக்கிறான் மற்றும் அவர்களின் செயல்களைப் பதிவு செய்தும் வைத்திருக்கின்றான், இருப்பினும், இது அந்த செயலைச் செய்ய எந்த நபரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

எனவே, மேற்கண்ட கொள்கைகள் மனிதனுக்கு வழங்கப்படும் தெரிவு செய்யும் சுதந்திரத்தை மறுக்கவில்லை, உண்மையில், எங்கள் தெரிவுகளின் போக்கு மற்றும் வழிமுறைகள் எப்போதும் கீழ்க்கண்டவற்றை சார்ந்திருக்கும். (அ) அல்லாஹ்வின் சட்டங்கள் (ஆ) நம்முடைய தெரிவுகளின் விளைவுகள் தெய்வீக நடவடிக்கைக்கு ஏற்ப இருக்கும் மற்றும் (இ) அல்லாஹ்வுக்கு நம்முடைய விருப்பங்கள் மற்றும் செயல்கள் பற்றிய முன்னறிவு இருக்கின்றது, ஆனால், நம்முடைய விருப்பத்தெரிவுகளுக்கு நாமே பதில்கூறும் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம்[4]. மேலும், மனிதர்களுக்கு தெரிவுசெய்யும் சுதந்திரம் உள்ளது, அவர்களே தங்கள் தெரிவுகள் மற்றும் செயல்களின் காரகர்களாகவும் உள்ளார்கள், ஆனால், தெரிவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு படைப்பு சக்தி இல்லை.

.

**அல்லாஹ்தான் உங்களையும் நீங்கள் செய்கின்ற அனைத்தையும் படைத்தான். (அல் ஃகுர்ஆன் 37:96)**

இதன் பொருள் என்னவென்றால், மனிதர்களின் தெரிவுசெய்யும் சுதந்திரத்தைப் பொருத்தவரையில், ஒன்றில் "மனிதர்களின் விருப்பத்தேர்வினை" "தெய்வீகத் தீர்வின் நாட்டத்திற்கு" அல்லது மனித செயல்கள் தொடர்பான சில தெய்வீக நடவடிக்கைகள் துவங்குவதற்கு முன்நிபந்தனையாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். தெளிவாகக் கூறுவதானால், மனிதர்கள் அந்த செயல்களை விரும்புகிறார்கள், அல்லாஹ் (அவற்றை நிறைவேற்ற நாடினால்) நிறைவேற்றிவிடுகிறான். அல்லாஹ்வின் "தெய்வீக நாட்டத்திற்குட்பட்டுதான் மனிதர்களுடைய விருப்பங்கள் நிறைவேறுகின்றன. நன்மையானவை, தீமையானவை இரண்டிற்குமான ஆக்கப்பகுதி அல்லாஹ்வுக்கே உரியது என்று சொல்லமுடியும், இருப்பினும், தீமையானவை மனித விருப்பத்தின் விளைவாகவே உருவாக்கப்படுகின்றன- இது மனிதர்கள் தங்கள் சுவாதீன விருப்பத்தேர்வினை பயன்படுத்தாமலோ அல்லது தவறாகப் பயன்படுத்தியதன் காரணத்தினாலோ ஏற்படும் விளைவு

களாகும். அல்லாஹ் செயல்களையும் அதன் விளைவுகளையும் உருவாக்கு கிறான்.

> **உமக்கு எதேனும் நன்மை ஏற்பட்டால் அது அல்லாஹ்விடமிருந்து தான், உமக்கு தீமை ஏதும் நேர்ந்தால் அது உம்மிடமிருந்துதான் ஏற்படுகின்றது. (அல் குர்ஆன் 4:79)**

அல்லாஹ்வின் பார்வையில், தீமையை உருவாக்குவது அல்லது தீமையானதை நடக்க அனுமதிப்பது தீமையானதாகவே ஆகிவிடுவதில்லை, ஆனால், தீமை யான ஒன்றைத்தேர்ந்தெடுப்பதுதான் தீமை. இறைவன் தீமையைத் தேர்ந்தெடுப் பதில்லை, மனிதர்கள்தான் அவ்வாறு செய்கிறார்கள் .

**விசுவாசத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** படைப்பினங்களின்மீது அவற்றின் படைப்பாளனான அல்லாஹ்வின் முழுமையான கட்டுப்பாடு மற்றும் ஆளுகையின் மீதான நம்பிக்கை, படைப்புகளின்மீது அவனுடைய இறையாண் மையைப்பற்றிய நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. படைப்புகளின் மீதான அல்லாஹ்வின் கருணை மற்றும் ஆதரவு ஆகிய இயற்பண்புகளுடன், நம்பிக்கையின் இந்த அடிப்படை மேலும் நம்பிக்கையூட்டுவதோடு உள்ளார்ந்த அமைதியையும் ஊக்குவிக்கின்றது, மேலும், விசுவாசிகளின் மனங்களைப் பலப் படுத்துகிறது.

விசுவாசத்தின் இந்த ஆறு கொள்கைகளும் மனித அறிவாற்றல்களை ஆன்மீகப் புரிதலையும் நுண்ணறிவுத்திறனையும் தோற்றுவிக்கின்றன. அதற்கும் மேலாக, அவை ஒரு “விசுவாசியை” முழுதும் உணர்வுப்பூர்வமாகவே வரையறுக்கின் றன. இந்த கொள்கைகளில் ஏதேனும் ஒன்றைத்தவிர்ப்பது, உதாரணமாக, ஒரு இறைத்தூதர்மீது நம்பிக்கை, மற்றவர்களை நிராகரிப்பது போன்றவை ஒரு வரை அவிசுவாசியாக ஆக்கிவிடுகிறது.

# தொழுகைக்கான அழைப்பு

அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்,

அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்,

அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன்,

அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன்,

முஹம்மது(ஸல்)அல்லாஹ்வின் திருத்தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்,

முஹம்மது(ஸல்)அல்லாஹ்வின் திருத்தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்,

தொழுகைக்கு வாருங்கள், தொழுகைக்கு வாருங்கள்,

வெற்றியின்புறம் வாருங்கள், வெற்றியின்புறம் வாருங்கள்,

அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்,

அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை

தொழுகைக்கான இந்த அழைப்பு மக்களை நிரந் தர வெற்றியின்பால் அழைக்கின்றது. அல் லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரிய வேறு எந்த தெய்வமும் இல்லை என்பதையும் முஹம் மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்பதையும் மனித இனத்தினருக்கு இது ஒரு நிலையான நினைவூட்டலாகவும்உள்ளது.

# மார்க்கத்தின் ஐந்து அடிப்படைகள்

மார்க்கத்தின் ஐந்து அடிப்படைகள் திருக்ஃகுர்ஆனின் பல்வேறு வசனங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, முதலாவது அடிப்படையினைப்பற்றி அல்லாஹ் கூறுகிறான்[5] (அல் ஃகுர்ஆன் 49:15).

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرَسُولِهِ ثُمَّ لَمْ يَرْتَابُوا وَجَاهَدُوا بِأَمْوَالِهِمْ وَأَنفُسِهِمْ فِي سَبِيلِ اللَّهِ ۚ أُولَٰئِكَ هُمُ الصَّادِقُونَ

**உண்மையில், சரியான விசுவாசத்தைக் கொண்டவர்கள் அல்லாஹ்வின்மீதும் அவனுடைய திருத்தூதரின்மீதும் நம்பிக்கைகொண்டு, பின்னர் எந்த சந்தேகத்தையும் மனதில் கொள்ளாமல், அல்லாஹ்வின் பாதையில் தங்களுடைய உயிர்களையும்,உடைமைகளையும்கொண்டு கடுமையாக முயற்சிகளை மேற்கொள்பவர்களாவர். இவர்கள்தான் சத்தியவான்கள்.**

**முதல் அடிப்படை**

அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரிய தெய்வம் வேறில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் முழுமனதுடன்உறுதிகூறுவது. இந்தஉறுதிமொழி படைப்பாளன் ஒருவனே (ஏகத்துவம்) மற்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் கடைசி மற்றும் இறுதித்தூதர் என்ற ஒருவரின் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இதுவே அரபிமொழியில் ஷஹாததுன் எனப்படும், இதன் பொருளானது சாட்சி கூறுதல்,கொள்கையில்நிலைத்திருத்தல்மற்றும்எற்றுக்கொள்ளப்பட்டஉண்மையை நிலைநாட்டுதலாகும்.

ஒருவர் நம்பிக்கையை கொண்டுவிட்ட பின்னர், ஒரு முஸ்லிம் அந்த நம்பிக்கைக்கான பின்வரும் அடிப்படைகளை செயல்வடிவில் வலியுறுத்தும் வகையில் நிறைவேற்றக் கடமைப்பட்டவராவார்.

### இரண்டாவது அடிப்படை

ஒரு நாளைக்கு ஐந்துவேளை கடமையான தொழுகைகள் (அரபியில் ஸலாத்) விடியற்காலை, பகல், பிற்பகல், சூரியன் மறைந்தபின் மற்றும் இரவில் நிறை வேற்றுவது இடையீட்டாளர் யாருமே இல்லாமல் அல்லாஹ்வுடனான ஒரு நேரடித்தொடர்புடைய ஈடுபாடாகும், மற்றும் அல்லாஹ்வை மகிமைபடுத்தி புகழ்ந்து அவனிடமே நம் தேவைகளையெல்லாம் கேட்டுப் பிரார்த்திப்பது உள்ளடக்கியதாகும்.

**மார்க்கத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** அல்லாஹ் தொழு கையை அவனுடைய தியானம், அவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதிலிருந்து பாதுகாப்பு தேடுவதாகவும் விவரிக்கின்றான் (அல்ஃகுர்ஆன் 20:14 & 29:45). ஆகவே, வழக்கமான தொழுகைகள் இறையச்சத்தினை வளர்த்துக்கொள்வதில் நமக்கு உதவுகின்றன, (அரபியில்[6] தஃக்வா).

### மூன்றாவது அடிப்படை

ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் ஈகை கொடுப்பது (அரபியில் ஜ்ஸகாத்). கடந்துவிட்ட ஆண்டில் தேவைகளுக்குப்பின் மீதமாகக் கைவசமிருக் கும் செல்வத்தில், உதாரணமாக, சேமிப்புத்தொகை, பணம், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மொத்த மதிப்பின் 2.5% அளவிற்கு சமமான தொகையை ஒரு முஸ்லிம் தானமாக செலுத்தவேண்டும், விவசாய விளைபொருட்கள், இருப்பி லுள்ள சந்தைப் பங்குகள் மற்றும் பலவற்றின் மதிப்பின் மீதும் ஜ்ஸகாத் செலுத்துவது கடமையாகும்.

**மார்க்கத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** ஜ்ஸகாத் போன்ற நிலையான அமைப்பு சமூகத்தில் செல்வம் பகிரப்படுவதை உறுதிசெய்வதோடு, இதன் மூலம் சமூகத்தில் வறுமை, பொறாமை மற்றும் கசப்புத்தன்மை ஆகிய வற்றை நீக்கிவிடுகின்றது. ஜ்ஸகாத் என்ற சொல்லுக்கு 'தூய்மைப்படுத்துதல்' என்று பொருள், ஆகவே, அல்லாஹ்வின் அருளால் இது நம்முடைய செல் வத்தையும் நமது ஆன்மாவையும் தூய்மைப்படுத்துகிறது..

### நான்காவது அடிப்படை

இஸ்லாமிய ஆண்டின் ஒன்பதாவது மாதமான ரமஜ்தான் மாதத்தில் விடியற் காலையிலிருந்து சூரிய அஸ்தமனம்வரை நோன்பு நோற்பது. பகலில் ஒரு முஸ்லிம் சாப்பிடுவது, குடிப்பது மற்றும் பாலியல் செயல்களிலிருந்து விலகி இருக்கவேண்டும், மற்றும் மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டவையான, புறம் பேசுதல், பொய்சாட்சி கூறுதல்போன்றவற்றிலிருந்து விலகி இருக்கவேண்டும்.

**மார்க்கத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** உண்ணா நோன்பு என் பது ஒருவருடைய மனத்திண்மை, பொறுமை மற்றும் இறுதியில் ஒருவரின் நம்பிக்கை, மற்றும் இறையச்சத்தை (தஃக்வா) மேம்படுத்தவும் பலப்படுத்தவும் உதவும் ஒரு நடைமுறையாகும். இது நம்மைவிட குறைவான நற்பேற்றினை

யுடையவர்களை நினைவில் கொள்ளவும், ஒரு வேளை உணவும் அரிதாகவே பெறும் நிலையிலுள்ளவர்களைப்பற்றி சிந்திக்கவும் உதவுகிறது.

**ஐந்தாவது அடிப்படை**

மக்காவிற்கு புனித யாத்திரை (அரபிமொழியில் ஹஜ்), மேற்கொள்ள பொருளாதார வசதி மற்றும் உடல் நலமுள்ளவர்கள் மட்டும் வாழ்நாளில் ஒரு முறை இக்கடமையை நிறைவேற்றவேண்டும்.



மக்காவில் இப்ராஹீம் (அ) அவர்கள் கஅபாவைக் கட்டும்போது நின்ற இடம் (மஃகாமு இப்ராஹீம்).

**மார்க்கத்தின் இந்த அடிப்படையின் முக்கியத்துவம்:** புனித யாத்திரை என்பது உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களின் ஒன்றுகூடும் வருடாந்திர மக்கள் கூட்டமாகும். இது மனிதகுலத்தின் ஒற்றுமை மற்றும் ஒரே மார்க்கத்தின் கூட்டொருமையை வலியுறுத்துவதாகும். இறைவன் ஒருவனே, மனித இனமும் ஒன்று, அவர்களுடைய மார்க்கமும் ஒன்று. புனித யாத்திரை என்பது வணக்க வழிபாடு மற்றும் அல்லாஹ்வை மகிமைப்படுத்துதலின் ஒரு வடிவமும் இப்ராஹீம் (அ) மற்றும் அவருடைய மகன் இஸ்மாயீல் (அ) அவர்களுடைய வழிபாடு மற்றும் தியாகங்களின் நினைவாக மேற்கொள்ளப்படும் கடமையாக்கப்பட்ட ஒன்றாகும்.

மார்க்கத்தின் இந்த அடிப்படைக்கொள்கைகள் முஸ்லிம்களின் மனங்களை அவர்களுடைய உடல் சார்ந்த தேவைகள் மற்றும் உலோகாயதத்திலிருந்து விலக்கி ஆன்மீக உணர்வு மற்றும் மேம்பாட்டிற்குக்கொண்டு செல்கின்றன. அதாவது, நம் வாழ்க்கையை பருப்பொருள் பரிமாணத்திலிருந்து ஆன்மீக பரிமாணத்திற்கு உயர்த்துகின்றன. அந்நிலையில், நாம் தொடர்ந்து படைப்பாளனைப்பற்றிய விழிப்புணர்வு, நம்முடைய கடமை மற்றும்அவனுக்கு முன்னால் கணக்கு கொடுக்கவேண்டிய பொறுப்பு மற்றும் மனிதகுலத்தின்பால் நம்முடைய பொறுப்பினையும் அறிந்தவர்களாக இருப்போம்.



ஓமான் மஸ்கட்டில் உள்ளசுல்தான் காபூஸ் பிரமாண்ட பள்ளிவாசல் மினாராவின் காட்சி. கடந்த காலத்தில், மினாராக்கள் தொழுகைக்கான அழைப்புகள் கொடுப்பதற்கான உயரமான இடங்களாக விளங்கின. இன்று அவை பள்ளிவாசல்களை அடையாளம் காட்டும் கட்டிடக்கலையின் பண்பு மாதிரிகளாகவே திகழ்கின்றன.

# அல்லாஹ்வின் இயல்புகள் மற்றும் இயற்பண்புக்கூறுகள் ஏக படைப்பாளன்

ஒவ்வொரு நபருக்கும் ஒருபெயர் இருப்பதுபோலவே, படைப்பாளனும் பிரபஞ்சத்தின் இறைவனும் தனக்கே உரிய பெயரால் "அல்லாஹ்" என அறியப்படுகிறான். இது பாலினம், பன்மை அல்லது வருவிப்புச் சொற்களில்லாத ஒரு தனி பெயராகும். அல்லாஹ் ஆணோ பெண்ணோ அல்ல. அவன் ஒரு தந்தை மற்றும்/ அல்லது தாயிடமிருந்துபெறப்படவில்லை. அவன் நிகர் ஒத்த அல்லது உருநேர்படி இல்லாத, சமமான அல்லதுஇணையான ஒன்றில்லாதவன். அவனுடைய தனிநிலை தொன்னலம் வாய்ந்த, பகிரப்படாதது என்ற வகையில் அல்-வாஹித், ஒருவனேயானவன் என்றழைக்கப்படுவதற்கு அவன் மட்டுமே தகுதியானவன். அல்லாஹ் தனித்துவமானவன். இவ்வகையில்:

1. அல்லாஹ்வுக்கே உரியவை (அ) அறிவில் விஞ்சிய இயற்பண்பு, தன்னிறைவான நிலை, அவனுக்கு ஆரம்பமும் முடிவும் இல்லாத பண்புக்கூறுகள் (ஆ) தனித்த ஒப்புவமையற்ற அவனுடையஇயல்பு மற்றும்முழுமையான செயல் வல்லமை உள்ளடக்கிய இயற்பண்புக்கூறுகள், உதாரணமாக, அவன் படைப்புகளைப்போலல்லாத, என்றென்றும் உயிர் வாழ்பவன், உயிர்கொடுத்து வாழ்க்கையளிப்பவன், அனைத்தையும் செவியுறுபவன், அனைத்தையும் கண்காணிப்பவன் மற்றும் இந்த திறன்களையெல்லாம் இயக்குபவன், அவன் பேராற்றலுடையோன் மற்றும் தான் நாடியதைத் திணிக்க வல்லவன். இந்த இயற்பண்புகள் அனைத்துமே தனித்தன்மை வாய்ந்தவை, யாராலும் பகிரப்படாதவை.

2. அல்லாஹ்வுக்கே உரியஅவனது இயற்பண்புகளிலிருந்து தோன்றும் பல அழகிய திருநாமங்கள் உள்ளன. இத்திருநாமங்களாவன மிக்க கருணையாளன், மன்னிப்பவன், இரக்கமுள்ளவன், ஞானமுடையோன்.

3. அல்லாஹ்வின் தெய்வத்தன்மை, இறைமை மற்றும் அவனுக்கே கீழ்படியும் உரிமை, (அரபிமொழியில் உலுஹிய்யதுன், ரூபூபிய்யதுன் மற்றும் உபூதிய்யதுன்) வேறு எவருடனும் பகிர்ந்துகொள்ளமுடியாது.

4. இந்த தெய்வீகப் பெருமையுடன், அல்லாஹ் என்ற திருநாமம், நம்முடைய முழுமையானகீழ்ப்படிதலும் அன்பும் அவனுக்கே உரிய ஒருவன் மற்றும் யாரிடமிருந்து நம்முடைய முழுபாதுகாப்பும் அடைக்கலமும் பெறப்படுகிறதோ அவன் என்பதைக் குறிக்கும்.

இவ்வகையில், அல்லாஹ்வின் திருநாமம் உண்மையான ஏகத்துவத்தையே குறிக்கின்றது. மேலும், அவனுடைய திருநாமத்தின் ஆழ்ந்த பொருள் அவனை விவரிக்க 'கடவுள்' என்ற சொல் போதாது, இருப்பினும், இஸ்லாமிய இலக்கியங்களில் இரு சொற்களும் பெரும்பாலும் ஒத்ததாகவே பயன்படுத்தப்படுகின்றன.

அல்லாஹ் பிரபஞ்சம் மற்றும் அதிலுள்ள அனைத்து படைப்பினங்களையும் தோற்றுவித்தவன், பராமரிப்பவன் என்ற வகையில் அவன்மீது நாம் நம்பிக்கை

கொள்வது, அவனுக்குக் கீழ்ப்படிவது மற்றும் அவனுக்கு நம்முடைய நன்றியுணர்வை உறுதிப்படுத்துவது கடமையாகும். அல்லாஹ்வின் இயல்பு, இயற்பண்புகள் மற்றும் திருநாமங்களை மறுப்பது அல்லது அவற்றை வேறு எந்த படைப்பினங்களுடனும் இணையாக்குவது (அரபிமொழியில் ஷிர்க்) அவனுக்கு நாம் செய்யும் நன்றிக்கேடாகும், இதிலிருந்து பாவமன்னிப்பு கோராவிட்டால் அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்காத மிகப்பெரிய குற்றமாகிவிடும். அல்லாஹ் திருக்ஃகுர்ஆனில் கூறுகிறான் (அல்ஃகுர்ஆன் 4:48);

**அவனுடன் இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிப்பதில்லை, ஆனால், அவன் விரும்பினால் வேறு எதனையும் யாருக்கு வேண்டுமானாலும் மன்னித்துவிடுகிறான். அல்லாஹ்வுடன் யாரையும் இணைவைப்பபது உண்மையில் மிகவும் கொடூரமான ஒரு பாவச்செயலாகும்.**



கோர்டோபாவின்மசூதி-கதீட்ரல், கோர்டோபாவின் பெரிய மஸ்ஜித்-திருச்சபை என்றும் அழைக்கப்படும் மெஸ்க்விட்டா, அதன் திருக்கோயில் சார்ந்த கன்னி மேரி விண்ணேற்பு திருக்கோயில் என்பதாகும், இது கோர்டோபாவின் ஒரு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க திருக்கோயிலாகும். இதன்கட்டமைப்பு இஸ்லாமியக் கட்டிடக்கலையின்பல்வகைபண்பு நிறைந்த திறமையான நினைவுச் சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# நபிகள் நாயகம் (ஸல்) - அவர்களுடைய வாழ்க்கை மற்றும் தனித்தன்மை

முஹம்மது (ஸல்) அவர்கள் எல்லா மனிதர்களுக்கும் அல்லாஹ்வின் திருத் தூதராவார். முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர் நூஹ் (அ), இப்ராஹீம் (அ), மூசா (அ) மற்றும் ஈசா (அ) போன்ற பல நபிமார்களை அல்லாஹ் அனுப்பினான். நபிமார்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கும், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே அனுப்பப்பட்டனர். முஸ்லிம்கள் அல்லாஹ் வின் அனைத்து நபிமார்கள்மீதும் நம்பிக்கைவைத்து கண்ணியம் மரியாதை செய்கின்றனர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மனித இனத்தினர் அனைவருக்கும் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் மற்றும் முன்னுரிமையுள்ள உலகளாவிய செய்தியினை அறிவிக்க அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் இறுதியானவர் என்ற வகையில் முஸ்லிம்களால் மிகுந்த உயர்வான மரியாதைக் குரியவராக கண்ணியப்படுத்தப்படுகிறார்.[7]

### அவர்களுடைய (ஸல்) வழிமரபு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு அரபியர் மற்றும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய மகனான இஸ்மாயீல் (அ) அவர்களுடைய வழித்தோன்றலாவார். மக்காஹ்வில் ஆதிக்கம் செலுத்திவந்த ஃகுரைஷ் குலமரபினரில் ஒன்றான மரியாதைக்குரிய பனூ ஹாஷிம் குலத்தைச் சேர்ந்தவர் இவர்.

### அவர்களுடைய (ஸல்) பிறப்பு

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கி.பி. 570 ஆம் ஆண்டில், அதாவது ஈசா (அ) அவர்களுக்குப்பின்சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்குப்பிறகு மக்காஹ்வில் பிறந்தார்கள், இவருடைய பெற்றோர் இருவரும் உன்னத வம்சாவழியைச் சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள். இவருடைய தந்தை, முர்ராவின் மகனான கிலாபின் மகனான, குஸ்ஸேயின் மகனான, அப்துமனாப்பின் மகனான, ஹாஷிமின் மகனான, அப்துல் முத்தலிபின் மகனான அப்துல்லாஹ் ஆவார். இவரதுதாயார் முர்ராவின் மகனான, கிலாபின் மகனான, ஜ்ஸுஹ்ராவின் மகனான, அப்து மனாப்பின் மகனான, வஹறபின் மகள் ஆமினா (அ) ஆவார்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய தந்தை அவர் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆறு வயதாக இருந்தபோது அவரது தாயார் இறந்துவிட்டார். அவரை அவரது பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் வளர்த்து வந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு அவர் தனது சிற்றப்பன் அபூதாலிப்பின் பராமரிப்பில் இருந்தார், அப்துல் முத்தலிப் மறைவுக்குப் பின் அபூதாலிப் பனூ ஹாஷிம் குலத்தின் தலைவரானார்.

## அவர்களுடைய (ஸல்) தனித்தன்மை மற்றும் நற்குணங்கள்



முஹம்மது (ஸல்)

நபியாக ஆக்கப்படுவதற்குமுன் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு எளிய, பண்புள்ள மற்றும் நல்லொழுக்கமுள்ளவராகவளர்ந்துவந்தார். அவர் எழுத்தறிவற்றவர், மக்களிடையே விக்கிரக வழிபாடு கடைபிடிக்கப்பட்டு வந்தபோது அவர் ஒருபோதும் விக்கிரகங்களை வணங்காதவர். மக்காஹ்விற்கு வெளியே ஒரு குகையில் பல நாட்கள் தனிமையில் படைப்புகளைப்பற்றி சிந்தித்தும் படைப்பாளனை தியானித்தும் வந்தார்.

அவர் ‘உண்மையானவர், நம்பிக்கைக்குரியவர்’ (அரபியில் அஸ்ஸாதி்ஃக், அல்-அமீன்) என்று அழைக்கப்பட்டார், மேலும், அவர் மிக்க நேர்மையானவர். பலர் வணிகத்திற்காக அல்லது பாதுகாப்பாக வைப்பதற்காக தங்கள் சொத்துக்களை அவர்களிடம் ஒப்படைத்து வந்தனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழைகளையும், நலிந்தவர்களையும் பாதுகாத்து அவர்களைப் பராமரித்து வந்தார் மற்றும் அவர்களைப் பாதுகாப்பதற்காகவும் உதவுவதற்காகவும் ஒரு கூட்டணியில் இணைந்து பாடுபட்டார்.

## அருள்வாக்குகள் இறக்கியருளப்படுதல்

அவர் குகைக்குள் தனிமையில் தியானத்தில் இருக்கும்போதுதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்துமுதல் வஹியினை வானவர் ஜிப்ரீல் (அ) மூலம் அருளப்பெற்றார்:

> **ஓதுவீராக! (அல்லது ஒப்புவிப்பீர், அல்லது பிரகடனம் செய்வீர்!) படைத்த உம்முடைய இறைவனின் திருப்பெயரால்,. மனிதனை அவன் (வெறும்) உறைந்த இரத்தக்கட்டியிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமதிறைவன் எத்தகைய அருட்கொடையாளன் என்றால் அவனே எழுதுகோலைக்கொண்டு கற்றுக்கொடுத்தான், மனிதனுக்கு அவன் அறியாதவற்றைக்கற்றுக்கொடுத்தான் (அல்ஃகுர்ஆன் 96:1-5).**

இந்த முதன்முதலான வஹி கி.பி. 610 ஆம் ஆண்டில் முஹம்மது (ஸல்) அவர்கள் 40 வயது அடைந்தபோது இறக்கியருளப்பட்டது.

**இந்த முதன்முதலான வஹி கல்வியறிவையும் உய்த்துணரும் மெய்யறிவையும் விசுவாசத்தின் பிரகடனத்திற்கான அடிப்படையாகவும், உண்மையிலேயே விசுவாசத்தின் அடிப்படையாகவும் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.**

வானவர் ஜிப்ரீல் (அ) மூலமாக அருளப்பட்டு வந்த வஹி நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அடுத்த 23 ஆண்டுகள் தொடர்ந்தது. முதல் 13 ஆண்டுகளில் அவர்கள் மக்காஹ்வில் இஸ்லாத்தின் செய்தியை பிரகடனம் செய்து வந்தார்கள், அங்கே அவரும்அவருடைய தோழர்களும்பெரும்எதிர்ப்பு மற்றும் துன்புறுத்தலை எதிர்கொண்டனர். ஆனால், கி.பி. 622-ல் தொடர்கதையான மற்றும் அதிகரித்து வந்த துன்புறுத்தல்களின் காரணமாக நபி (ஸல்) மற்றும் அவருடைய தோழர்கள்மக்காவிலிருந்து 400 கி.மீ வடக்கே அமைந்துள்ள மதீனா நகரத்திற்கு குடியேறவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டனர். மதீனா வாசிகள் அவர்களைமரியாதையுடனும், தாராளமனப்பான்மையுடனும் வரவேற்றனர். திருநபி (ஸல்) அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு மதீனாவில் அல்லாஹ்வின் செய்திகளைதொடர்ந்து வஹியாகப்பெற்று போதித்து வந்தார்கள் மற்றும் அங்கு அவர் இஸ்லாமிய அரசையும் செயல்படுத்தத் துவங்கினார்கள்.

### அவர்களுடைய (ஸல்) மரணம்

கி.பி. 632 -ல், 63 வயதை எட்டிய நிலையில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறுகியகால நோய்க்குப்பின் மரணமடைந்தார்கள் மற்றும் அவரது மனைவியான ஆயிஷா (ர) அவர்களுடைய இல்லத்தில், மதீனாவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

**எனவே, (நபியே) அல்லாஹ்வையே முழுமையாக சார்ந்திருப்பீராக, நிச்சயமாக நீர் (முஹம்மது. (ஸல்) தெளிவான சத்தியத்தில் இருக்கிறீர்கள் (அல்ஃகுர்ஆன் 27:79)**



# நபிகளாரின் (ஸல்) நம்பகத்தன்மை

மனிதகுல வரலாறு முழுவதும், இறைவனுடைய அனைத்து நபிமார்களின் நற்சான்றுகளும் எப்போதுமே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன, இவ்வகையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் விதிவிலக்கல்ல. நபிமார்களின் நற்சான்று அவர்களின் உன்னதமான தனிப்பட்ட குணாதிசயத்திலும், அவர்கள் தங்கள் இறைவனிடமிருந்து கொண்டுவரும் செய்தியின் மறுக்கமுடியாத உண்மை யிலும் உள்ளது என்பதை திருஃகுர்ஆன் அறிவிக்கின்றது. இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுடைய நம்பகத்தன்மையை வலியுறுத்தும் வகை யிலான நான்கு வாதங்கள் உள்ளன.

### முதல் வாதம்

பிரிவு 4-ல் நாம் கண்ட வகையில், நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர் கள் நேர்மைக்காக மக்களால் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டவர். அவர்களு டைய புனைப்பெயர்களில் ஒன்றான அஸ்ஸாதிஃக், அல்-அமீன் என்று அறி யப்பட்டவர். நபியவர்கள் (ஸல்) தம்முடைய நாற்பது வயதில் இறைத்தூதராக பணியைத்தொடங்கினார். அத்தகைய உன்னத குணங்களைக்கொண்ட ஒருவர் வயதில் முதிர்வடைந்த நிலையில் திடீரென்று ஒரு பொய்யராகவோ வஞ்சக ராகவோ மாறமுடியும் என்று கற்பனை செய்வதும்கூட தர்க்கவாத, பகுத்தறி வுக்கு எட்டாத ஒன்றாகும்.

ஒருவேளை அவர் தனது சமூக அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள விரும்பினார் என்று ஒருவர் வாதிடலாம். ஆனால், அவர் ஏற்கனவே மக்காஹ்வில் மிகவும் சக்திவாய்ந்த, மரியாதைக்குரிய ஃகுரைஷிய குலமரபினைச் சார்ந்தவர். உண் மையில், அவர்கள் இறைத்தூதராக பணியினைத் துவங்கியபோது அவரை அருளப்பட்ட செய்தியினைப் பிரகடனம் செய்வதைத்தடுக்கவேண்டும் என்பதற் காக அவருக்கு தலைமை பதவி வழங்கப்பட்டது, ஆனால், அதை அவர்கள் மறுத்துவிட்டார்கள்[8]. அவர்கள் எந்த சமூக அந்தஸ்தையும் விரும்பவில்லை என்பதை இது நிரூபிக்கின்றது.

### இரண்டாவது வாதம்

இறைத்தூதர்கள் அவர்களுக்குஇறைவனிடமிருந்துஅருளப்படும் வேதங்களின் மூலம் ஆதரிக்கப்படுகின்றனர். முஹம்மது (ஸல்) அவர்கள் திருக்ஃகுர்ஆனைக் கொண்டு ஆதரவளிக்கப்பட்டார்கள். பிரிவு 7-ல் கூறப்பட்டுள்ள வகையில், ஃகுர்ஆனை நபியவர்கள் (ஸல்) எழுதியிருக்கமுடியாது, அது நிச்சயமாக அருளப் பட்ட வஹியேயாகும். உண்மையில், நபி எழுதிக்கொண்டது என்று யாரும் கருதினால் அதுபோன்ற எதையும்எழுதிக்காட்டுமாறு திருக்குர்ஆனில் மனிதர் களுக்கு சவால் விடப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, முன்பு குறிப் பிட்டதுபோல, நபியவர்கள் (ஸல்) புத்தகத்தை எழுதும் வகையில் எழத்தறிவுடை யவரல்ல. திருக்ஃகுர்ஆன் நபியவர்களின் (ஸல்) நம்பகத்தன்மையின் நிலை

யான நற்சான்றாகும். உண்மையில், இது நபியவர்கள் உரிமைகொண்டாடும் ஒரே தலைசிறந்த அற்புதமுமாகும்.[9]

**மூன்றாவது வாதம்**

முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு இயக்கத்தைத்தொடங்கினார்கள், அது மனித வரலாற்றில் எந்த ஒரு இயக்கத்தையும்விட மனித நாகரிகத்தை ஆக்கப்பூர்வமான, விரிவான மற்றும் விரைவானமுறையில் மாற்றியமைத்தது. மேலும், இஸ்லாத்தைவிட எந்த மதமும் மனித நாகரிகம் மற்றும் வளர்ச்சியில் தளராத நீடித்த செல்வாக்கினை ஏற்படுத்தவில்லை. மனித நாகரிகத்தின் இந்த விரைவான மற்றும் நீடித்த மாற்றத்தை வஞ்சகரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இயக்கத்தால் அடையவே முடியாது. மீண்டும், இத்தகையசிந்தனை அனைத்து பகுத்தறிவு மற்றும் தர்க்கவாத அடிப்படைகளுக்கும் அப்பாற்பட்டதாகவே உள்ளது.

**நான்காவது வாதம்**

யூத மதம், கிறித்துவம், இந்து மதம் மற்றும் பௌத்தம் ஆகிய அனைத்து முக்கிய மதங்களின்வேதங்களிலும் முஹம்மது (ஸல்) பற்றிய முன்னறிவிப்புகள் உள்ளன.

திருக்ஃகுர்ஆனில் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றி யூத மற்றும் கிறிஸ்தவ வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ளதாக தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

> **அவர்கள் எத்தகையவர்கள் எனில், எழுத்தறிவில்லாத உம்மியான இந்தத் தூதரைப் பின்பற்றுகிறார்கள், அவரைப்பற்றி தங்களுடைய (வேதவசனங்களான) தவ்ராத் மற்றும் இஞ்சீல் வேதங்களில் காண்கின்றனர். (அல்ஃகுர்ஆன் 7:157)**

விவிலிய நூல் 18:18 ல் நாம் காண்கிறோம்:

> **அவர்களுடைய சகோதரர்களுக்கிடையிலிருந்து உன்னைப் போலவே (மூசா அ) ஒரு நபியை நான் எழுப்புவேன், மற்றும் என் அருள்வாக்குகளை அவருடைய வாயில் போடுவேன், நான் அவருக்குக்கட்டளையிடுகின்ற அனைத்தையும் அவர் அவர்களிடம் விளக்கிக்கூறுவார்.**

மூசா (அ) அவர்களுக்குப்பின் வந்த எந்த நபியும் பழைய ஏற்பாட்டின் இந்த வசனத்திற்குப் பொருந்தும் வகையில் முஹம்மது (ஸல்) அவர்களைத் தவிர இருக்கவில்லை: முதலாவதாக, யூதர்களின் சகோதரர்கள் அரேபியர்கள். இஸ்ரவேலர்கள் இஸ்ஹாஃக் (அ) வழியில் வந்தவர்கள், அரபியர்கள் இஸ்மாயீல் (அ) வழியில் வந்தவர்கள். இஸ்ஹாக் மற்றும் இஸ்மாயீல் (அ) இப்ராஹீம் (அ) அவர்களின் மகன்கள், ஆகவே, அவர்களுடைய சந்ததியினரும் சகோதரர்களாவர். இரண்டாவதாக, முஹம்மது (ஸல்) அவர்கள் மூசாவைப் (அ) போன்றவர்,

மாறாக, ஈசா (அ) அவ்வாறில்லை. (1) மூசா (அ) மற்றும் முஹம்மது (ஸல்) இருவருக்கும் ஒரு தந்தையும் தாயும் இருந்தனர். ஈசா (அ) அவர்களுக்கு தாய் மட்டுமே இருந்தார், தந்தை இல்லை. (2) மூசா (அ) மற்றும் முஹம்மது (ஸல்) இருவருமே இயல்பாகவே தங்கள் தாய்மார்களின் வயிற்றில் கருத்தரிக்கப்பட் டனர். ஈசா (அ) அவர்கள் தனது தாயின் வயிற்றில் ஒரு அற்புதத்தின் வடிவ மாகவே கருத்தரிக்கப்பட்டார். (3) மூசா (அ) அவர்களும் முஹம்மது (ஸல்) அவர்களும் திருமணம் செய்துகொண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர், ஈசா (அ) அவ்வாறு செய்யவில்லை. (4) மூசா (அ) மற்றும் முஹம்மது (ஸல்) தத்தம் மக்களுக்காகப் புதிய சட்டங்களையும் விதிமுறைகளையும் கொண்டு வந்தனர், ஈசா (அ) அவ்வாறில்லை. (5) மூசா (அ) மற்றும் முஹம்மது (ஸல்) இருவரும் இயற்கையான மரணம் அடைந்தனர். இஸ்லாமிய மற்றும் கிறித் துவ நம்பிக்கைகள் இரண்டிலும், ஈசா (அ) அவர்கள் இயற்கையான முறை யில் இந்த பூமியை விட்டுப்பிரியவில்லை. மூன்றாவதாக, திருக்ஃகுர்ஆனில் (53:3-4) நமக்கு அறிவிக்கப்பட்டுள்ள வகையில், முஹம்மது (ஸல்) அவர்கள் தன் புறமாகவே எதையும் கூறவில்லை, மாறாக, அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் நேரடியாகவே வஹியாகவோ இறைவன் புறமான அகத்தூண்டுத லாகவோ அருளப்பட்டவையாகும்.

புதிய ஏற்பாடு பொருத்தவரையில், யோவானுடைய நற்செய்தியில் நாம் காண்பது:

> **நான் உங்களிடம் சொல்லவேண்டியது இன்னும் பல விஷயங்கள் உள்ளன, ஆனால், இப்போது அவற்றை உங்களால் பற்றிப்பிடித்துக் கொள்ளமுடியாது. எனினும், சத்திய ஆவியானவர் வரும்போது, அவர் உங்களை எல்லா உண்மைகளின்பால் வழிநடத்துவார், ஏனென்றால், அவர் தன்புறமாக எதையும் பேசமாட்டார், மாறாக, என்ன சொல்லப்படுமோ, அதனைக்கேட்டு அவர் பேசுவார், வரவிருக் கும் விஷயங்களைக் காண்பிப்பார். அவர் என்னை மகிமைப்படுத்து வார், ஏனென்றால், அவர் என்னுடைய செய்தியும் பெறுவார், அதனை உங்களுக்கும் காண்பிப்பார். (யோவான் 16:12-14)**

இந்த வசனங்கள் தன்புறமிருந்து எதையும் பேசாத 'சத்திய ஆவியானவர்' பற்றி மீண்டும் பேசுகின்றன. சத்திய ஆவியானவர் பரிசுத்த ஆவியாக இருக்க முடியாது, ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் ஏற்கெனவே இயேசுவிடம் இருந்தார் (லூக்கா 4:1 மற்றும் 3:22, யோவான் 20:22, அப்போஸ்தலர் 2:4, போன் றவை). மேலும், இந்த சத்திய ஆவி ஈசா (அ) அவர்களை மகிமைப்படுத்துவார். ஈசாவுக்கு (அ) பின் வந்து அவரை மகிமைப்படுத்திய இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைத்தவிர வேறு யாருமில்லை (பார்க்க, பிரிவு 11). ஈசாவுக்கு (அ) பின் வரவிருந்த அந்த 'சத்திய ஆவி' முஹம்மது (ஸல்) என்பதில் சந் தேகம் இல்லை.



**இஸ்தான்புல் நகரின் Minarets Skyline எனப்படும் ஆசியபகுதியின் வான் விளிம்பு.**

மேலும், பைபிளில் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப்பற்றி ஏசாயா 29:12, யோவான் 14:16, யோவான் 16:7, மத்தேயு 21:43 மற்றும் அப்போஸ்தலர் 3:22 ஆகியவற்றில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவிலிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆறுதலாளர்' 'Paracletos' எனும் கிரேக்க சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இந்தச்சொல் Periclytos எனும் கிரேக்க சொல்லின் உருத்திரி பாகும், இது 'புகழப்பட்டவர்' அல்லது அரபிமொழியில் 'அஹ்மத்' அல்லது 'முஹம்மது'[10]

கவனமான, முற்சார்பற்ற ஆய்வு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இந்து மற்றும் புத்தமத வேதங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ளார் என்பதைக்காட்டுகின்றது. "இந்து வேதங்களில் முஹம்மது" என்ற தனது நூலில்டாக்டர் வேத்பிரகாஷ் உபாத்யாய இந்து வேதங்களில் நபியவர்களைப்பற்றிய பல குறிப்புகளை வெளிட்டுள்ளார். வேதங்கள் வரவிருக்கும் ஒரு முனிவரைப்பற்றி கூறும் குறிப்புகள் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முழுதும் பொருந்தக்கூடிய வகையில் இருக்கின்றன. சமஸ்கிருத மொழியில் உள்ள அவரைப்பற்றிய விளக்கம் பின்வருமாறு:

1. 'பாராட்டப்படுபவர்' என்று பொருள்தரும் நரசக்ஷ எனும் சொல் நபிகள் நாயகத்தின் (ஸல்) அஹ்மது மற்றும் முஹம்மது ஆகிய இரு பெயர்களைக் குறிக்கின்றன. மேலும், பிறப்பிடம் மற்றும் குணங்களும் நரஷாக்சாவின் குணங்களோடு சரியாகப் பொருந்துகின்றன.

2. அன்த்திம் ரிஷி அல்லது 'இறுதி முனிவர்'. முஹம்மது (ஸல்) அவர்கள்தான் மனித குலத்தின் இறுதித்தூதர்.

3. கல்கி அவதாரம், அவர்தான் மனித இனத்தின் இறுதித்தலைமுறையினருக்காக வரும் முனிவர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அனைவருக்கும் இறுதித் தூதராக அனுப்பப்பட்டார்.

4. கவ்ரம், என்றால் குடியேறியவர். முஹம்மது (ஸல்) மதீனாவில் குடியேறியவர், (பார்க்க பிரிவு 4).

5. அவருடைய தந்தை "வைஷ்ணுவேஷ்", அதாவது "இறைவன் அடிமை" என்றும், அவருடைய தாயார் "சுமதி" அதாவது "அமைதி" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த இரண்டு பெயர்களும் அரபியில் 'அப்துல்லா' மற்றும் 'ஆமினா' நபிகள் நாயகத்தின் (ஸல்) தந்தை மற்றும் தாயாரின் பெயர்களுடன் ஒத்திருக்கின்றன.

6. வரவிருக்கும் முனிவரின் பெயர் மமஹா. இது சமஸ்கிருத சொல் அல்ல, ஆனால், முஹம்மது (ஸல்) என்ற அரபியப் பெயரின் சமஸ்கிருத வடிவமாகத் தெரிகிறது.

புத்த வேதத்தில் கவுதம புத்தர் அன்த்திம் புத்தா அல்லது கடைமுடிவான முனிவரின் வருகையைப்பற்றி ஒரு தீர்க்கதரிசனத்தைக் கொடுத்தார், அவருடைய பெயர் மைத்ரேயா. (காரஸ் புத்தரின் நற்செய்தி, பக்கம் 217). மைத்ரேயா எனும் சொல்லின் விளக்கம் முஹம்மது (ஸல்) எனும் விளக்கத்திற்குப் பொருந்துகின்றது:

1. முஹம்மது நபி (ஸல்) இறுதித்தூதர், கடை முடிவான முனிவர்.

2. மைத்ரேயா என்றால் 'கருணையுள்ளவர்' என்று பொருள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் திருக்ஃகுர்ஆனில் (21:107) அகிலங்களிலுள்ளவர் அனைவர் மீதும் கருணையுடயவர் என விவரிக்கப்பட்டுள்ளார்.

3. மைத்ரேயா ஒரு புத்தரின் அனைத்து குணாதிசயங்களையும் பெற்றிருப்பார்: அவர் ஒரு சான்றோர் குடும்பத்திலிருந்து வருவார், ஒரு குகையின் ஒதுங்கிடத்தில் இருப்பார், அங்கே வானவர்கள் வருவார்கள், அவர்களுக்கு மனைவியும் குழந்தைகளும் இருப்பார்கள், வாழ்வாதாரத்திற்காக வேலை செய்வார், மேலும், தனது வாழ்க்கையை இயல்பாகவே முடித்துக்கொள்வார், அதாவது இயற்கையான மரணத்தை அடைவார். இந்த விளக்கம் அனைத்தும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பொருந்துகின்றது.

4. மைத்ரேயா ஒரு ஆட்சியாளராக இருப்பார். முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு நபிமட்டுமல்ல, முஸ்லிம் தேசத்தின் ஆட்சியாளராகவும் இருந்தார்.

5. முந்தைய புத்தர்களைப் பற்றி மைத்ரேயா பேசுவார். முஹம்மது (ஸல்) முந்தைய தூதர்களைப்பற்றி விரிவாகப் பேசியுள்ளார்கள். முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னால் வந்த இருபத்து நான்கு நபிகளின் வரலாற்றினை ஃகுர்ஆன் குறிப்பிடுகின்றது.

6. மைத்ரேயாவுக்குஉலகில்ஆசிரியர் எவரும் இருக்கமாட்டார். முஹம்மது (ஸல்) எழுத்தறிவற்றவர், உலகில் அவருக்கு ஆசிரியரே இல்லை. அவரு

டைய அறிவுத்திறன் முழுதும் இறைவனிடமிருந்து வஹியின் மூலம் பெறப்பட்டது.

சுருக்கமாக, நபியவர்களின் நற்சான்று அவர்களுடைய உன்னதமான குணங்கள், அவர்கள் கொண்டுவந்த நற்செய்தி, அவர்களுடைய இயக்கத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மனித நாகரீகத்தின் தொடர்ச்சியான மாற்றம் மற்றும் அனைத்து முக்கிய மதங்களின் வேதங்களில் காணப்படும் அவரது வருகையினைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்.



மதீனாவிலுள்ள நபியவர்களின் மஸ்ஜித் (மஸ்ஜித் அந்-நபவி). இந்த மஸ்ஜித் கி.பி 622 ஆம் ஆண்டில் நபியவர்களால் (ஸல்) அவர்களுடைய இல்லத்தை ஒட்டிய நிலத்தில் கட்டப்பட்டது. பல ஆண்டுகளாகத் தொடர்ந்த பல விரிவாக்கங்களுக்குப்பிறகு, இன்று அது உலகின் மிகப்பெரிய மஸ்ஜிதுகளில் ஒன்றாகத் திகழ்வதோடு, மக்காஹ்விலுள்ள (மஸ்ஜித் அல்-ஹராம்) மகத்தான மஸ்ஜிதுக்குப் பிறகு இரண்டாவது புனிதமான மஸ்ஜிதாகும்.

# திருக்ஃகுர்ஆனின் வரலாறு மற்றும் செய்தி

ஃகுர்ஆன் என்பது முஹம்மது நபி (ஸல்) அவர்கள்மீது அல்லாஹ் அவனுடைய வானவரான ஜிப்ரீல் (அ) மூலம் இறக்கியருளிய வேதமாகும். இது அல்லாஹ்வின் புறமானமனிதர்களுக்குஅருளப்பட்ட காலத்தின் முடிவுவரைக்கான இறுதி வஹியாகும். ஃகுர்ஆன் மனிதகுலத்திற்கு அல்லாஹ்வின் நற்செய்திகளை நிறைவு செய்யும், முன்பு அருளப்பட்ட வேதங்களை உறுதிப்படுத்தும் மற்றும் முந்தைய வேதங்களின் வசனங்களில் காணப்பட்ட மாற்றங்கள், திருத்தங்களை சரிசெய்வதற்கும் அருளப்பட்டது.[11]

## அது வஹியின் மூலம் அருளப்படுதல்

திருக்ஃகுர்ஆன் அரபிமொழியில் 23 ஆண்டுகளில் கி.பி. 610 முதல் கி.பி. 632 வரையிலான காலக்கட்டங்களில் வஹியின் மூலம் அருளப்பட்டது. குறிப்பிட்ட சூழ்நிலை, தேவைகளுக்குக்கேற்ப நபியவர்களுக்கு படிப்படியாக வஹியாகஅருளப்பட்டது விசுவாசிகளுக்குமுற்போக்கான வழிகாட்டலைக் கொடுத்தது. விசுவாசிகளின் வாழ்க்கையில் அல்லாஹ்வின் சட்டங்களை திறம்பட ஒருங்கிணைப்பதையும் செயல்படுத்துவதையும் இது உறுதி செய்தது.

## அதன் எழுத்து வடிவிலான பதிவு மற்றும் பாதுகாப்பு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஹியின் மூலம் வசனங்கள் அருளப்பட்டபின் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவஹியின் எழுத்தர்களுக்கு தன்னுடைய அறிவுறுத்தல் மற்றும் மேற்பார்வையின்கீழ் எழதிவைக்குமாறு கட்டளையிடுவார்கள். அதேநேரத்தில், நபி (ஸல்) மற்றும் அவருடைய பல தோழர்கள், ஆண்களும் பெண்களும், வசனங்களை மனனம் செய்துகொள்வார்கள். இவ்வகையில், ஃகுர்ஆன் நபியவர்களின் வாழ்நாளிலேயே ஆண் மற்றும் பெண் விசுவாசிகளால் எழுதப்பட்டும் மனனம் செய்யப்பட்டும் வந்தது. ஃகுர்ஆனை மனணம் செய்யும் இந்த வழக்கம் இன்றுவரையும் தொடர்கிறது. இஸ்லாமிய வரலாற்றில் எந்தக்காலக்கட்டத்திலும் திருக்ஃகுர்ஆன் முழுவதையும் அதன் மூல உரையில் மனனம் செய்த இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் காணக் கிடைப்பார்கள். இன்று ஒரு மதிப்பீட்டின்படி முழு குர்ஆனையும் மன்னம் செய்துள்ள இருபது மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்களும், ஃகுர்ஆனின் சில பகுதிகளை மட்டும் மனனம் செய்துள்ள இலட்சக்கணக்கானவர்களும் உள்ளனர்.

## அதன் உட்பொருள் மற்றும் பொதுவான தலைப்புகள்

திருக்ஃகுர்ஆனில் 114 அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்திலுமுள்ள வசனங்களின் எண்ணிக்கை 3 வசனங்களிலிருந்து (அத்தியாயங்கள் 103 மற்றும் 108) 286 வசனங்கள்வரை உள்ளன (அத்தியாயம் 2). ஃகுர்ஆன் வழிகாட்டுதல்கள், எச்சரிக்கைகள் மற்றும் நற்செய்திகளும், அத்துடன் கடந்தகால சமூகங்கள் மற்றும் அவர்களிடையே அனுப்பப்பட்ட நபிமார்களின் வரலாற்றுக் குறிப்புகளைக்கொண்ட வேதமாகும். பொதுவாக, இது நான்கு கருப்பொருள்களை

உள்ளடக்கியதாக உள்ளது.

**முதலாவது**, அது அல்லாஹ்வைப்பற்றியும் அவனுடைய இயல்புகள் மற்றும் இயற்பண்புகளை எடுத்துரைக்கின்றது. உதாரணமாக, இந்த வேதத்தின் பிரிவு 2, அத்தியாயம் 112 இல் அவனுடைய ஏகத்துவம் (தவ்ஹீத்) மற்றும் வேறு எந்த உயிரினமும்பகிர்ந்துகொள்ளமுடியாத அவனுடைய தனிப்பெரும் இயற் பண்புகள் விவரிக்கப்பட்டுள்ளதைக் கண்டோம். கீழ்க்காணும் சிம்மாசனத்தின் வசனம் எனப்படும் (அரபியில் ஆயதுல் குர்சி) அல்லாஹ்வின் இயற்பண்பு களை விவரிக்கும் மற்றொரு எடுத்துக்காட்டாகும்:



அல்லாஹ் நித்திய ஜீவன், முழு பிரபஞ்சத்தையும் காத்துப்பேணுபவன், அவ னைத்தவிர வேறுஇறைவனில்லை. சிற்றுறக்கமோ தூக்கமோ அவனைப்பிடிப் பதில்லை. வானத்திலும்பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுடையவையே. அவன் அனுமதியின்றி அவனுடைய திருமுன் எவர்தான் பரிந்துபேச முடியும். அவர்களுக்கு முன்னாலிருப்பவற்றையும் பின்னால் மறைவாக இருப்பவற்றை யும் அவன் நன்கறிவான். அவன் நாடினாலன்றி அவனுடைய ஞானத்திலி ருந்துளதையும் எவரும் அறிந்துகொள்ளமுடியாது. அவனுடைய ஆட்சி வானங் களிலும் பூமியிலும் பரந்து நிற்கின்றது, இவற்றை பாதுகாப்பது அவனைச் சோர்வடையச் செய்வதில்லை. மேலும், அவன் மிக்க உயர்ந்தவனும், மகத்து வம் மிக்கவனுமாய் இருக்கின்றான். (அல்குர் ஆன் 2:255)

**இரண்டாவது**, அது முதலில் அல்லாஹ்வுடனான நமதுஉறவை விவரிக்கிறது; அவன் நம்மை ஏன் படைத்தான் மற்றும் அவன்பால் நம்முடைய கடமைகள் என்ன? உதாரணமாக, அல்லாஹ் திருக்ஃகுர்ஆனில் கூறுகிறான் (அல்குர்ஆன் 51:56)

> **நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னையே வணங்கி வழிபட வேண்டும் என்பதற்காக மட்டுமே படைத்தேன்.**

இங்கே 'வழிபாடு' என்ற சொல் படைப்பாளனுக்குக் கீழ்ப்படிவது மற்றும் அவனுடைய கட்டளைகளின்படி வாழவேண்டும் என்பதாகும். ஃகுர்ஆன்மற்ற படைப்புகளான வானவர்கள், ஜின்கள், விலங்குகளின் உலகம், மற்றுமுள்ள இயல் உலகத்துடனான நம்முடைய உறவை விவரிக்கிறது. நம்முடைய வாழ்க்கையுடனான பின்னிய தொடர்பின் பொருத்தம்தான் என்ன?[12]

**மூன்றாவது**, இது வழிகாட்டுதல்களை சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளின் வடிவத்தில் அளிப்பதோடு ஒழுக்கநெறி மற்றும் நல்ல வாழ்க்கைக்கான தரக் கோட்பாடுகளை அமைத்துத்தருகிறது, அல்லாஹ்வை நாம் எவ்வாறு வணங்க வேண்டும், நம்முடைய வாழ்க்கையை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் ஆகியன. வழிகாட்டுதல்களைப் பின்பற்றுபவர்களுக்கு நிரந்தரப் பேரின்ப வாழ்க்கையும் மற்றும் வழிகாட்டுதல்களை நிராகரிப்பவர்களுக்குநிரந்தர வேதனைகளும் உண்டு என்பதற்கான உறுதியளிக்கின்றது.[13]

**இறுதியாக**, மனித இனத்தின் அனைத்து சமூகங்களும் இறைத்தூதர்கள் மூலம் வழிகாட்டுதல்களைப் பெற்றுள்ளன என்று ஃகுர்ஆன் நமக்குச் சொல்கின்றது. உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான் (அல்குர்ஆன் 10:47),

> **ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு தூதர் அனுப்பப்படுகிறார், அவர்களுடைய தூதர்வரும்போது, அந்த மக்களின் விதி முழுமையான நீதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது, அவர்கள் எந்த முறைகேட்டிற்கும் ஆளாக்கப்படுவதில்லை,**

ஆகவே, மனிதகுலத்திற்கு ஒரு படிப்பினையாக திருக்ஃகுர்ஆன் கடந்த கால சமூகத்தினருடன் அல்லாஹ் எவ்வாறு நடந்துகொண்டான் என்ற வரலாற்றினை எடுத்துரைக்கின்றது. உதாரணமாக, நூஹ் (அ) தனது மக்களுடன் நடத்திய போராட்டம் மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட வெள்ளத்தைப்பற்றிக் கூறுகின்றது. மூசா (அ) தன்னுடைய மக்கள் மற்றும்பிர்அவ்னுடன் நடத்திய போராட்டத்தைப் பற்றியும் நமக்குக் கூறுகின்றது. அத்துடன், அழகிய முறையில் எடுத்துரைக்கப்பட்ட யூசுஃப் (அ) அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவம். மொத்தத்தில், மனித சமூகத்தினருக்கு பல்வேறு காலங்களில் அல்லாஹ் அனுப்பிய ஆயிரக்கணக்கான நபிமார்களில் திருக்ஃகுர்ஆன் 25 நபிமார்களின் வரலாற்றினை மட்டுமே விவரிக்கின்றது.[14]



**திருக்ஃகுர்ஆனை ஓதுவது இஸ்லாத்தில் ஒரு வழிபாட்டுச்செயலாகும். இவ் வகையில் திருக்ஃகுர்ஆன் இன்று உலகிலேய மிக அதிகமாக ஓதப்படும் நூலாகும்.**

## நவீன அறிவியலுடன் திருக்ஃகுர்ஆனின் ஒத்தியல்பான தன்மை

திருக்ஃகுர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அருளப்பட்டது. ஆயினும் கூட, சமீப காலங்களில் நவீன விஞ்ஞான, அறிவியல் ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட பல அறிவியல் உண்மைகளை நாம் அதில் காண்கிறோம். இந்த உண்மைகள் வானியல், புவியியல், இயற்பியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் பல்வேறு இயற்கை அறிவியல் துறைகளில் பலவற்றை உள்ளடக்கியது. சில எடுத்துக்காட்டுகளை இங்கே ஆராய்வோம்.

# பிரபஞ்சத்தின் படைப்பு

திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் (அல்குர்ஆன் 21:30),

> **நிராகரிப்பவர்கள் இதனை சிந்தித்துப்பார்க்க வேண்டாமா, வானங்கள் பூமி அனைத்தும் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன, பிறகு நாம் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தோம். ஒவ்வொரு உயிரினத்தையும் தண்ணீரிலிருந்து நாம் படைத்துருவாக்கினோம். (நமதுஇந்தப் படைப்புத்திறனை) இம்மக்கள் இன்னும் நம்பிக்கை கொள்ளமாட்டார்களா?**

மேலும், கீழ்காணும் வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான் (அல்குர்ஆன் 51:47),

> **வானத்தை நாம் நம் வலிமையினால் படைத்துள்ளோம். மேலும், அதனை நாம் விரிவுபடுத்தவும்செய்வோம் (அல்லது அதன் பரப்பை அதிகரிக்கவும் செய்வோம்).**

இந்த வசனங்கள் நவீன அறிவாற்றல்களுக்கு ஏற்ப உள்ளன, பிரபஞ்சம் ஒரு வளியுருவான ஒன்றாகவே தொடங்கியது, பின்னர் அது வெடித்து விண்மீன் திரள்களை உருவாக்கியது. இதனை Big Bang theory என்றழைக்கப்படுகிறது. மேலும், அந்த முதல் வெடிப்பிலிருந்து நமது பிரபஞ்சம் இன்னும் விரிவடைந்துகொண்டு தான் இருக்கிறது என்பதை நவீன அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன



**அல்லாஹ்வின் படைப்பிலுள்ள பில்லியன் கணக்கான விண்மீன் திரள்களில் ஒன்று Andromeda Galaxy வடமீன்குழு. இது பாரசீக வானியலாளர் அப்துர் ரஹ்மான் அல்-சூஃபி என்பவரால் கி.பி 964 இல் கண்டுபிடிக்கப்பட்டது.**

# கருவின் வளர்ச்சி

கருவின் முதிராநிலையான குழந்தையின் வளர்ச்சி திருக்ஃகுர்ஆனில் பல இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது, உதாரணமாக,

**மனிதனை நாம் களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம் பின்னர் நாம் அவனைப் பாதுகாப்பான இடத்தில் ஒருதுளி விந்தாக ஆக்கி னோம். பின்னர் விந்தணுவை இரத்தக்கட்டியாக மாற்றினோம்; அந்த உறைவிலிருந்து நாம் ஒரு (கரு) கட்டியை உருவாக்கினோம்; பின்னர் அந்த சதைக்கட்டியை எலும்புகளாக உருவாக்கினோம், பின்னர் அவ் வெலும்புகளை சதையால் போர்த்தினோம்; பிறகு, அதனை நாம் முற் றிலும் வேறொரு படைப்பாக வளரச்செய்தோம். ஆகவே, அல்லாஹ் பெரும் பாக்கியமுடையோனாவான் படைப்பாளர்களிலெல்லாம் மிகச் சிறந்தவன் (அல் ஃகுர்ஆன் 23: 12-14).**

இந்த வசனங்கள்கருவின் வளர்ச்சியைத்தொடக்கத்திலிருந்தே, குறிவரை மூல மாகவும் அரபி சொற்களைக்கொண்டு துல்லியமாகவும் விவரிக்கின்றன. முத லில், கருவுற்ற கருமுட்டை உறைந்த இரத்தக்கட்டியாக (ஃஅலஃகஹ்துன்) உருவாகிறது, பின்னர், அது ஒரு கட்டியாக (முஜ்த்க்ஙதுன்) உருவாகிறது. அதன் பிறகு, அக்கட்டியில் எலும்புகள் உருவாக ஆரம்பித்து, இறுதியாக, சதை எலும்பு களைச்சுற்றிவளரத்தொடங்குகிறது. குழந்தையின் வளர்ச்சியை திருக்ஃகுர்ஆன் இவ்வாறு விவரிக்கின்றது.

ஃகுர்ஆன் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அலஃகதுன் மற்றும் முஜ்த்க்ஙதுன் ஆகிய இரு அரபி சொற்களும் அவற்றின் துல்லியத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க வையாகும்.

உறைந்த இரத்தத்தைத்தவிர, அலஃகதுன் 'ஒட்டிக்கொண்டிருக்கும் ஒன்று' மற்றும் 'ஒட்டுணி போன்ற பொருள்' என்பதைக்குறிக்கும். ஆரம்பக்கட்டத்தில் நாம் கருவை ஆராய்ந்தால், அது கருப்பையின் சுவரில் ஒட்டிக்கொண்டிருப்பதைக் காணமுடியும், அது மிதப்பதில்லை. இது ஒட்டுணிபோன்று தென்படும்.¬ஒட்டுணி என்பது ஒரு உயிரினம், இது தோலில் ஒட்டிக்கொண்டு ஒரு விலங்கின் இரத் தத்தை உறிஞ்சும். கருவும் நச்சுக்கொடி வழியாக தாயிடமிருந்து இரத்தத்தைப் பெறுகிறது.

அலஃகதுன்பின்னர் முஜ்த்க்ஙதுன் ஆக உருவாகிறது, அதன் பொருள் 'சவைத்த மாமிசக்கட்டி'. ஃஅலஃகஹ் விற்குப்பிறகு அடுத்தக்கட்டமாக கருவை ஆராய்ந் தால், அது பற்களின் அடையாளங்களுடன் மெல்லப்பட்ட பசைபோல் இருப்பதை நாம் காணலாம்.

இது திருக்ஃகுர்ஆனில் ஏழாம் நூற்றாண்டில் கொடுக்கப்பட்ட கருவின் வளர்ச் சியைப்பற்றிய ஒருஅற்புதமான சித்தரிக்கப்படும் விளக்கமாகும். 19 ஆம் நூற் றாண்டில் நிழலுருவப்படுத்திக்காட்டும் உபகரணங்கள் கண்டுபிடித்த பின்னரே

விஞ்ஞானிகள் இந்த வடிவங்களை உறுதிப்படுத்த முடிந்தது.

திருக்ஃகுர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், கரு இருளின் மூன்று திரைகளால் பாதுகாக்கப்படுகின்றது. ஃகுர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் (அல்குர்ஆன் 39:6):

> **அவன் உங்களை, உங்கள் தாய்மார்களின் வயிற்றில், இருளின் மூன்று திரைகளில், ஒன்றன்பின் ஒன்றாக, வடிவம்கொடுத்து உருவாக்குகிறான்.**

நவீன தொழில்நுட்பத்தின் மூலம், கரு முதலில் தாயின் வயிற்றுச்சுவராலும், இரண்டாவதாக கருப்பை சுவராலும், மூன்றாவதாக கருவை சுற்றியுள்ள amnio-chorionic membrane எனப்படும் புறத்தோலின் சவ்வினால் பாதுகாக்கப்படுகிறது என்பதை இப்போது அறிகின்றோம் இந்த மூன்று திரைகள், திருக்ஃகுர்ஆனில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களின் துல்லியத்தை மீண்டும் நிரூபிக்கின்றன.






**இடதுபுறத்தில் உள்ள படம் முஜ்த்க்ஙதுன் கட்டத்திலுள்ள கருவைக் காட்டு கிறது, இது மிகவும் மென்றுவிட்ட அதுக்கும் சவ்வுபோல் தெரிகிறது. வலது புறத்திலுள்ள படம் கருப்பையிலுள்ள கருமுட்டை கருப்பையின்சுவரில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது மற்றும் இது மூன்று அடுக்குகளால் பாதுகாக் கப்படுகிறது.**

# மலைகளின் செயல்பாடு

மலைகள் பூமியின் மேற்பரப்பில் மிகவும் கவர்ச்சியூட்டும் மற்றும் கண்கவரும் வகையிலான ஏற்ற இறக்கங்களை நாம் காண்கிறோம். ஆனால், உண்மை யில், அவை பூமியின் மேலோட்டின் ஸ்திரத்தன்மையை பராமரிப்பதில் மிக முக்கியமான பங்காற்றுகின்றன. பூமியின் மேலோட்டிற்குக் கீழே ஒரு அடுக்கு உள்ளது, அது குறைந்த அடர்த்தியுடையதுமட்டுமல்லாது திரவமாகவும் இருக் கிறது, எனவே, மேலோடு அதே இடத்தில் வைத்திருக்கவும் நிலையானதாக வைத்திருக்கவும் ஏதாவது ஒன்று தேவைப்படுகின்றது. பூமியின் மேலோட்டை நிலையானதாக வைத்திருப்பவை மலைகள் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ளனர், அவை பூமியின் மேலோட்டிற்கு மேலே சிகரங்களையும் பூமியின் மேலோட்டிற்கு கீழே வேர்களையும் கொண்டுள்ளன. இவ்வகையில், மலைகள் ஆப்புகளைப்போன்று செயல்படுகின்றன.

அல்லாஹ் திருக்ஃகுர்ஆனில் கூறுகின்றான் (அல்குர்ஆன் 21:31),

> **மேலும், பூமியில் நாம் மலைகள் ஊன்றி வைத்துள்ளோம், அவர் களோடு அது (பூமி) சாய்ந்துவிடாமலிருப்பதற்காக.**

78 ஆம் அத்தியாயத்தில் 6 மற்றும் 7 ஆம் வசனங்களில் அல்லாஹ் கூறுகின் றான்:

> **நாம் பூமியை ஒரு பரந்த விரிப்பாகவும், மலைகளை முளைகளாகவும் ஆப்புகளாகவும் ஆக்கியிருக்கவில்லையா?**

மலைகளின் செயல்பாடு குறித்த இந்த வசனங்கள் நவீன அறிவியல் அறிவு டன் முழுமையான உடன்பாட்டில் உள்ளன. மலைகள் வேர்களைக்கொண்டுள் ளன என்ற கோட்பாடு 1865 ஆம் ஆண்டில் உருவானது, மேலும், இந்த வேர்கள் பூமி மேலோட்டினை உறுதிப்படுத்துகின்றன. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் அறியப்பட்டது.[15]




**பூமி கவசத்தில் மலையின் வேர்ஆழமாகப் பதிந்திருப்பதைக்காட் டும் விளக்கப்படம்.**

# தண்ணீர்தான் வாழ்க்கை

நீர்தான் வாழ்வின் ஆதாரம் என்பது பொதுவான அறிவு, இருப்பினும், திருக்ஃகுர்ஆன் அதையும் தாண்டி ஒவ்வொரு உயிரினமும் தண்ணீரினால் ஆனது என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. மேற்கோள் காட்டப்பட்ட வசனத்தைத்தவிர (அல்குர்ஆன் 21:30), வச னம் 25:54 பார்ப்போம்.

**மேலும், அவன்தான் மனிதனை தண்ணீரிலிருந்து படைத்தான். பின்னர், வம்ச உறவின் மூலமாகவும் திருமணத்தொடர்பின் வாயிலாகவும் உறவுகளை ஏற்படுத்தினான்.**

ஒரு உயிரணுவின் 80% பகுதி நீரினால் ஆனது என்பதும், அனைத்து உயிரினங்களும் குறைந்தது 50% நீரைக் கொண்டிருக்கின்றன என்பதும் இப்போது நன்கு உறுதியாகிவிட்ட உண்மையாகும். மேலும், நாம் அனைவரும் அறிந்த வகையில், எல்லா உயிரினங்களுக்கும் அவை உயிர்வாழ்வதற்கு தண்ணீர் தேவைப்படுகிறது.

மேற்கண்ட அறிவியல் சார்ந்த அறிக்கைகள் 1400 ஆண்டுகளுக்கு முன்பாகவே வானியல், இயற்பியல், உயிரியல் பற்றிய அறிவு மக்களிடையே மிகக் குறைவாகவே இருந்த காலத்தில் ஃகுர்ஆனில் கூறப்பட்டுள்ள பல கூற்றுகளில் சிலவையே, ஆனால், அவை நவீன அறிவியலுடன் முழுமையான உடன்பாட்டில் உள்ளன, இருப்பினும் அவற்றில் பெரும்பாலானவைவிஞ்ஞான அறிவின் முன்னேற்றங்கள் காரணமாக கடந்த நூற்றாண்டில் மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[16]



தண்ணீர்தான் வாழ்க்கை: மாறிவரும் உலகளாவிய வானிலைப்பாங்கு மற்றும் அதன் விளைவாக ஏற்படும் மழையின் பற்றாக்குறை ஆகியவை உலகின் பல பகுதிகளிலும் விலங்கு மற்றும் தாவர வாழ்க்கைப்பாங்கினை அழித்துக்கொண்டிருக்கின்றனன.

# திருக்ஃகுர்ஆனின் நம்பகத்தன்மை

திருக்ஃகுர்ஆன் உண்மையில் இறைவனிடமிருந்து வஹியாகப் பெறப்பட்டதா? இது ஒரு நியாயமான கேள்வி, ஏனென்றால் இன்று உலகில் ஒன்றுக்கொன்று முரண்படும் பல வேதங்கள் உள்ளன, இருப்பினும் அவை அனைத்துமே இறைவ னிடமிருந்து வந்தவை என்று கூறிக்கொள்கின்றனர். இந்த கேள்வியின் தொடர்ச்சியாக சிலர் கேட்கலாம்: ஃகுர்ஆன் யுகங்களாகவே மாற்றப்படவில்லை என்பதை நாம் எவ்வாறு உறுதியாக நம்புவது?

இந்த கேள்விகளுக்கான பதில்கள் திருக்ஃகுர்ஆனிலேயே காணப்படுகின்றன, இது உண்மையான மூன்று அளவுகோல்களை வழங்குகிறது.

## முதல் கட்டளைவிதி

இறைவனிடமிருந்து உண்மையானவஹி அருளப்படுவது முற்றிலும் சீரானது, முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. திருமறையில் அல்லாஹ் கூறுகிறான் (அல்குர்ஆன் 4:82),

> **அவர்கள் ஃகுர்ஆனைப்பற்றி (கவனத்துடன்) சிந்திப்பதில்லையா? இது இறை வனைத்தவிர வேறு யாரிடமிருந்தும் வந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக அதில் அதிக முரண்பாட்டினைக் கண்டிருப்பார்கள்.**

முரண்பாடுகள் அல்லது பிழைகள் உள்ள எந்த வேதமும் இறைவனிடமிருந்து இருக்கமுடியாது. திருக்ஃகுர்ஆன் எந்த முரண்பாடுகள் அல்லது எதிர்மறையான வற்றிலிருந்தும் அப்பாற்பட்டது. எந்தவொரு மனிதர்களின் கையால் இது காலங் காலமாக மாற்றப்படவில்லை என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. ஃகுர் ஆனின் சில விமர்சகர்களால் பெரும்பாலும் மேற்கோள் காட்டப்படும் வெளிப் படையான முரண்பாடுகள் ஃகுர்ஆன் அருளப்பட்ட அரபிமொழியைப்பற்றிய சரி யான அறிவு இல்லாததாலும், குறிப்பிட்ட வசனங்கள் அருளப்பட்ட பின்னணி யினைப்பற்றிய அறியாமையினாலும் ஏற்பட்டுள்ளன.

## இரண்டாவது கட்டளைவிதி

இறைவனிடமிருந்து வரும் ஒரு உண்மையான வஹி மனித தேவைகளை விரிவாக நிறைவேற்றுவதில் சட்டம், தார்மீக மதிப்புகள் மற்றும் ஆன்மீக வழி காட்டுதல்களோடு வாதத்தின் வலிமை, ஆதாரம், சொல்லாற்றல் மற்றும் பாணி ஆகியவற்றில் மனித ஆற்றல்களை மீறுவதாக இருக்கும். இவ்விஷயத்தில், திருக்ஃகுர்ஆனைப்போனற ஒரு நூலைக்கொண்டுவருமாறு அல்லாஹ் மனித இனத்தினருக்கே சவால்விடுத்துள்ளான். திருக்ஃகுர்ஆன் வசனம் 2:23-24-ல் இறை மறுப்பாளர்களுக்கு அல்லாஹ் சவால் விடுகிறான்.

**நாம் நம் அடியார்மீது (முஹம்மது-ஸல்) இறக்கியருளியதைப் பற்றி (ஃகுர்ஆன்) நீங்கள் சந்தேகத்திலிருப்பீர்களானால், நீங்கள் உண் மையானவர்களாக இருந்தால் இதைப்போன்ற ஒரே ஒரு சூராவை யேனும் (அத்தியாயத்தை) தயாரித்து கொண்டுவாருங்கள், இதற்காக அல்லாஹ்வைத்தவிர உங்களுக்குத் துணைபுரிபவர்கள் (உதவியா ளர்கள்) அனைவரையும் அழைத்துக்கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்களால் அதை ஒருபோதும் செய்ய முடியாது, மனிதர்களையும் கற்களையும் எரிபொருளாக்கொண்ட நரக நெருப்புக்கு அஞ்சுங்கள். இது சத்தியத்தை நிராகரிப்பவர்களுக் காக தயார்செய்யப்பட்டுள்ளது.**

அல்லாஹ் இந்த சவாலை வசனம் 17:88 -ல் மீண்டும் வலியுறுத்துகிறான்,

**கூறும், மனிதர்களும் ஜின்களும் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த ஃகுர்ஆனைப்போன்ற ஒன்றைக்கொண்டுவர முயன்றாலும் இதைப் போன்று அவர்களால் கொண்டுவரமுடியாது, அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே.**

எல்லாம் அறிந்த படைப்பாளன்தான் இந்த சவாலை முன்வைக்க முடியும். எந்தவொரு மனிதனும் ஒரு புத்தகத்தை எழுதி, பின்னர் வேறு யாரும் இதே போன்ற ஒரு புத்தகத்தை எழுதமுடியாது என்று சவாலாகக் கூற முடியாது. மேலும், ஃகுர்ஆன் பல காலங்களாக மனிதர்களால் மாற்றப்பட்டிருக்குமானால், அதைப்போன்ற ஒரு வேதத்தை மக்கள் தயாரித்திருக்க முடியும். கடந்த 1400 ஆண்டுகளாகவே இந்த சவால் இன்றும் சவாலாகவே உள்ளது.

## மூன்றாவது கட்டளைவிதி

இறைவனிடமிருந்து வரும் வஹி காலத்தின் சவால்களை எதிர்கொண்டு, மனித அறிவாற்றல்கள் முன்னேற்றம் கண்டு, மனித தேவைகள் மாறி, வளர்ச்சியடை யும்போதும் பொருத்தமானதாக இருக்கவேண்டும். ஃகுர்ஆன் வழங்கிய சட்டம், நீதி, பொருளாதாரம், சமூக அமைப்புகள் மற்றும் ஒழுக்கப்பண்புகள் ஆகியவை ஃகுர்ஆன் அருளப்பட்ட 1400 ஆண்டுகள் முன்பாக இருந்ததைப்போன்றே இன் றும் பொருத்தமானவையாக உள்ளன. மேலும், பிரிவு 6 இல் குறிப்பிடப்பட் டுள்ள வகையில், திருக்ஃகுர்ஆன் இயற்கை அறிவியலின் நவீன அறிவாற்றல் களின் அனைத்து அம்சங்களுடனும் முற்றிலும் ஒத்திசைவாகவே உள்ளது.

திருக்ஃகுர்ஆன் இறைவனிடமிருந்து அருளப்படாமலிருந்தால் அல்லது மாற்றப் பட்டிருந்தால், அதன் ஒத்திசைவான பொருத்தம் காலப்போக்கில் பாதிக்கப்பட்டி

ருக்கும். மனித அறிவு மற்றும் தேவைகளின் அனைத்து அம்சங்களிலும் ஃகுர்ஆன் என்றென்றும் பொருத்தமானதாகவே இருக்கும்.

இந்த கட்டளைவிதி, ஃகுர்ஆனில் மற்றும் அருண்மொழிகளுடன் சேர்ந்து, மனித தேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் தீவிரமான மற்றும் தொலைநோக்குடனான செல்வாக்கைக்கொண்டுள்ளதோடு, ஃகுர்ஆனின் அற்புதமான இயல்புகளை மெய்ப்பித்து நிரூபிக்கவும் செய்கின்றன. இது முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய ஒரு மகத்தான அற்புதமாகும், இருப்பினும், அவர்களுடைய நபித்துவத்தின் காலத்தில் அல்லாஹ்வின் நாட்டத்தால் பல அற்புதங்களைச் செய்து காட்டியுள்ளார்கள்.




**அத்தியாயம் 7, வசனங்கள் 86-87 திருக்ஃகுர்ஆனின் அசல் கையெழுத்துப்படி (வலது) மற்றும் பிற்காலத்தில் எழுதப்பட்டது (இடது). நபியவர்களின் (ஸல்) காலத்தில், அரபி எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் அல்லது தெளிவான ஒலிக் குறிகளில்லாத (அரபியில் தஷ்கீல் மற்றும் இஃஜாம்) மிக அடிப்படையான வடிவங்களைக்கொண்டிருந்தன. அரபியல்லாத மொழிபேசும் மக்களிடையே இஸ்லாம் பரவிய நிலையில், ஃகுர்ஆனின் தவறான வாசிப்பு மற்றும் உச்சரிப்பு தெளிவாகத் தெரிந்தது. இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்காக நபியவர்களின் (ஸல்) மறைவுக்குப்பின் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு உயிரெழுத்துக்கள் மற்றும் ஒலிக்குறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.**

# நபி (ஸல்) அவர்களின் மரபுகள்

நபி (ஸல்) அவர்களின் மரபுகள் (அரபியில் சுன்னஹ் அல்லது சுனன்), அவர் களுடைய போதனைகள் மற்றும் இறைவனின் அகத்தூண்டுதலால் வழிநடத்தப் பட்ட, நபித்தோழர்கள் வழியாகப் பெறப்பட்ட வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகளா கும் (ஃகுர்ஆன் 53:3), இவை தனித்தன்மையான ஃகுர்ஆனிலிருந்து வேறுபட் டவை, மேலும், அவை திருக்ஃகுர்ஆனுக்குப் பிறகு இஸ்லாமிய போதனை களின் இரண்டாவது முதன்மை ஆதாரமாக இருக்கின்றன.

நபியவர்களின் (ஸல்) வாழ்நாளில் அருளப்பட்டு, பதிவு செய்யப்பட்டும் தொகுக் கப்பட்டும் உள்ள ஃகுர்ஆனைப்போலல்லாமல், மரபுகளும் நபிமொழிகளும் அவர் களுடைய மறைவுக்குப்பிறகுதான் (கி.பி. 632). பதிவு செய்யப்பட்டு பிறகு தொகுக் கப்பட்டன. நபி மொழிகளின் பதிவு நபியவர்களின் (ஸல்) மறைவுக்குப்பின் உடனேயே தொடங்கியது, ஆனால், தொகுப்புகள் 8 ஆம் நூற்றாண்டின் மத்தி யில் தொடங்கி 9 ஆம் நூற்றாண்டில் செழித்தோங்கியது. இவ்வகையில், உதாரண மாக, முஸ்னத் அர்-ரபி பின் ஹபீப் 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொகுக் கப்பட்டது மற்றும் ஸஹீஹ் அல் புக்ஹாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லீம் ஆகி யவை 9 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன.

நபிமொழிகள் பிற்காலத்தில் அறிவிப்பாளர்களின் தொடர் சங்கிலியால் எடுத் துரைக்கப்பட்டுவந்த நிலையில், நபிமொழிகளின் நம்பகத்தன்மையினை நிர்ண யிப்பதற்கான ஒரு விரிவான வழிமுறை உருவானது. அறிவிப்பாளர்களின் தொடர்சங்கிலி, நபிமொழிகளின் வாசகங்கள் மற்றும் குறிப்பிட்ட நபிமொழிகள், நிகழ்வுகளின் பின்னணியாகக் கூறப்படுபவை ஆகியவற்றை இந்த முறை கூராய்வு செய்தது. இந்த வழிமுறையின் மூலம், நபிமொழிகள் நம்பகத்தன் மைக்கான பலவேறு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன. இந்த அங்கீகார முறை (அரபியில் இஸ்னாது) உண்மையான நபிமொழிகளில் கலந்துவிட்ட பொய்யான நபிமொழிகளை உறுதிசெய்து நீக்க இன்றும் பயன்படுத்தப்படு கிறது.

இஸ்லாமிய வழிகாட்டுதல், அதன் சட்டங்களை வகுப்பதில் நபிமொழிகள் பின் வரும் பங்காற்றுகின்றன.

1. திருக்ஃகுர்ஆனில் அருளப்பட்ட வசனங்களின் குறிக்கோள்களை தெளிவுபடுத்தி அவற்றின் பொருளை விரிவாகக்கூறுதல்.

2. அவை ஃகுர்ஆனுக்குப்பின் இஸ்லாமிய சட்டத்தின் இரண்டாவது முதன்மை ஆதாரமாக அமைகின்றன, மேலும், அவற்றின் அடிப்படை யிலான அனுமதிக்கப்பட்ட, தடைசெய்யப்பட்டவை தொடர்பான தீர்வுகள்ஃகுர்ஆனின் அதே அந்தஸ்தினைப் பெற்றுள்ளன.

3. ஃகுர்ஆனின் கட்டளைகளை வலுப்படுத்தி அதன் அதிகாரத்திற்கு சான்றளிக்கின்றன.

4. ஃகுர்ஆனில் கட்டளையிடப்பட்டுள்ள வழிபாட்டுச்செயல்களை நிறை வேற்றுவற்கான வழிமுறைகளை தெளிவாக விவரிக்கின்றன.

5. ஃகுர்ஆனிலுள்ளநெறிமுறைகளின்மதிப்புக்கூறுகளைநடைமுறைப் படுத்துவதில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக்கூறுகின்றன.

நபிமொழிகளின் மூன்று எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸிடமி ருந்து (ர) தெரிந்துகொண்டதாக ஜாபீர் பின் ஸைத் (ர) வாயிலாக அபு உபைதா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்; "எங்களை ஏமாற்று பவர் எவரும் நம்மைச்சார்ந்தவரல்ல மற்றும் எவர் ஒருவர் சிறுவர் கள்மீது கருணை காட்டவில்லையோ, எங்கள் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்கவில்லையோ, அவர் நம்மைச்சார்ந்தவரல்ல.
**(முஸ்னத் அர்-ரபீஉ பின் ஹபீப், நபிமொழி எண் 582).**

அபுல்-மின்ஹல் கூறுகிறார், நான் அல்-பரா பின் அஜ்ஸிப் (ர)) மற் றும் ஜைத் பின் அர்ஃகம் (ர) ஆகியோரிடம் பண பரிமாற்றத்தைப் பற்றி கேட்டேன். அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) காலத்தில் 'நாங்கள் வணிகர்களாக இருந்தோம், நாங்கள் பணம் பரி மாற்றம் குறித்து அவரிடம் கேட்டோம். அதற்கு அவர், 'அது கையிலி ருந்து கைக்கு மாறினால், எத்தீங்குமில்லை, இல்லையெனில் அது அனுமதிக்கப்பட்டதல்ல என்று பதிலளித்தார்.
**(ஸஹீஹ் அல் புக்ஹாரி, அத்தியாயம் விற்பனை, நபிமொழி எண். 276).**

அபூ ஹுரைரா (ர) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர் கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்: ஒரு பெண்ணுடைய ஒப்புதல் பெறும்வரை அவளைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது, ஒரு கன்னிப்பெண் அவளுடைய அனுமதி பெறாதவரை திருமணம் செய்து கொடுக்கக்கூடாது. அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், 'அவ ளுடைய (கன்னியின்) ஒப்புதல் எவ்வாறு பெறப்படும்?' என்று கேட்க, அவர்கள் கூறினார்கள்: 'அவள் அமைதியாக இருப்பது.
**(ஸஹீஹ் முஸ்லிம், அத்தியாயம்: திருமணம் நபிமொழி எண் 3303)**

இந்த எடுத்துக்காட்டுகள் சட்டங்களுக்கான விரிவான விளக்கம் மற்றும் சமூக நெறிமுறைகளின் வழிகாட்டுதல்களை அளிக்கும் பல்வேறு நபிமொழிகளில் சில

# மரணத்திற்குப்பின் வாழ்க்கை

மரணம் தவிர்க்கமுடியாதது, ஆகவே ஒருவர் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையின் யதார்த்தத்தை எதிர்கொள்ளவேண்டும். ஒருவர் மரணத்திற்குப்பிறகு ஒன்றுமே இல்லை என்ற கருத்தை ஏற்கலாம், மற்றொருவர் அதனைப் புறக் கணித்துவிட்டு நல்லதே எதிர்பார்க்கலாம், ஆனால், இரண்டில் ஒவ்வொருவரும் ஒரு வலுவான சூதாட்டத்தில் இறங்கியுள்ளார், ஏனெனில், மறுமையின் வாழ்க்கை என்பது நிரந்தரமானது, இது மிகவும் தீவிரமான விஷயம். ஒருவர் செய்யவேண்டிய மிகவும் விவேகமான விஷயம், அதை எதிர்பார்ப்பது மற்றும் அதைப்பற்றி ஏதையும் செய்வது. மார்க்கம் என்பது இதுதான்; இது மறுமையில் நம்முடைய நிரந்தர வாழ்க்கைக்கான தயாரிப்பு பற்றியதாகும்.

**மறுமையின் சான்று**

மார்க்கத்தின் மீதான நம்பிக்கையைத்தவிர, மறுமை வாழ்க்கையின் யதார்த் தத்தை கூரறிவு மற்றும் பொது அறிவின் மூலம் உய்த்துணரமுடியும். பின் வரும் வாதங்களைக் கவனத்தில் கொள்ளவும்.

**முதலாவது வாதம்:** இறைவனின் படைப்புகளில், மனிதர்கள் நுண்ணறிவு, பகுத்தறிவு சக்தி மற்றும் பகுத்தறியும் சுதந்திரம் பெற்றவர்கள். இந்தப்பண்பு கள் மற்ற எல்லா படைப்புகளையும் விஞ்சும் வகையில் ஆன்மீக, உடல் மற்றும் பொருள்திறனை நமக்குத் தந்துள்ளன. இதன் காரணமாகவே, ஆதம்(அ)) அவர் களை படைத்தபின், வானவர்கள் இந்த மகத்தான ஆற்றலை அங்கீகரிக்கும் விதமாக சஜ்தா செய்யும்படி கட்டளையிடப்பட்டனர்[17] இவ்வகையில், மனிதன் பிரபஞ்சத்தின் ஆழங்களை ஆராய்ந்து, உலகெங்கிலும் ஒரே நேரத்தில் தொடர்பு கொள்ளவும், மரபணு மாற்றத்தால் தயாரிக்கப்படும் உணவு, செயற்கை நுண் ணறிவு முறைகளைக்கண்டுபிடித்ததும் மனித அறிவு வளர்ச்சியின் பலனாக பல வெற்றிகளும் காத்திருக்கின்றன. இப்போது, மனிதன் எனப்படும் இந்த மகத்தான படைப்பு எந்த தெய்வீக நோக்கம் மற்றும் திட்டமும் இல்லாமலேயே படைக்கப்பட்டிருக்கமுடியாது; நாம் வாழ்கிறோம், மற்றும் நாம் மரணிக்கி றோம், அதுதான். பழங்கால மக்கள் கருதி வந்ததாக ஃகுர்ஆன் நமக்குக் கூறும் உண்மை.

> **அவர்கள் கூறுகிறார்கள்: ‘வாழ்க்கை என்பது நம்முடைய இந்த உலக வாழ்க்கைதான் இங்குதான் நாம் மரணிக்கவும் உயிர் வாழ வும் செய்கிறோம்: கால ஓட்டமல்லாமல் வேறு எதுவும் நம்மை அழிப்பதில்லை. உண்மையில், இதனைப்பற்றி இவர்களிடம் எந்த ஞானமும் இல்லை. இவர்கள் வெறும் ஊகத்தின் அடிப்படையில் தான் இப்படி கூறுகிறார்கள். (அல்குர்ஆன் 45:24)**

உண்மையில், மரணத்திற்குப் பிறகு எதுவும் இல்லை என்ற கருத்து வெறும் ஊகம்தான்!

**இரண்டாவது வாதம்:** பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இறைவனின் அறிவு மற்றும் திட்டத்தின் இறுதியான முழுநிறைவினை சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும்கூட, மனிதர்கள் எப்போதுமே இந்த உலகில் மிகவும் திருப்திகரமான, ஒரு வகையான இணையான வாழ்க்கையை எதிர்பார்ப்பவர்களாகவே வாழ்கின்றார்கள். இது நமது உலக வாழ்வில் நிறைவுறா நிலையையே குறிக்கின்றது, அது எந்த அளவிற்கு வசதியான, நிறைவான வாழ்க்கையாக இருந்தாலும், மனிதர்கள் எப்போதுமே நம்மால் சரியாக வரையறை செய்ய முடியாத ஒரு சிறந்த வாழ்க்கைக்காக ஏங்குகிறார்கள், எனவே நாம் அதை அடையவும் முடியாமல், நற்பேறற்ற மற்றும் ஏமாற்றத்திற்கு வழிவகுக்கிறது. நாம் ஏங்கிக்கொண்டிருக்கும் இந்த இணையான வாழ்க்கை உண்மையில் இறைவனுடைய படைப்பில் பரிபூரண நிறைவு முழுமைப்படுத்தப்படும் மறுமையின் வாழ்க்கையாகும். இவ்வுலகில் நிறைவற்ற நம்முடைய வாழ்க்கை, மறுமையின் நிரந்தரமான பரிபூரண நிலையான வாழ்க்கைக்கு நம்மை தயார்படுத்துவதற்கானது என்ற வகையில் .தற்காலிகமானதே.

**மூன்றாவது வாதம்:** விருப்பத்தேர்வு செய்யும் சுதந்திரத்துடன் மனிதர்கள் படைக்கப்பட்டுள்ளனர்; நம்மில் சிலர் நேர்மையானவர்களாகவும், சிலர் தீயவர்களாகவும் பொல்லாதவர்களாகவும் இருக்கலாம். தீயவர்கள் சக மனிதர்களுக்கு நிறைய துன்பங்களை ஏற்படுத்துவார்கள், பல்வேறு காரணங்களால் அதை விட்டு விலகியும் விடுவார்கள்; அதிகாரம் மற்றும் செல்வாக்கின் அந்தஸ்து, மனித சட்டங்களின் பலவீனங்கள், சட்ட அமைப்புகளில் ஊழல் மற்றும் பல. இதற்கும் மேலாக, வேறு சிலர் எந்தவொரு மனித நீதியும் ஒருபோதும் தண்டிக்க முடியாத அளவிற்கு குற்றங்களைச் செய்யலாம். ஒரு மில்லியன் மக்களை அநியாயமாக கொன்று குவித்த ஒருவரைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள்; அத்தகைய நபருக்கு எவ்வகையான தண்டனை உண்மையில் நீதியை நிலைநாட்டுவதாக இருக்கமுடியும்? முடிவான நீதியை இந்த உலகில் ஒருபோதும் நிலைநாட்டமுடியாது. உண்மையான நீதிக்கான நம்முடைய நம்பிக்கை மறுமையில் மட்டுமே நிறைவேற்றப்படமுடியும். உண்மையில், இனியும் மறுமை என்பது இருக்கக்கூடாது என்றால் அது முற்றிலும் அநீதியாகவே இருக்கும்.

**நான்காவது வாதம்: முன்னர் குறிப்பிட்டது போல், மனிதர்கள் யதார்த்தத்தின் இயல்பான அங்கீகாரத்துடன் (அரபியில் ஃபித்ரா) படைக்கப்பட்டுள்ளனர் எனவே, மனித சரித்திரம் முழுவதிலும் மனிதகுலத்தின் பெரும்பான்மையானோர் மரணத்தின் பின் வாழ்க்கையை நம்புவதைக் காண்கிறோம். உதாரணமாக, பண்டைய நாகரிகங்களின் வரலாற்று பதிவுகள், மக்கள் தங்கள் மரணத்திற்குப் பிறகு தொடர்ச்சியான இருப்புக்கு மாறுவதற்குத் தயாராக இருப்பதைக் காட்டுகின்றன. மரணம் மற்றொரு நிலையில், ஒரு புதிய உலகில் ஆன்மா வடிவில் தொடர்வதற்கு வழிவகுக்கிறது என்பதை அவர்கள் நன்கு அடையாளம் கண்டுகொண்டனர்.**

**ஐந்தாவது வாதம்:** திருக்ஃகுர்ஆன் மிக விரிவாகவே கூறுபவை: (அ) இயற்கை

அறிவியலில் எண்ணற்ற நிகழ்வுகள் (பார்க்க பிரிவு 6), (ஆ) வரலாற்று நிகழ்வுகள், (இ) மனித நாகரீகத்தை ஆக்கமுறையில் மாற்றியமைத்த மற்றும் தொடர்ந்து ஆழ்ந்த தாக்கத்தினை இன்றுவரையிலும் ஏற்படுத்துகின்ற சட்டங்கள் மற்றும் பண்புகளின் தரநிலைகள். இந்த விரிவான விளக்கங்களில் எதுவும் தவறானவை அல்லது பொய்யானவை என சுட்டிக்காட்டப்படவில்லை. திருக்ஃகுர்ஆனின் இந்த நிரூபிக்கப்பட்ட மெய்மை மற்றும் வாய்மையின் உறுதிப்பாட்டிற்குப்பிறகும் ஃகுர்ஆன் மிக உறுதியாகவே விவரிக்கும் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை யின் யதார்த்தத்தைப்பற்றி ஏன் கேள்வி எழுப்பவேண்டும்.

மேற்கண்ட வாதங்கள், மறுமை வாழ்க்கை என்பது உண்மை மட்டுமல்ல, ஒரு தேவையும் என்ற நம்பிக்கையை உண்டாக்கும். மேலும், அவ்வாறில்லை என் பதை சுட்டிக்காட்டும் வாதங்கள் ஏதும் உண்டா?

### மரணம் மற்றும் மறுமையின் வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய போதனைகள்

மனித ஆன்மா அதன் என்றென்றும் நிலைத்திருக்கும் இயல்பின் பல்வேறு கட் டங்களை கடந்துசெல்கிறது. இந்த பூமியில் நம்முடைய வாழ்க்கை என்பது நமது அடுத்தக்கட்டத்திற்கான தயாரிப்பாகும். மரணம் என்பது நம்முடைய மர ணத்திற்கும் உயிர்ப்பித்தெழுப்பப்படுவதற்கும் இடையிலான அடுத்தகட்ட வாழ்க் கையின் தொடக்கத்தைக் குறிக்கிறது, இந்த நிலை அரபியில் பர்சஃக் எனப் படும். இக்காலக்கட்டத்தில்தான் கல்லறையில் மற்றொரு மட்டத்தில் ஒருவர் ஆன்ம ரீதியான உணர்வுகளுடன் எழுப்பப்படும் காலம். இந்த உலக வாழ்க்கை யில் மறுமையின் வாழ்க்கைக்குத் தயாரிப்பு செய்தவர்கள் இன்பம் மற்றும் மன நிறைவின் நல்வாய்ப்புக்களை எதிர்நோக்கியவர்களாக மகிழ்ச்சி மற்றும் நிம்ம தியை அனுபவிப்பார்கள், மாறாக, மறுமையின் வாழ்க்கையினை புறக்கணித்த வர்கள் வரவிருக்கும் பேரழிவுகள் காரணமாக மிகுந்த கொடுமையினை அனுப விப்பார்கள். இந்த இரண்டு எதிரெதிரான மனநிலைகளும் இறக்கும் தருணத்தில் வானவர்களால் ஆன்மாவுக்கு அறிவிக்கப்படுகின்றது என்று ஃகுர்ஆன் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றது:

> **எவர்கள் அல்லாஹ் எங்கள் இறைவன் என்று கூறி, பின்னர் அதில் உறுதியுடன் நிலைத்து நின்றார்களோ, அவர்கள்மீது வானவர்கள் இறங்கிவந்து (கூறுகிறார்கள்): அஞ்சாதீர்கள், கவலைப்படாதீர்கள், உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட சுவர்க்கத்தினைப்பற்றிய நற் செய்தியினைப் பெற்றுக்கொள்ளுங்கள். (அல் ஃகுர்ஆன் 41:30)**

> **மேலும், நிராகரிப்பாளர்களின் முகங்களிலும் முதுகுகளிலும் அடித் துக்கொண்டிருந்தவாறு அவர்களுடைய உயிர்களை வானவர்கள் கைப்பற்றிக்கொண்டிருந்ததை நீர் கண்டிருக்க வேண்டுமே, எரிக்கும் வேதனையை சுவையுங்கள். (அல்ஃகுர்ஆன் 8:50)**

கல்லறையின் இந்தக்காலக்கட்டம் மறுமை வாழ்க்கையின் முதல்கட்டம் என்ற

வகையில் நமது உலக வாழ்க்கையில் நாம் தெரிவு செய்துள்ள விருப்பத் தேர்வின் நேர்விளைவுகளை குறித்துக்காட்டுகிறது. இறைத்தூதர் (ஸல்) கூறிய தாக அறிவிக்கப்படுகிறது; "கல்லறை என்பது மறுமை வாழ்க்கையின் முதற்கட் டமாகும். ஒருவர் இதனைப் பாதுகாப்பாகக் கடந்துவிட்டாரேயானால், அடுத்து வருபவை அதைவிட எளிதானதாக இருக்கும். மாறாக, இந்த முதல் கட்டத்தில் ஒருவர் தோல்வியடைந்துவிட்டால், பின்வருபவை அதைவிடக் கடுமையான வையாகவே இருக்கும்.

ஆன்மா காலத்தின் முடிவு அல்லது நாம் அறிந்த இயற்பொருள் சார்ந்த படைப் புகளெல்லாம் ஒரு புதிய மட்டத்தில், புதிய உலகமாகவே மாற்றப்படும் வரை யில் இந்த இடைபட்ட நிலையில் நிலைத்திருக்கும். இது ஃகுர்ஆனில் தெளிவான சொற்களில் விவரிக்கப்பட்டுள்ள பெரும் விளைவுகளை உண்டாக்கவல்ல முக் கியமான நிகழ்வாகும். உதாரணமாக, (அல்ஃகுர்ஆன் 22:1-2)

> **மக்களே, உங்கள் இறைவனின் கோபத்திலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்: உண்மையில், மறுமை நாளின் பூகம்பம் மாபெரும் திகிலை ஏற்படுத்தும் விஷயமாகும். நீங்கள் அதைப்பார்க்கும் நாளில், பாலூட்டும் பெண்ணும் பால்குடிக்கும் தன் குழந்தைகளை மறந்துவிடுவாள், ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணின் கர்ப்பமும் வீழ்ந்துவிடும். மக்கள் மயக்கத்தில் இருப்பவர்களாக உமக்குத்தென்படுவார்கள். உண்மையில், அவர்கள் மயக்கத்தில் இருக்கமாட்டார்கள், ஆயினும், அல்லாஹ்வின் வேதனை அந்த அளவிற்குக் கடுமையானதாய் இருக்கும்.**

காலத்தின் முடிவு புதிய உலகிற்கு வழிவகுக்கிறது. இது இறந்தவர்கள் உயிர்ப் பித்தெழுப்பப்படுவதுடன் தொடங்கும், மேலும் மனித இனத்தினர் அனைவரும் மீண்டும் படைக்கப்படுவார்கள். ஃகுர்ஆன் இந்த நாளை இறை மறுப்பாளர்களுக்கு மிகவும் கடினமான நாள் என்று சித்தரிக்கின்றது, அவர்கள் பூமியில் வாழ இரண்டாவது வாய்ப்புக்காக மன்றாடி தாங்கள் திருந்தி கீழ்படிந்து வாழ்வோம் என்று கூறுவார்கள். விசுவாசிகளை பொருத்தவரை இந்த நாளில் அவர்கள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை.[18]

இறுதித்தீர்ப்புக்காக மனித இனத்தினர் ஒன்று சேகரிக்கப்படுவார்கள். இதுவே தீர்ப்பு நாள், பெரும் விளைவுகளை உண்டாக்கவல்லது என்ற வகையில் இதனை ஃகுர்ஆன் பல சொற்களில் விவரிக்கிறது; துயர்மிகு நாள் (19:39), தீர்ப்பு நாள் (32:29), கடும் துன்பத்துக்குரிய நாள் (76:10), கடினமான நாள் (76:27), மாபெரும் நாள் (19:37), கேள்வி கணக்குக்குரிய நாள் (38:16,40:27). நியாயத்தீர்ப்பு நாள் என்பது நம்முடைய ஆன்மீக தகைமை இறைவனால் தீர்மானிக்கப்படும் நாள். இது நேர்மையானவர்களுக்கு பெருமகிழ்ச்சியும் எதிர்ப்பார்ப்பையும்கொண்ட நாள், இறை மறுப்பாளர்களுக்கு வருத்தமும் புலம்பல்களும்கொண்ட இறுதி நாள், நியாயத்தீர்ப்பு நாள். இந்த இரண்டு காட்சிகளும் ஃகுர்ஆனின் பின்வரும்

வசனங்களில் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன:

**மனிதனே, நீ இடைவிடாது பாடுபட்டு உன் இறைவனின் பக்கம் சென்றுகொண்டிருக்கிறாய், அவனை சந்திக்கக்கூடியவனாகவும் இருக்கிறாய். எவருடைய வினைப்பட்டியல் வலது கையில் கொடுக் கப்படுமோ அவரிடம் எளிதான கணக்கு கேட்கப்படும், மேலும், அவர் மகிழ்ச்சியுடன் குடும்பத்தாரிடம் செல்வார். ஆனால், எவருக்கு வினைப்பட்டியல் முதுகுக்குப் பின்னாலிருந்து கொடுக்கப்படுமோ அவர் மரணத்தையே அழைப்பார், மேலும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் போய் விழுவார். அவர் தம் குடும்பத்தாருடன் இன்பத் தில் மூழ்கியிருந்தார், ஒருபோதும் (எங்களிடம்) திரும்பமாட்டார் என்று நினைத்துக்கொண்டிருந்தார். (84:6-14)**

மறுமையில் நேர்மையானவர்கள் தங்கள் குடும்பங்களிலுள்ள நேர்மையான, அன்பானவர்களுடனும் ஒன்றுபடுவார்கள் என்று இஸ்லாம் நமக்குக்கற்பிக்கி றது[19]; நம் பெற்றோர், சகோதர சகோதரிகள், நம் குழந்தைகள், நண்பர்களைச் சுவர்க்கத்தில் சந்திப்பதில் என்ன மகிழ்ச்சி. ஆனால், தீயவர்கரளுக்கு, இது முற்றி லும் தடைசெய்யப்பட்ட காட்சியாக இருக்கும்; அவர்கள் பிறந்திருக்கவேகூடாது என்று விரும்புவார்கள்:

**இதோ! நெருங்கிவிட்டிருக்கும் வேதனை குறித்து நாம் உங்களுக்கு எச்சரிக்கை செய்துவிட்டோம். அந்நாளில் மனிதன் தன் கரங்களால் செய்தனுப்பிய அனைத்தையும் காண்பான், நிராகரித்தவன் புலம்பு வான்: அந்தோ நான் மண்ணாய் இருந்திருக்கக்கூடாதா (அல் குர்ஆன் 78:40).**



**ஓமானின் சுல்தான் காபூஸ் பிரமாண்ட மஸ்ஜிதில் தரைவிரிப்பு**

# பிற மதங்களைப்பற்றிய இஸ்லாமிய பார்வை

படைப்பாளனின் இயல்பான அங்கீகாரம் மற்றும் உள்ளார்ந்த அடிப்படை இயல்புகளுடன் (அரபியில் ஃபித்ரதுன்) மனிதர்கள் படைக்கப்பட்டுள்ளனர். மனித இனத்தினரின் வரலாறு முழுவதுதிலும் மனிதர்களின் இந்த இயல்பின் விழிப்புணர்வினைப் புதுப்பிக்க அல்லாஹ் அனைத்து சமூகங்களிலும் நபிமார்களை தொடர் சங்கிலியாக அனுப்பினான். நபிமார்களுக்கு வழங்கப்பட்ட இறைவன் புறமான செய்தி வழிபாட்டு முறைகள், சட்டங்களால் மாறுபட்டிருந்தாலும் எப்போதும் அடிப்படை கோட்பாடுகளில் - ஏகத்துவம், மறுமையின் மீது நம்பிக்கை மற்றும் நேர்மை - ஒத்திசைவுடனிருந்தன. அல்லாஹ் ஃகுர்ஆனில் கூறுகிறான்[20] (அல் குர்ஆன் 42:13)

**எந்த மார்க்கத்தை நூஹ் (அ) அவர்களுக்கு வகுத்தளித்தானோ மற்றும் நாம் உங்களுக்கு (முஹம்மது.ஸல்) வஹியின் மூலம் அறிவித்திருந்தோமோ, மேலும், இப்ராஹீம் (அ), மூசா (அ) மற்றும் ஈசா (அ) அவர்களுக்கும் கட்டளையிட்டிருந்தோமோ அந்த மார்க்கத்தையே நிலைநாட்டவும், இதில் பிரிந்துவிடாதீர்கள் என்று அறிவுறுத்துகிறான். அல்லாஹ்வின் இறைமையில் மற்றவர்களை இணைவைப்பவர்கள்மீது நீங்கள் எதன்புறமாக அழைக்கிறீர்களோ அது அவர்களுக்கு வெறுப்புக்குரியதாக உள்ளது. அல்லாஹ் தனக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான் மற்றும் எவர்கள் அவன் புறம் திரும்புகிறார்களோ அவர்களைத் தானே வழிநடத்துகின்றான்.**

அசல் செய்திகளிலிருந்து படிப்படியாக விலகியதன் விளைவாக காலப்போக்கில் மார்க்கம், கோட்பாடுகளின் பன்முகத்தன்மை வெளிப்படுகிறது. திருக்ஃகுர்ஆனில் மனிதர்களை விசுவாசத்தில் உண்மையான ஏகத்துவவாதியாகவும், மனித வரலாற்றில் பிற்கால இறைத்தூதர்களின் மூதாதையராகவும் விளங்கிய இப்ராஹீம் (அ) அவர்களுடைய அடிப்படை கோட்பாடுகளுக்கு திரும்புமாறு அல்லாஹ் அழைக்கிறான். எனவே, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், வேறுபட்ட மதங்கள் அனைத்தும் இரண்டு வகைகளாகும்.

## 1. ஏகத்துவ மதங்கள்

யூத மதம், கிறித்துவம் மற்றும் இஸ்லாம் ஆகிய மார்க்கங்கள் இப்ராஹீம் (அ) அவர்களுடைய ஏகத்துவ மரபுகளைப் பகிர்ந்துகொள்ளும் மார்க்கங்களாகும், அவற்றின் தூய்மையான வடிவத்தில், இந்த மூன்று மார்க்கங்களும் நம்பிக்கை மற்றும் மார்க்கத்தில் ஒரே அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன.

ஃகுர்ஆனில் பல வசனங்களில் யூதர்களும் கிறித்துவர்களும் வேதம் அளிக்கப்பட்ட மக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்[21]. இதன் பொருள், இறைவேதங்க

ளான தவ்ராத் மற்றும் பைபிள் (நற்செய்தி) ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் என்பதாகும். இருப்பினும், தற்போதைய வடிவத்திலுள்ள இந்த இரண்டு வேதங்களும் அந்தந்த நபிமார்கள் மூசா (அ) மற்றும் ஈசா (அ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட அசல் செய்திகளாக இருக்கவில்லை[22]. இதன் விளைவாக, இஸ்லாம் யூத, கிறித்து மதங்களை மூசா (அ) மற்றும் ஈசா (அ) அவர்களுடைய உண்மையான போதனைகளுடன் ஒத்தவையாக இல்லையெனக் கருதுகிறது.

திருக்ஃகுர்ஆன் மூசா (அ) மற்றும் ஈசா (அ) அவர்களுடைய செய்திகளை உறுதிப்படுத்தவும் நிறைவுபடுத்தவும் மட்டுமின்றி அவர்களின் செய்திகளில் எஞ்சியுள்ளவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் களைவதற்காகவும் அருளப்பட்டது[23]. இதன் காரணமாக, இஸ்லாமியக் கண்ணோட்டத்தில், மூசா (அ) மற்றும் ஈசா (அ) அவர்களை உண்மையாகவே பின்பற்றுபவர்கள் உண்மையில் குர்ஆனைப் பின்பற்றுபவர்களாவர்.

## 2. பிற மதங்கள்

யூத மதம், கிறித்துவம் தவிர பிறமதங்களைப் பொறுத்தவரை, உதாரணமாக, இந்துமதம், புத்தமதம் போன்றவற்றை இஸ்லாம் இறைத்தூதர்களின் செய்திகளுக்கு அப்பாற்பட்டவை எனக்கருதுகிறது, இவ்வகையில், இப்ராஹீம் (அ) அவர்களுடைய மரபுகளுடன் தொடர்புடையவைல்ல. இந்த மதங்களில் சில நாத்திகத்தை நோக்கிச்செல்கின்றன, இன்னும் சில, உண்மையான இறைவனான அல்லாஹ்வின் வழிபாட்டிலிருந்து விலகி மற்ற கடவுள்களை அவனுடன் இணைவைத்தன. ஏக இறைவனுடன் மற்ற தெய்வங்களை இணைப்பது இறைவனின் ஏகத்துவக் கொள்கைக்கு முரணானது, (பார்க்க. பிரிவு 3).

இருப்பினும், இந்த வேறுபாடுகள் அனைத்தையும் மீறி, இஸ்லாம் எல்லா நம்பிக்கைகளையும், இந்த நம்பிக்கைகளைப் பின்பற்றும் மக்களையும் மதிக்கிறது, ஏனெனில், அல்லாஹ்தான் மனிதர்கள் அனைவரையும் படைத்து, விசுவாசக் கொள்கைகளில் தெரிவுசெய்யும் சுதந்திரத்தை வழங்கினான். அவன் ஃகுர்ஆனில் கூறுகிறான் 10:99,

> **உலகிலுள்ள அனைவரும் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பது உமதிறைவனின் நாட்டமாக இருந்திருந்தால், இப்பூமியிலுள்ள அனைவரும் நம்பிக்கை கொண்டிருப்பார்கள் அப்படியானால், மனிதர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக, நம்பும்படி கட்டாயப்படுத்துவீர்களா?**

இது மற்றொரு வசனத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது 2:256:

**மார்க்கத்தில் யாதொரு கட்டாயமோ நிர்ப்பந்தமோ இல்லை. தவ றான வழியிலிருந்து நேரானவழி தெளிவாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.**

ஆகவே, விசுவாசத்தில் பன்முகத்தன்மை மனிதகுலத்தை படைப்பதில் அல்லாஹ் வின் திட்டத்திற்குட்பட்டது[24]. இந்த அங்கீகாரத்துடன், மனித வரலாற்றில் முஸ் லிம்கள் மற்ற மதங்களைச்சார்ந்த மக்களுடன் சமாதானம், அன்பு, நல்லெண்ணம் மற்றும் நல்லிணக்கத்துடன் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். இஸ்லாம் மனித கண்ணி யத்தைப் பாதுகாக்கிறது மற்றும் மனிதகுலத்தின் சமத்துவம் மற்றும் விசுவாச விஷயங்களில் விருப்பத்தெரிவின் சுதந்திரம் மூலக்கோட்பாட்டின் கொள்கை யின் அடிப்படையில் ஒழுக்கப்பண்புகளைப் பின்பற்றுகின்றது என்பது உண்மை யில் குறிப்பிடத்தக்கது.



**மக்காஹ்விற்கான வருடாந்திர யாத்திரை அனைத்து தேசங்களைச்சேர்ந்த மூன்று மில்லியனுக்கும் அதிகமான மக்களை ஒரே இறைவன் அல்லாஹ் வின் வழிபாட்டிற்காக ஒரே இடத்திற்கு ஈர்க்கிறது. இது மார்க்கத்தின் ஒற்றுமை மற்றும் மனித குலத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும்.**

# இஸ்லாத்தில் ஈசா (அ)

இஸ்லாத்தில் நம்பிக்கையின் கொள்கைகளில் முக்கியமான ஒன்று அல்லாஹ் வின் அனைத்து தூதர்கள்மீதும் நம்பிக்கை வைப்பதாகும். முஸ்லிம்கள் ஈசா (அ) அவர்கள் அல்லாஹ்வின் மிகப்பெரிய தூதர்களில் ஒருவர் என நம்புகிறார்கள்.

ஈசா (அ) அவர்களுடைய வாழ்க்கையும் போதனைகளும் அவர் வெளியேறிய பல தசாப்தங்களுக்குப்பிறகு பைபிளில் பதிவு செய்யப்பட்டன, இதனால் அவை மர் மத்தில் உள்ளன. ஃகுர்ஆன், ஈசா (அ) அவர்களை இருபத்தைந்து முறை பெய ரால் குறிப்பிடுகிறது, அவருடைய ஆளுமை மற்றும் போதனைகளைச் சுற்றி யுள்ள மர்மம் மற்றும் மூடநம்பிக்கைகளை தெளிவுபடுத்தவும், அவரையும் அவருடைய தாயையும் பற்றிய தவறான கூற்றுக்களிலிருந்து நீக்கி, அவரையும் அவர் தாயையும் அல்லாஹ்வின்மீது உண்மையான பக்தியுள்ளவர்கள் என்று வலியுறுத்துகின்றது. ஃகுர்ஆன் அதை நமக்குக் கற்பிக்கிறது.

- ஈசா (அ) அவர்கள் அவரது தாயார் கன்னி மர்யமின் அற்புதமான கருத் தாக்கத்திற்குப் பிறகு பிறந்தார்கள். இவ்வகையில், ஈசா (அ) அவர்களுக்கு தந்தை இல்லை, ஆகவே, தந்தைவழி மரபு இல்லாதபோதிலும் உன்னத மான தாய்வழி மரபினைக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால் மரியம் (அ) அவர்கள் நபிமார்களின் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். இருப்பினும், அற் புதமான கருத்தாக்கமாக இருந்தபோதிலும், அவர் முழுமனிதராகவே இருந் தார், மேலும், ஃகுர்ஆன் நமக்குத் தெரிவிக்கையில், அல்லாஹ்வால் ஒரு தீர்க்கதரிசியாக நியமிக்கப்பட்ட ஒரு மனிதனைவிட அவர் ஒருபோதும் உரிமை கோரவில்லை[25]. உதாரணமாக ஃகுர்ஆனில் 5:116-117 நியாயத்தீர்ப்பு நாளின் ஒரு காட்சியை அல்லாஹ் விவரிக்கிறான்:

  **மறுமையில் அல்லாஹ் 'மர்யமின் குமாரனாகிய ஈசாவே (அ), அல் லாஹ்வை விடுத்து என்னையும் என் அன்னையையும் கடவுள் களாக ஆக்கிக்கொள்ளுங்கள் என்று நீர் மக்களிடம் கூறினீரா? என்று எப்போது கூறுவான் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள்: அதற்கு அவர் பணிந்து கூறுவார்: "தூய்மை அனைத்தும் உனக்கே! எனக்கு எந்த உரிமையுமில்லாதவற்றைக் கூறுவது என்னுடைய பணியல்ல. அவ்வாறு நான் கூறியிருந்தால், அதனை நிச்சயம் நீ அறிந்திருப் பாய். என் உள்ளத்தில் இருப்பவற்றை நீ அறிவாய் ஆனால், உன் உள்ளத்தில் இருப்பதை நான் அறியமாட்டேன். நிச்சயம் மறைவான உண்மைகள் அனைத்தையும், நீ நன்கறிந்தவனாகவே இருக்கின் றாய். என் இறைவனும் உங்கள் இறைவனுமாகிய அல்லாஹ்வுக்கே அடிபணியுங்கள் என்று நீ எனக்குக் கட்டளையிட்டதைத்தவிர வேறு எதுவும் நான் அவர்களுக்குக் கூறவில்லை. நான் அவர்களோடு இருந்த காலமெல்லாம் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்**

**தேன்; நீ என்னைத் திரும்ப அழைத்துக்கொண்டபோது, நீயே அவர்களையும் கண்காணிப்பவனாக இருந்தாய். நீயே யாவற்றையும் மிகைத்தவனும் நுண்ணறிவுடையவனுமாய் இருக்கின்றாய்.**

ஈசா (அ), அவர்கள், இறைவனுக்குப் பணிவான அடிமையாக இருப்பதை உறுதிப்படுத்தினார், ஒருபோதும் தெய்வத்தன்மையைக் கோரவில்லை என்பதற்கு பைபிளிலேயே ஏராளமான சான்றுகள் உள்ளன.[26]

- அவரே மீட்பாளர் (கிறிஸ்து), அதாவது அவர் திருமுழுக்காட்டப்பட்ட அல்லது அல்லாஹ்வால் ஒரு நபியாக நியமிக்கப்பட்டவர்.[27]

- அவர் பல அற்புதங்களை செய்தார், ஆனால், அல்லாஹ்வின் அனுமதியால் மட்டுமே. முதல் அற்புதம் கன்னிப்பிறப்பின் காரணமாக அநாகரீக குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட தனது தாயார் மர்யம் (அ) அவர்களைப் பாதுகாக்க அவர் ஒரு குழந்தையாகப் பேசினார். வாழ்க்கையின் பிற்பகுதியில், அல்லாஹ்வின் அனுமதியால், இறந்தவர்களை உயிர்ப்பித்தெழுப்பியும், பார்வையற்றவர்களையும் தொழு நோயாளிகளையும் குணப்படுத்தியும் பல அற்புதங்களை அவர் செய்தார்.[28]

- அவர் நற்செய்தி அல்லது சுவிசேஷங்களுடன் அனுப்பப்பட்டார் (அரபியில் இன்ஜீல்)[29] உதாரணமாக, ∴குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான் 5:46

**தவ்ராத்தில் கூறப்பட்ட எஞ்சியுள்ளவற்றின் உண்மையை உறுதி செய்து, முந்தைய நபிமார்களுக்குப் பிறகு மர்யம் (அ) அவர்களின் மகன் ஈசாவை (அ) அனுப்பினோம். நாம் அவருக்கு நற்செய்தியைக் கொடுத்தோம்,அதில் வழிகாட்டுதலும் பிரகாசமும் இருக்கின்றது, அது தவ்ராத்தில் இன்னும் எஞ்சியுள்ளவற்றின் உண்மையை உறுதிப்படுத்துகிறது, மேலும் இறையச்சமுடையவர்களுக்கு வழிகாட்டுதலும் அறிவுரையும் உள்ளது.**

- அவர் இஸ்ரவேல் புத்திரர்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டார், வேறு எந்த சமூகத்தினர்களுக்கும் அல்ல. அல்லாஹ் ∴குர்ஆனில் கூறுகிறான் 3:49,

**இஸ்ராயீலின் வழித்தோன்றல்களுக்கு ஒரு தூதராக (ஈசாவை (அ) நியமிப்பான்).**

ஈசா (அ) அவர்கள் இஸ்ராயீலின் வழித்தோன்றல்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டார் என்பது இன்றைய பைபிளில்கூட, அதன் வெவ்வேறு பதிப்புகளில் பிரதிபலிக்கிறது.[30]

- அவர் கொல்லப்படவுமில்லை, சிலுவையில் அறையப்படவுமில்லை. அல்லாஹ் ∴குர்ஆனில் ¬ கூறுகிறான் 4:157- 158,

**அல்லாஹ்வின் தூதரும் மர்யமின் மகனுமான ஈசா மஸீஹை (அ) நாங்கள்தாம் கொன்றோம் என்று அவர்கள் பெருமையாக கூறுகிறார் கள்; உண்மையில், அவர்கள் அவரைக் கொலை செய்யவுமில்லை, சிலுவையில் அறையவுமில்லை, ஆனால், அது அவர்களுக்கு சந்தே கத்துக்குரியதாய் ஆக்கப்பட்டுவிட்டது, அதில் வேறுபடுவோர் சந்தே கத்தில் இருக்கிறார்கள் அவர்களிடத்தில் எந்த அறிவுமில்லை, யூகத் தையே பின்பற்றுகிறார்கள், நிச்சயமாக அவர்கள் அவரைக் கொலை செய்யவே இல்லை, மாறாக, அல்லாஹ் அவரை தன் பக்கம் உயர்த் திக்கொண்டான்; அல்லாஹ் வல்லமை மிக்கவனும் நுண்ணறிவாள னுமாய் இருக்கின்றான்.**

ஈசாவை (அ) சிலுவையில் அறைய அவரது எதிரிகள் ஒரு முயற்சி மேற் கொண்டனர், ஆனால் அல்லாஹ் தனது நபியை அவமானப்படுத்த அனு மதிக்கவில்லை: அவன் தனது நபியைப் பாதுகாத்து காப்பாற்றினான்.



**ஜெருசலேமிலுள்ள அல்-அஃக்ஸா மஸ்ஜித், இஸ்லாத்தின் மூன்றாவது புனிதமான மஸ்ஜிதாகும். ஃகுர்ஆனில் (17:1 & 53:13-18) குறிப்பிட்டுள்ளபடி, முஹம்மது நபி (ஸல்), அவர்கள் கி.பி 621 ஆம் ஆண்டில் இந்த மஸ்ஜிதி லிருந்து வானத்திற்கு ஏறிச்சென்றார்கள்.**

# இஸ்லாம் ஏன், எல்லா மதங்களும் உண்மையானவை அல்லவா?

நல்லெண்ணம், நல்லிணக்கம் மற்றும் அன்பை வளர்க்கும் எந்தவொரு மதமும் அடிப்படையில் இறைவன் வழியைக்காட்டுவதோடு தெய்வ பக்திக்கும் வழிவகுக் கிறது, எனவே, அத்தகைய எந்த மதமும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று மக்க ளிடையே ஒரு தவறான நம்பிக்கை உள்ளது. எல்லா மதங்களும் அடிப்படை யில் நல்லவை, மற்றும்/ அல்லது சமமானவை, ஆகவே, எந்தவொரு குறிப் பிட்ட மதத்தையும் ஒருவர் பின்பற்றத்தேவையில்லை என்றும் கூறப்படுகின் றது. இந்த சிந்தனை இரண்டு முக்கியமான காரணங்களின் அடிப்படையில் தவ றானது மற்றும் குறைபாடுடையது.

**முதலாவதாக,** மதம் என்பது படைப்பாளனான அல்லாஹ்விடம் நம்முடைய பக்தியைப் பற்றியது. நாம் அவனுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறோம், எவ்வாறு வணங்குகிறோம், அவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப இவ்வுலகில் நம் வாழ்க்கையை எவ்வாறு நடத்துகிறோம் என்பதுபற்றியது. இந்த 'எவ்வாறுகள்' அனைத்தும் படைப்பாளனிடமிருந்து வரவேண்டும். எனவே, உண்மையான மற் றும் சரியான மார்க்கம் என்பது படைப்பாளனால் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றாகும்

**இரண்டாவதாக,** இன்று காணப்படும் மதங்கள் அனைத்தும் படைப்பாளனின் உண்மையான மதங்கள் என்று சொல்வது சரியானதாக இருக்கமுடியாது, ஏனென்றால் இன்று பல்வேறு முக்கிய கோட்பாட்டு மற்றும் நடைமுறை முரண்பாடுகள் உள்ளன. சில எடுத்துக்காட்டுகளை தருவதானால்: எல்லா மதங் களும், அவை பின்பற்றப்பட்டுவரும் வகையில், அவர்களால் படைப்பாளனின் ஏகத்துவத்தை ஏற்றுக்கொள்வதில்லை, இரண்டாவதாக, இரட்சிப்பின் கொள்கை களில் மதங்களுக்கு இடையே பெரிய வேறுபாடுகளும் உள்ளன, மூன்றாவதாக, மதங்களுக்கு இடையில் சட்டபூர்வமானது மற்றும் சட்டவிரோதமானது எது என்பதிலும் வேறுபாடுகள் உள்ளன.

படைப்பாளன் நிச்சயமாக தாமே முரண்படுவதில்லை. எனவே, அவனுடைய மார்க்கம் மனித இனத்தவர் அனைவருக்கும் ஒத்ததாகவே இருக்கவேண்டும் - அதன் அடிப்படை நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளில் சீரானதாக இருக்க வேண்டும். அறிவு மற்றும் காரணத்தின் மூலம் உண்மையைத்தேடுவது தனி நபரின் பொறுப்பாகும். எல்லா மதங்களும் அடிப்படையில் நல்லவை, எனவே, படைப்பாளனுக்கு ஏற்புடையவை என்று ஒருவர் ஏமாற்றத்திற்கு ஆளாகிவிடக் கூடாது; இறைவனிடம் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரே மதம் அவனுடைய மார்க் கமே.

இஸ்லாம் தனிமுதன்மையான மார்க்கம் என்று கூறப்படுவதில்லை; மனிதகுலத் தின் முந்தைய தலைமுறைகள் அனைவருக்கும் அருளப்பட்ட அதே மதம்தான் இது. மனித வரலாற்றில் மதங்களின் பன்முகத்தன்மை இறைத்தூதர்களின்

உண்மையான செய்திகளிலிருந்து விலகியதால் வெளிப்பட்டது. இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும், இறுதிச்செய்தியான ஃகுர்ஆனும் அசல் செய்தியை நோக்கி மனிதகுலத்தை வழிநடத்தும் குறிக்கோளுடையது. ஆகவே, படைப் பாளனுக்கு ஏற்புடைய ஒரே மதம் இந்த இறுதிசெய்திக்கு - இஸ்லாம், இணக் கமானதாக இருக்கவேண்டும் என்பதாகும், அதாவது இறைவனுடைய நாட்டத் திற்குக் கீழ்ப்படிவது, அல்லாஹ் ஃகுர்ஆனில்¬கூறுகிறான் 3:85,

**இஸ்லாத்தைத்தவிர வேறு ஒரு மதத்தை யாராவது மேற்கொள்ள விரும்பினால் (அல்லாஹ்வின் நாட்டத்திற்கு நேர்மையான மற்றும் அமைதியான முறையில் கீழ்ப்படிவது), அவனிடமிருந்து ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; மேலும், மறுமையில் அவன் நஷ்ட மடைந்தவர்களில் ஒருவனாக இருப்பான்.**

இறுதித்தூதரான முஹம்மது (ஸல்) அவர்களுக்குமுன் வந்த அனைத்து தூதர் கள், இப்ராஹீம் (அ), மூசா (அ) மற்றும் ஈசா (அ) உட்பட அனைவருடைய மதமும் இஸ்லாம்தான், ஏனெனில் அவர்கள் படைப்பாளனுக்குக் கீழ்ப்படிந்து அவனு டைய நாட்டத்திற்கு முழுமையாக அடிபணிந்தவர்கள். முந்தைய நபிமார்களை நேர்மையான முறையில் அந்தந்த நபிமார்களின் உண்மையான போதனை களைக் கடைபிடித்து பின்பற்றியவர்களின் மதமாகவும் இஸ்லாம் இருந்தது,



# நாத்திகம் மற்றும் அஞ்ஞானவாதம் பற்றிய அறிவுரை

நாத்திகம் ஏக இறைவன் (கடவுள்) மறுப்பு, மேலும் இது மறுமையின் வாழ்க்கையை மறுப்பதையும் குறிக்கிறது. அஞ்ஞானவாதம் என்பது இறைவன் இருக்கினறான் என்ற கொள்கையிலேயே சந்தேகம் கொள்வதாகும். நாத்திகர்கள் மற்றும் அஞ்ஞானிகள் இருவரும் தங்கள் மறுப்பு அல்லது சந்தேகத்திற்கான பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். பழைய காலங்களில், கடவுள் இருக்கின்றான் என்பதை இயற்பொருள் ரீதியாகப் பார்க்கவோ உணரவோ இயலாமை அல்லது மனிதன் துன்பங்களை அனுபவித்து வந்தது கடவுள் இருந்தால் நாம் ஏன் கஷ்டப்படுகிறோம் என்பவை காரணங்களாக இருந்தன;. நவீன காலங்களில் காரணங்கள் மிகவும் சிக்கலானவையாகவே ஆகிவிட்டன் கடவுள் இருக்கிறான் என்பது ஏன் அறிவியல் பூர்வமாக நிரூபிக்க முடிவதில்லை? மேலும், படைப்புகளில் விஞ்ஞான ரீதியாக பல நிகழ்வுகளைக்கொண்டு நாம் விளக்கிக்கூறமுடியும் என்பதால், கடவுள் இருக்கிறான் என்பது எந்த அடிப்படையும் இல்லை.

இஸ்லாம் இந்த நிராகரிப்பு அல்லது சந்தேகத்தை கடவுளின் இருப்பு குறித்த மனித மனசாட்சி, அறிவுக்கூர்மை மற்றும் அறிவாற்றல்களின் அடிப்படையில் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அணுகுகிறது. படைப்பாளனின் இயல்பு மற்றும் படைப்புகள் எல்லை கடந்த வகையில் வேறுபட்டவை, மேலும் கடவுள் நாம் காணும் வகையில் இயற்பொருளாக இருந்தால். அவன் இடம், காலம் மற்றும் பருப்பொருளாக வரம்பிற்கு உட்படுத்தப்பட்டவனாக ஆகிவிடுவான். இது ஒரு அபத்தமான கருத்தாகும், ஏனெனில் இடம், நேரம் மற்றும் பருப்பொருள் ஆகியவை படைக்கப்பட்டவை, எனவே அவை படைப்பாளனை கட்டுப்படுத்தமுடியாது. ஃகுர்ஆன் அதற்குப்பதிலாக படைப்புகளைப்பற்றிய அறிவார்ந்த ஆய்வுக்கு மக்களை அழைக்கிறது, இதன் மூலம் கடவுளை அவனுடைய படைப்புகளின் மூலமாகவே புரிந்துகொள்ளமுடியும். இறைவன் இருக்கின்றான் என்பதற்கான சான்றுகள் ஃகுர்ஆனில் 'அத்தாட்சிகள்' எனப்படும் (அரபியில் ஆயதுன்) மற்றும் திருக்ஃகுர்ஆனில் இதற்கான நூற்றுக்கணக்கான அத்தாட்சிகள் உள்ளன. அத்தியாயம் 41, வசனம் 53 -ல் அல்லாஹ் கூறுகிறான்:

> **அதிவிரைவில் இவர்களுக்கு நம்முடைய சான்றுகளை அனைத்து திசைகளிலும் அவர்களுக்கு உள்ளேயும் நாம் காண்பித்துக்கொடுப்போம். இந்தக் ஃகுர்ஆன் சத்தியமானது எனும் உண்மை இவர்களுக்குத் தெளிவாகிவிடும் வரையில். உம் இறைவன் ஒவ்வொன்றுக்கும் சாட்சியாக இருக்கிறான் என்பது போதுமானதாக இல்லையா?**

ஆகவே, இந்த வாக்குறுதியுடன் ஃகுர்ஆன் மனித இனத்தினரை இறைவனின் படைப்புகளின் மூலம் இறைவன் இருக்கிறான் என்பதற்கான பல அத்தாட்சிகளை கூர்ந்து சிந்தித்துப் பார்க்குமாறு அழைக்கின்றது. உதாரணமாக, ஃகுர்ஆன்

வசனம் 3:190 இல் அல்லாஹ் கூறுகிறான்:

> **இதோ! வானங்களையும் பூமியையும் படைப்பதிலும், இரவும் பகலும் மாற்றிமைப்பதிலும் புரிந்துகொள்ளும் மனிதர்களுக்கு உண்மையில் அத்தாட்சிகள் உள்ளன**

உண்மையில், வானங்கள் பூமியின் படைப்பில் விஞ்ஞானிகள் ஆச்சரியத்திற் குரிய உண்மைகளை கண்டுபிடித்துள்ளனர்; எ.கா. (அ) பிரபஞ்சத்திற்கு ஒரு ஆரம்பம் இருந்தது, அதாவது, அது இல்லாமையிலிருந்து தொடங்கியது, (ஆ) துல்லியமான மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இயற்பியல் சட்டங் கள் மற்றும் செயல்முறைகளின் அடிப்படையில் பிரபஞ்சம் உருவானது, (இ) பூமியில் வாழ்க்கையை சாத்தியமாக்கும் வகையிலான 200 க்கும் மேற்பட்ட அளவுருக்கள் உள்ளன, உதாரணமாக, பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம், பூமியின் ஈர்ப்புவிசை, வளிமண்டல அமைப்பு, நீரின் இருப்பு மற்றும் பல

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்,

> **அவன்தான் உங்களுக்காக வானத்திலிருந்து மழையை இறக்கு கிறான், அதிலிருந்து நீங்களும் நன்கு அருந்துகின்றீர்கள் மேலும், அதிலிருந்து உங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்காக புற்பூண்டு களும் முளைக்கின்றன. இந்த நீரைக்கொண்டு அவன் உங்களுக்காக பயிர்களை முளைக்கச் செய்கின்றான், மேலும், ஜைத்தூன் மற் றும் பேரீச்சை மரங்களையும், திராட்சைக் கொடிகளையும் உற்பத்தி செய்கின்றான். சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு நிச்சயமாக இதில் ஒரு பெரிய அத்தாட்சி உள்ளது. (அல்ஃகுர்ஆன் 16:10-11)**

இந்த வசனத்தில் இறைவன் இருக்கிறான் என்பதற்கான பல அத்தாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வசனத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டால், மழை உருவாவது: இது பூமியிலிருந்து ஈரப்பதத்தை ஆவியாக்குவதற்கும், ஈரப்பதம் வானத்திற்கு ஏற்றிச்செல்வதற்கும், ஈரப்பதத்தை நீர்த்துளிகளாக மாற்றுவதற் கும் காரணமான நூற்றுக்கணக்கான இயற்பியல் விதிகள் மற்றும் துல்லியமான அளவுருக்களை உள்ளடக்கியதோடு. நீர்த்துளிகள் மேகங்களாகக் குவிதல், ஆயி ரக்கணக்கான டன் தண்ணீரில் நிறைந்த மேகங்களின் இயக்கம், நீர்த்துளிகள் மழையாக விழுதல், இந்த செயல்முறைகள் அனைத்தும் துல்லியமான இயற் பியல் சட்டங்கள் மற்றும் அளவுருக்களால் நிர்வகிக்கப்படுகின்றன. படைப்பில் இந்த ஆயிரக்கணக்கான அத்தாட்சிகளைப்பற்றி சிந்தித்துப்பார்க்குமாறு ஃகுர்ஆன் நம்மை அழைக்கிறது. ஒரு சிந்தனை மற்றும் இயல்பான மனிதனுக்கு இவை யனைத்தும் திட்டமிட்டு வடிவமைக்கும் படைப்பாளனான இறைவனையே சுட்டிக்காட்டுகின்றன. படைப்பில் இந்த அறிவுக்கூர்மையான வடிவமைப்பு, சிக்கலான தன்மை மற்றும் துல்லியம், அதன் அனைத்து ஆழ்ந்த இயக்கவியல்

ஆகியவை தற்செயலான விளைவாகும் என்று கருதுவது நியாயமற்றது. உண்மையில், பல சிறந்த நவீன விஞ்ஞானிகள் இதே தர்க்க ரீதியான முடிவுக்கு வந்துள்ளனர்.[31]

படைப்பாளனை அங்கீகரித்து அவனுக்குக் கீழ்ப்படியும் வகையில் இயற்கையான மனநிலையுடன் அனைத்து மனிதர்களும் படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் ஃகுர்ஆன் நமக்குத் தெரிவிக்கிறது (இது அரபியில் ஃபித்ரதுன் எனப்படும்)[32] இதற்கான ஒரு சான்று என்னவென்றால், நாம் ஒரு கடுமையான நெருக்கடியை எதிர்கொள்ளும்போது மற்றும் எந்த மனிதனும் நமக்கு உதவிசெய்ய வரமுடியாது என்பதை உணர்ந்து, உதவிக்காக இறைவன்புறமே திரும்புவோம். அவனை அடையாளம் காணும் இந்த மனசாட்சியை விழிப்பூட்ட நம்முடைய படைப்பாளன் நபிமார்களை நியமித்து மனித குலத்திற்கு வேதங்களை அனுப்பியுள்ளான். இருப்பினும், இறைவன் நமக்கு விருப்பத்தின் சுதந்திரத்தை அளித்துள்ளதால் அவனை அங்கீகரிக்கும் இந்த இயல்பான மனநிலை கட்டுப்படுத்துவதற்கான திறன் நமக்கு உள்ளது. ஆனால் கடவுள் தன்னை நம்புவதற்கான மனசாட்சியின் அழைப்பிற்கு பதிலளிப்பவர்ககளுக்கு அவன் வழிகாட்டுவான், மாறாக, அவனை நம்புவதற்கு பதிலாக தங்கள் மனசாட்சியை அடக்கிக்கொள்பவர்களுக்கு அவன் வழிதவற விட்டுவிடுவான், இதுவே இறைவன் நம்மைப் படைத்துள்ள திட்டம்.[33]

திருக்ஃகுர்ஆன், மனிதகுலத்திற்கு அனுப்பப்பட்ட இறுதி வேதமாகும், இதுவே இறைவன் இருப்பதற்கான அத்தாட்சியாகும். அத்தியாயம் 4 வசனம் 82 இல் பார்ப்போம்.

> **அவர்கள் ஃகுர்ஆனை (கவனத்துடன்) சிந்தித்துப் பார்ப்பதில்லையா? இது அல்லாஹ்வைத்தவிர வேறு எங்கிருந்து வந்திருந்தாலும், அவர்கள் நிச்சயமாக அதில் அதிக முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்.**

குர்ஆனைப்பற்றிய ஒரு புறநிலை மற்றும் திறந்த ஆய்வு, இது மனிதனால் எழுதப்பட்டிருக்கமுடியாது என்பதை தெளிவாகக்காட்டுகிறது, (பார்க்க பிரிவு 7). ஃகுர்ஆன் என்பது இறைவன் இருக்கின்றான் என்பதற்கான ஒரு சிறந்த சான்று.

இறைவன் ஒரு நித்திய தெய்வீக நோக்கத்திற்காக நம்மைப் படைத்துள்ளான், மற்றும் அவனுடைய படைப்புகளிலெல்லாம் நமக்கு முன்னுரிமை அளித்துள்ளான்[34]. இந்த பூமியில் நம்முடைய வாழ்க்கை நிலையற்றது, மேலும் மறுமையில் நம்முடைய நிரந்தர இடத்திற்காக நம்மை தயார்படுத்துவதற்காகவே உள்ளது. இந்த தயாரிப்பில், படைப்பாளன் மீதான நம்பிக்கை செல்வவளம் மற்றும் இன்னல்களின் மூலம் சோதிக்கப்படும். மேலும், நம்முடைய சுதந்திரமான விருப்பத்தெரிவினை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதையும்

சோதிக்கப்படும், மேலும் நம்முடைய விருப்பத்தின் சுதந்திரம் இந்த சோதனை யினால்தான் நன்மை தீமை இரண்டும் நம் வாழ்க்கையில் தாக்கத்தினை ஏற் படுத்தும். மனிதன்தான் தீமையை செய்கிறான், கடவுள் தூண்டுவதில்லை. இவையனைத்திலும் மேலானது என்னவெனில், தீமையும் துன்பமும் நம் விசுவாசத்தின் ஒரு சோதனையாக மட்டுமல்லாமல், அவை மனிதனுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் தடுப்பாகவும் அமைகின்றன. நேர்மறையான சிந்தனையும் உயர்ந்த நோக்கத்திற்கான தேடலும் நம் மனசாட்சியில் விழிப்புணர்ச்சி உண் டாக்கப்படுவது பெரும்பாலும் துன்பங்களின் காரணத்தால்தான்.



சூரிய கிரகணம்: இந்த கண்கவர் நிகழ்வு சாத்தியமாவது சூரியன் சந்திரனை விட பூமியிலிருந்து நானூறு மடங்கு தொலைவில் இருப்பதோடு சந்திரனை விட நானூறு மடங்கு பெரியது என்ற காரணத்தினால் மட்டுமே. இந்த துல்லிய மான விகிதங்கள் இந்த அழகான காட்சியை வடிவமைத்த வடிவமைப்பாள னையே சுட்டிக்காட்டுகின்றன, அவன்தான் படைப்பாளன்.

# இஸ்லாத்தில் பெண்களின் நிலை

இஸ்லாம் ஆண்களையும் பெண்களையும் சமமான மனிதர்களாக படைப்பாளனின் முன் உறுதியாக வைக்கிறது. ஆண்களும் பெண்களும் உயிரியல் ரீதியாக வேறுபட்டவர்கள் என்ற வகையில் குடும்பத்திலும் சமூகத்திலும் வேறுபட்ட - ஆனால் ஒருவரையொருவர் சார்ந்த - பங்கினை ஆற்றுபவர்களாக உள்ளனர். இருப்பினும், இரண்டுமே மற்றதைவிட உயர்ந்ததல்ல. ஃகுர்ஆனின் பின்வரும் வசனம் (4:1) இந்த கொள்கையை அழகாக தொகுத்தளிக்கிறது.

**மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்கள் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள். அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான், மேலும், அவை இரண்டின் மூலம் அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச்செய்தான். மேலும், எந்த அல்லாஹ்வின் பெயரைக்கூறி நீங்கள் ஒரு வர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கோருகிறீர்களோ, அந்த அல்லாஹ்வுக்கே நீங்கள் அஞ்சுங்கள். மேலும், இரத்த பந்த உறவுகளை சீர்குலைப்பதிலிருந்து விலகி (வாழுங்கள்), நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்.**

இந்த வசனம் கூறுவது என்னவென்றால், பெண்கள் ஆண்களைப்போன்ற இயல்புடைவர்கள்தான், இருவருக்கும் பரஸ்பர உரிமைகள் உள்ளன, மேலும் பெண்களுக்கு, குறிப்பாக நம் தாய்மார்களுக்கு சிறப்புமிக்க கண்ணியமும் மரியாதையும் அளிக்கவேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான்.




இந்த உன்னதமான கொள்கையின்படி, இஸ்லாம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் வருகையின்போது உலகம் முழுவதும் நிலவிய ஒரு தீய வழக்கமான பெண்களை ஆண்களின் பணியாளர்கள் என கருதப்பட்டுவந்த நிலையிலிருந்து விடுவித்து, ஆண்களுடன் ஆன்மீக, சமூக மற்றும் பொருளாதார சமத்துவ நிலைக்கு உயர்த்தியது[35]. இவ்வகையில், இஸ்லாத்தில் பெண்களுக்கு சொத்துரிமை, பரம்பரை உடைமை, கல்வி உரிமை, சொந்த வாழ்வாதாரம் சம்பாதிக்கும் உரிமை மற்றும் ஆண்கள் அனுபவிக்கும் மற்ற அனைத்து உரிமைகளும் உள்ளன.

சில முஸ்லிம் சமூகங்களில் பெண்கள் ஆளாக்கப்படும் அநீதிகள் இஸ்லாத்தில் பரிந்துரைக்கப்பட்டவை அல்ல, மாறாக, உண்மையில், அவை இஸ்லாம் எதிர்த்துப் போராடிய அக்காலக் கலாச்சார வழக்குமுறைகள். உதாரணமாக, கட்டாயத் திருமணம் அல்லது பெண்களின் கல்விக்கான உரிமைகளை மறுத்தல், இவை இரண்டும் சில முஸ்லிம் சமூகங்களில் காணப்படுகின்றன, ஆனால், இவை இஸ்லாமியச் சட்டத்திற்கு விரோதமானவை.

# மதத் தீவிரவாதம் மற்றும் வன்முறை

மத தீவிரவாதம் மற்றும் வன்முறை என்பது உலகின் அனைத்து மதங்களிலும் நிலவும் இயல் நிகழ்வுகள் மற்றும் அவை மதங்களைப்போலவே பழமையானவையாகும். எல்லா மதங்களிலும் எப்போதுமே சிலர் தங்கள் நம்பிக்கைகளின் தீவிரமான மற்றும் பெரும்பாலும் விபரீதமான கருத்துக்களைக்கொண்டிருப்பார்கள். இத்தகையவர்களின் தீவிர மத சித்தாந்தங்கள் மற்றும் மனதின் தீவிரமயமாக்கல் காரணமாக பல போர்கள் நடத்தப்பட்டு கொடுமைகளும் இழைக்கப்பட்டுள்ளன. இந்த மனித போக்கைத்தடுக்க, இஸ்லாம் நம்பிக்கையை மனிதப் பண்புகளால் கட்டுப்படுத்தி விருப்பத்தெரிவின் சுதந்திரம், மனிதர்களின் கவுரவத்தைப்பாதுகாத்தல், அனைத்து நம்பிக்கைகளின் அடிப்படையிலான மதங்களுக்கும் மரியாதையளித்தல், வாழ்க்கையின் புனிதத்தன்மை, நீதி மற்றும் அனைத்து மனிதர்களுக்கும் நடுநிலையான மென்னயம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் நற்பண்புகளை உருவாக்குகிறது.

### விருப்பத் தெரிவின் சுதந்திரம் மற்றும் அனைத்து நம்பிக்கைகளுக்கும் மரியாதை.

அல்லாஹ் மனிதனை மனசாட்சி மற்றும் விசுவாசம் சார்ந்த விஷயத்தில் விருப்பாற்றலின் சுதந்திரத்துடன் படைத்துள்ளான். இவ்வகையில், எந்த மதத்தின்மீதான நம்பிக்கையையும் யார்மீதும் சுமத்தமுடியாது. மேற்கோள் காட்டப்பட்டுள்ள ஃகுர்ஆன் வசனங்களுடன் 2:256 மற்றும் 10:99 (பார்க்க பிரிவு 10), வசனங்கள் 11:118-119 ல் அல்லாஹ் கூறுகிறான்,

> **உங்கள் இறைவன் மிகவும் நாடியிருந்தால், நிச்சயமாக மனித குலத்தவர் அனைவரையும் ஒரே சமுதாயமாக ஆக்கியிருப்பான். ஆதலால், அவர்கள் மாறுபட்ட வழிமுறைகளில்தான் சென்றுகொண்டிருப்பார்கள், உமதிறைவன் கருணை காட்டியவர்களைத்தவிர, இதற்காகவே (தெரிவுசெய்யும் சுதந்திரத்தை சோதிப்பதற்காகவே) அவர்களைப் படைத்துள்ளான்.**

விசுவாசத்தில் பன்முகத்தன்மை என்பது நம்முடைய படைப்பிற்கான இறைவனுடைய திட்டத்திற்குள் அடங்கியது, இது எல்லா மதங்களைச் சார்ந்த மக்களுடனும் சகவாழ்வு மற்றும் சகிப்புத்தன்மையைக் குறிக்கிறது.

### வாழ்க்கையின் புனிதத்தன்மை

அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் வேறு எந்த வகையிலான வன்முறை அல்லது அநீதியையும் இஸ்லாம் கண்டனம் செய்கிறது. ஒரு மனிதரை அநியாயமாகக் கொல்வது இஸ்லாத்தில் மாபெரும் பாவமாகும். அல்லாஹ் கூறுகிறான்.

**எவனொருவன் ஒரு மனிதனைக் -கொலை செய்ததற்குப் பரிகார மன்றி அல்லது பூமியில் குழப்பத்தைப் பரப்பிய காரணத்திற்காக அன்றி - கொன்றால் அவன் மனிதர்கள் எல்லோரையும் கொன்றவன் போல் ஆவான், மேலும், எவனொருவன் ஒரு மனிதனை வாழவிடு கின்றானோ, அவன் எல்லா மனிதர்களையும் வாழ்வளித்தவன்போல் ஆவான். (அல்குர்ஆன் 5:32).**

இஸ்லாத்தில் போர் தற்காப்பு மற்றும் எவ்வகையிலான ஆக்கிரமிப்பு அல்லது ஒடுக்கு முறைக்கு எதிராக மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது[36]. இருப்பினும், அத்தகைய நியாயமான போருக்கான பிரகடனம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மட்டுமே செய்யப்படும், அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் / அல்லது சொத்துக்க ளின்மீது அல்ல. மேலும், போருக்கான பிரகடனம் ஒரு சட்டப்பூர்வமான அர சால் செய்யப்படும், தனிநபர்கள் அல்லது குழுக்களால் அல்ல. இஸ்லாத்தில் போர் என்பது போரிடுவதற்கான மிகவும் கடுமையான விதிகள் மற்றும் போர்க் கைதிகளைக் கையாளுதல், அப்பாவி மக்கள் மற்றும் சொத்துக்களை எவ்வாறு கையாளுவது பற்றிய விதிகளுக்குட்பட்டது.[37]

## நீதி மற்றும் நேர்மை

அநீதி மற்றும் நேர்மையின்மை தீவிரவாத மற்றும் வன்முறையான சித்தாந்தங் களை வளர்க்கிறது. இஸ்லாம் அனைத்து மக்களின் நம்பிக்கைகளையும் பொருட்படுத்தாமல் நீதி மற்றும் நேர்மையை நிலைநாட்டுமாறு கட்டளையிடு கிறது. திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான், (அல் குர்ஆன் 60:8)

**மார்க்கம் காரணமாக எவர்கள் உங்களுடன் போர் புரியவில்லையோ, உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லையோ அவர் களிடம் நல்ல விதமாகவும் நியாயமாகவும் நீங்கள் நடந்துகொள் வதை அல்லாஹ் தடுப்பதில்லை. நிச்சயமாக அல்லாஹ் நேர்மை யானவர்களை நேசிக்கிறான்.**

இந்த கொள்கைகளின் பின்னணியில், தீவிரவாதம் மற்றும் வன்முறை இஸ் லாமியக் கொள்கைகளில் அறியாமை, மதத்தில் மிகுதியான வைராக்கியம் அல் லது மார்க்கத்தைதவிர வேறு வகையான தூண்டுதல் ஆகியவற்றால் மட்டுமே ஏற்படக்கூடும். உலகில் இன்று நாம் காணும் வன்முறைகள் அடிப்படையில் அரசியல் நோக்கம் கொண்டவை, மதத்தின் பெயர் அடிப்படை நோக்கங்களை மறைப்பதற்காகவும் மக்கள் ஆதரவை திரட்டுவதற்காகவும் பயன்படுத்தப்பட் டாலும் மதங்கள் அல்லது சமய உட்பிரிவுகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பினும். இந்த மோதல்களுக்கும் வன்முறைகளுக்கும் காரணமானது அதி காரப் போராட்டம், ஆதிக்கம், செல்வம், பேராசை, பழிதீர்க்கும் மற்றும் வெளி நாட்டு இராணுவத் தலையீடுகளின் விளைவுகள். இஸ்லாம் ஒரு மதம் என்ற வகையில் இன்று மதத்தின் பெயரால் உலகில் நடந்துவரும் போர்கள் மற்றும் பிற வன்முறைகளில் குற்றமற்றது.

# இஸ்லாமிய ஜிஹாத்

'ஜிஹாத்' என்ற சொல் ஒன்றை அடைவதற்காக கடுமுயற்சி மேற்கொள்ளுதல் அல்லது எதிர்த்துப்போராடுதல் எனும் பொருள்தரும் அரபிச்சொல். இஸ்லாமியச் சூழலில் இதன் பொருள் அல்லாஹ்வின் வழியில் கடுமையான முயற்சி மேற்கொள்ளுதல், அதாவது நம் இறைவனுக்காக சேவையில் முயற்சி செய்வது. ஃகுர்ஆனில் பல வசனங்கள் அல்லாஹ்வின் பாதையில் முயற்சி செய்யுமாறு விசுவாசிகளை அழைக்கின்றன. உதாரணமாக, (அல்குர்ஆன் 5:35).

> **இறைநம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் அவன் பக்கம் நெருங்கிச்செல்ல வழிகளைத்தேடுங்கள், அவனுடைய வழியில் கடுமையாகப் பாடுபடுங்கள்; (அதாவது ஜிஹாத்) நீங்கள் வெற்றி பெறக்கூடும்.**

எனவே, அல்லாஹ்வின் பொருத்தத்தையும் அங்கீகாரத்தையும் பெறும் நோக்கத்துடன் செய்யப்படும் விசுவாசியின் ஒவ்வொரு செயலும் ஜிஹாத் ஆகும்; இது வழிபாடு, தானதர்மம், இச்சைகளைக் கட்டுப்படுத்துதல், கல்வியறிவை நாடுதல், வாழ்வாதாரங்களைத் தேடுதல், குடும்பங்களாக வாழ்தல், நல்லதை ஏவி தீயதைத்தடுத்தல் போன்றவை இதில் அடங்கும்.

வரலாற்று நூல்களிலும் நவீன ஊடகங்களிலும், 'ஜிஹாத்' என்ற சொல் பெரும்பாலும் சண்டை அல்லது வன்முறையுடன் தொடர்புபடுத்திக்கூறப்படுகிறது. இது தவறானது, ஏனெனில், அரபியில் சண்டை ஃகிதாலுன் எனப்படும் ஜிஹாத் அல்ல. ஜிஹாத் என்ற பெயரில் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. வரலாற்று நூல்களில் திரும்பத்திரும்ப இதுவரை கூறப்பட்ட விசித்திரமான புனைக்கதையாகும் இது. இஸ்லாம் உலகெங்கிலும் அதன் மாண்புமிகு கொள்கைகள் மற்றும் மதிப்புக்கூறுகளால் பரவியது, வாளால் அல்ல. எப்போதுமே இஸ்லாமிய சிலுவைப்போர் அல்லது சமயத்துறை சார்ந்த சண்டையாக இருந்ததில்லை. இஸ்லாமிய கலைச்சொற்களில் புனிதப்போர் என்ற சொல் இல்லவே இல்லை. இதன் வேர்கள் 1095 ஆம் ஆண்டில் நகர்ப்புற போப் II -ஐ சென்றடைகின்றன, ஐரோப்பாவிலுள்ள அனைத்து கிறித்தவர்களையும் புனித பூமியை மீட்டெடுக்க முஸ்லிம்களுக்கு எதிரான "புனிதப் போரில்" சேர அழைப்புவிடுத்தார்,.. ஆரம்ப காலங்களில் இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிம்கள் போர்களில் ஈடுபட்டனர், ஆனால், அந்தப்போர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற அல்லது கொடுங்கோன்மையை நீக்கி மனசாட்சியின் சுதந்திரம் மற்றும் விசுவாசத்தில் விருப்பத்தெரிவு ஏற்படுத்துவற்காகவே இருந்தன. அவை உண்மையில் விடுதலைப் போர்கள், மதமாற்றத்தின் போர்களல்ல. உதாரணமாக முஸ்லிம்கள் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக இந்தியாவை ஆண்டார்கள், இருப்பினும், மக்களை இஸ்லாத்தை ஏற்குமாறு கட்டாயப்படுத்தும் பிரச்சாரம் ஒருபோதும் இருந்ததில்லை; இன்றுவரை இந்தியா ஒரு இந்து பெரும்பான்மை நாடாகவே உள்ளது.

ஜிஹாதிகள் மற்றும் 'ஜிஹாதிசம்' எனும் சொற்கள் இஸ்லாமிய தீவிரவாத போராளிக் குழுக்களைக்குறிப்பிட மற்றும் அவற்றின் சித்தாந்தங்களை விவரிக்க

ஊடகங்களில் பயன்படுத்தப்படும் நவீன சொற்கள். இந்த சொற்கள் ஒரு நவீன கண்டுபிடிப்பு மற்றும் இஸ்லாத்தில் எந்த வரலாற்றுச் சான்றுகளோ பொருளோ இல்லாதவையாகும்.

எந்தவொரு வன்முறையையும் இஸ்லாம் அனுமதிக்காது. முஸ்லிம்கள் தற் காப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்ற மட்டுமே போராட அனுமதிக்கப்படுகிறார் கள். இந்த சூழ்நிலையில் போர் ஜிஹாத் எனக்கருதப்படும், ஏனெனில், ஒருவர் தற்காப்புக்காக அல்லது ஆக்கிரமிப்பை அகற்ற முழு வலிமையுடன் முயற்சிக் கிறார். அல்லாஹ் ஃகுர்ஆனில் கூறுகிறான் (அல் குர்ஆன் 2:193).

**மக்கட்கொந்தளிப்பு ஒழிந்து மார்க்கம் அல்லாஹ்வுக்கே உரித்தாகும் வரையிலும் அவர்களோடு தொடர்ந்து போராடுங்கள், ஆனால், அவர் கள் விலகிக்கொண்டால் அக்கிரமக்காரர்களைத்தவிர வேறு எந்த போர் நடவடிக்கைகளும் அனுமதிக்கப்பட்டதல்ல.**



**துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைந்துள்ள வரலாற்று சுல்தான் அஹ்மத் மஸ்ஜித். தொழுகைக்கான அழைப்புக்குப் பிறகு முஸ்லிம்கள் இன்றும் மஸ் ஜிதின் சிவப்புக் கம்பளத்தின்மீது தொழுகையில் மண்டியிடுகிறார்கள். நீல நிற மஸ்ஜித் என்று பிரபலமாக அறியப்படும் பள்ளிவாசல் கிபி. 1609 மற்றும் 1616 ஆம் ஆண்டுகளுக்கிடையில் சுல்தான் அஹ்மத் I ஆட்சிக்காலத்தில் கட்டடப்பட் டது. அப்பள்ளியின் மத்ரசா மற்றும் விடுதியில் சுல்தான் அஹ்மதின் கல்லறை உள்ளது.**

# இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள்

ஷரீஃஅத் என்பது இறைவனுடைய நாட்டத்திற்கு இணங்க மனித வாழ்க்கை முழுவதும் ஒழுங்குபடுத்தும் ஒரு விரிவான சட்டத்தொகுப்பு. இது அடிப்படை நம்பிக்கைகள் (திருமறைக்கோட்பாடு), வழிபாட்டு முறைகள், நெறிமுறைகள், சமூக-பொருளாதாரக்கொள்கைகள் மற்றும் குற்றவியல் சட்டங்கள் ஆகிய வற்றை உள்ளடக்கியது. ஷரீஃஅத் என்ற சொல்லுக்கு 'தெளிவான பாதை அல் லது வழி என்று பொருள், எனவே, இஸ்லாமிய சூழலில் இது இரட்சிப்பின் வழி மற்றும் நிரந்தர வெற்றியைக் குறிக்கிறது. ஒரு முஸ்லிமாக இருப்பது ஷரீஃஅத் சட்டங்களின் அடிப்படையில் வாழவேண்டும், ஏனெனில், அது தெய்வீக வாழ்க்கை வழி.

இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படைக் கொள்கைகள் குர்ஆன் மற்றும் நபி மொழிகளிலிருந்து பெறப்பட்டவை. இக்கொள்கைகளை முறையாக அமல்படுத் துவது மற்றும் எதிர்கொள்ளப்படும் சூழ்நிலைகளில் தீர்வுகண்டறியும் வகை யில் சட்ட மற்றும் மார்க்கத்தின் அடிப்படையில் தீர்வுகளை உய்த்துணர்ந்து, மத அறிஞர்களின் ஒருமித்த கருத்தின் மூலம் ஷரீஅத் மேலும் வரையறுக்கப் படுகின்றது, (அரபியில் இஜ்மா).

மனித தீர்ப்பால் மட்டுமே முழு மனித குலத்திற்கும் உண்மையில் நியாய மான மற்றும் நடுநிலையான வகையில் வழிநடத்த முடியாது. ஏனென்றால், மனிதர்களின் தீர்ப்பு தன்முனைப்பு, தப்பெண்ணம், ஆணவம், ஆசைகள், சுய நலன், உணர்ச்சிகள், குறுகிய பார்வை மற்றும் பல்வேறு மனித பலவீனங்களால்



உயர் நீதிமன்றம், மஸ்கட், ஓமான்

எதிர்மறையாக பாதிக்கப்படுகிறது. சீரான வழிகாட்டுதல், உண்மையான மற்றும் நியாயமான நடுநிலையான மனிதர்களின் அணுகுமுறைக்கான வழியினை நிர்ணயிப்பதில் படைப்பாளனைத்தான் நாம் சார்ந்திருக்கிறோம், இதுவே இஸ்லாமிய ஷரீஅத். இது மனிதர்களின் நடைமுறை, கண்ணியம், மனப்பாங்கு, நம்பிக்கை, குடும்பம் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முழுமையான நெறிமுறையாகும்.

ஷரீஅத் பெரும்பாலும் இஸ்லாமிய விரோத வெளிப்பாடாக இஸ்லாமிய சட்டங்கள் பெண்களை அடிமைப்படுத்துதல், குழந்தை திருமணம், மனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை இஸ்லாம் அங்கீகரிக்கிறது என்று கூறப்பட்டு வருகின்றது. இந்த வகையான தவறான கருத்துக்கள் ஷரீஅத்தினைப் பற்றிய அறியாமையின் காரணமாகவே வெளிவருகின்றன. ஷரீஅத் ஒரு சீரான நெறிமுறை என்ற வகையில் ஷரீஅத் அதன்மீது எந்தத் தீமைகளுக்காக தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றதோ அதே தீமைகளையும் நீக்குவதற்கான, குற்றங்களைத் தடுக்கும் வழியாக மட்டுமல்லாமல் மனித இனத்தினர் அனைவரும் ஆளாக்கக்கப்பட்டுவரும் அனைத்து தீமைகளுக்கான தீர்வாகும். உதாரணமாக, ஷரீஅத்துதான் பாலின சமத்துவம், பெற்றோர் மற்றும் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் உரிமைகள், ஏழைகள் மற்றும் நலிந்தவர்களின் உரிமைகள், போர் நடவடிக்கைகள் மற்றும் போர்க் கைதிகளை மனிதாபிமான முறையில் நடத்துவது, நியாயமான வர்த்தகக் கொள்கைகள், மத சகிப்புத் தன்மை, சமூக ஆசாரம், மாநில நிர்வாகம் மற்றும் பலவற்றிற்குத் தொடர்பான சட்டங்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

பின்வருபவை ஃகுர்ஆனில் உள்ள வசனங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு, இந்த வசனங்களின் அடிப்படையில்தான் வர்த்தகம் குறித்த நியாயமான மற்றும் நேர்மையான நெறிமுறைகள் வருவித்து இஸ்லாமிய ஷரீஅத் உருவாக்கப்பட்டுள்ளது, (அல்ஃகுர்ஆன் 26:181-183).

أَوْفُوا۟ ٱلْكَيْلَ وَلَا تَكُونُوا۟ مِنَ ٱلْمُخْسِرِينَ ۝
وَزِنُوا۟ بِٱلْقِسْطَاسِ ٱلْمُسْتَقِيمِ ۝
وَلَا تَبْخَسُوا۟ ٱلنَّاسَ أَشْيَآءَهُمْ وَلَا تَعْثَوْا۟ فِى ٱلْأَرْضِ مُفْسِدِينَ ۝

**நிறைவாக அளந்து கொடுங்கள், யாருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தாதீர்கள். மேலும், சரியான தராசு கொண்டு எடைபோடுங்கள். மக்களுக்கு அவர்களுடைய பொருள்களை குறைத்துக்கொடுக்காதீர்கள். பூமியில் அராஜகம் விளைவித்துக்கொண்டு திரியாதீர்கள்.**

# இஸ்லாத்தில் பிரிவுகள்

நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலும், அவர்களுடைய மறைவுக்குப்பின் முதல் மூன்று தலைவர்கள் (க்ஹலீபாக்கள்) காலத்திலும், ஆட்சியதிகாரத்தில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் முஸ்லிம்கள் ஒரே சமூகமாக இருந்தனர், குறிப்பாக மூன்றாம் க்ஹலீபா ஆட்சியில் (உத்மான் இப்னு அஃஃபான் (ர) கி.பி. 644-656.). அரசியல் கருத்துவேறுபாடு, இறுதியில் நான்காம் க்ஹலீஃபா ஆட்சியில் (அலி இப்னு அபீ தாலிப் (ர) கி.பி. 656-661). கிளர்ச்சியும் வெடித்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட மோதல்கள் மற்றும் போரின் விளைவாக மூன்று பிரிவு களாகப் பிரிதனர்; அலி (ர) அவர்களுடன் சண்டையிடுபவர்கள், அலி (ர) மற்றும் அவரது எதிரிகளுக்கு இடையிலான நடுவர் தீர்ப்புக்கு உடன்பாடு கொண்டவர் கள் மற்றும் ஆரம்பத்தில் அலி (ர) அவர்களுடன் இருந்தவர்கள், ஆனால், அலி (ர) அவர்களுடைய எதிரிகளுடனான நடுவர் தீர்ப்பை ஏற்காதவர்கள். ஆக, வரலாற்று ரீதியாக, முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட பிளவுகள் அரசியல் ரீதியானவை. இஸ்லாமிய வரலாற்றில் இந்தக்கட்டத்தில் அரசியல் அதிகாரம் சட்ட அதிகாரத் திலிருந்து பிரியத்தொடங்கியது; பல முஸ்லிம் அறிஞர்கள் மூன்று முகாம்க ளில் தோன்றினர், அவர்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் ஷரீஅத் சட்டங்களை தீர்மானிக்கும் கொள்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் வடிவம் கொடுத்தனர். சிறந்த முஸ்லிம் சட்ட வல்லுநர்கள் தோன்றினர்: அவர்களுள் முக்கியமானவர்கள், ஜாபிர் பின் ஜ்ஸைத் (கி.பி. 639-709), அபூ ஹனிஃபா (கி. பி. 699-767), ஜாஃபர் சாதிஃக் (கி.பி. 702-765), மாலிக் (கி.பி. 711-795), ஷாஃபிஈ (கி. பி. 767-820) மற்றும் இப்னு ஹம்பல் (கி.பி. 780-855). இந்த அறிஞர்கள் ஒவ் வொருவரும் இமாம்கள் என்று அழைக்கப்பட்டனர், இது சிறந்த மார்க்க மற்றும் முதன்மையான சட்ட வல்லுநர்களுக்கான மரியாதைக்குரிய பட்டமாகும், சட்டங் களையும் சட்ட தீர்ப்புகளையும் உய்த்துணர்வதற்கான ஒரு வழிமுறையினை உருவாக்கி, பின்பற்றுபவர்களின் ஒரு வட்டத்தையே உருவாக்கினர். 10 ஆம் நூற்றாண்டுக்குள், இந்த மாபெரும் அறிஞர்களால் வகுக்கப்பட்ட கொள்கைகள் நன்கு வரையறுக்கப்பட்ட சட்டவியல் மத்ஹபுகள் வடிவெடுத்ததோடு அறிஞர் களின் தனிப்பெரும் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டது. இவ்வகையில், இந்த இமாம்களில் யாரும் எந்தவொரு தனித்துவமான மத்ஹபையும் உருவாக்க விரும்பவில்லை என்றாலும், ஜாபீர் பின் ஜ்ஸைதின் மத்ஹபு இபாதி என்றும், அபூ ஹனிஃபா அவர்களுடைய மத்ஹபு ஹனஃபி என்றும், ஜாஃபர் சாதிக் அவர் களுடைய மத்ஹபு ஷியா என்றும் மாலிக் அவர்களுடைய மத்ஹபு மாலிகி என்றும், ஷாஃபிஈ அவர்களுடைய மத்ஹபு ஷாஃபிஈ என்றும் இப்னு ஹம்பல் அவர்களுடைய மத்ஹபு ஹம்பலி என்றும் அறியப்பட்டது. அடுத்த மூன்று நூற்றாண்டுகளில், சாதாரண முஸ்லிம்களும் ஒரு குறிப்பிட்ட மத்ஹபைக் கடைப்பிடிக்கத் துவங்கியதோடு சட்ட மற்றும் மார்க்கச் சட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு குறிப்பிட்ட மத்ஹபையே பற்றுறுதியுடன் கடைபிடிக்கும் வழக்கம் நடைமுறையில் வந்தது.

இந்த சட்டவியல் மத்ஹபுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டபோதிலும் முஸ் லிம்கள் அனைவரும் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் அருளப்பட்ட

திலிருந்து எந்த மாற்றமும் இல்லாமல் நிலைத்திருக்கின்ற பொதுமறையான திருக்ஃகுர்ஆனின் அடிப்படையிலும் முஹம்மது (ஸல்) அவர்களுடைய நபி மொழிகளின் அடிப்படையிலும் ஒன்றுபட்டுள்ளனர். உலகெங்கிலும் உள்ள முஸ் லிம்கள் நம்பிக்கை மற்றும் மார்க்கத்தின் கொள்கைகளில் வேறுபடுவதில்லை மற்றும் தொழுகை மற்றும் புனித யாத்திரை போன்ற மதச்சடங்குகளை ஒன்றாந் தன்மையுடனும் ஒற்றுமையுடன் நிறைவேற்றி வருகின்றனர்.

மார்க்கத்தை சமய உட்பிரிவுகளாகப் பிரிப்பதை இஸ்லாம் தடைசெய்கிறது என் பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அல்லாஹ் ஃகுர்ஆனில் கூறுகிறான் (அல் ஃகுர்ஆன் 3:103).

> **நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை இறுகப்பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள், பிரிந்துவிடாதீர்கள்.**

இந்தக் கட்டளையின் உள்ளுணர்வினால், அனைத்து சட்டவியல் மத்ஹபுகள் பல நூற்றாண்டுகளாகவே ஒற்றுமையுடன் ஒரே சமூகமாக வாழ்ந்துவருகின்ற னர். வரலாற்றில் நாம் கண்ட துரதிர்ஷ்டவசமான முஸ்லிம் மோதல்கள் மற் றும் சமீப காலங்களில் வடிவெடுத்தவைகளுக்கு மார்க்கத்துடன் எந்த தொடர்பும் இல்லை, ஆனால், அவையனைத்துமே நிலவியல் சார்ந்த அரசியல் போராட்டங் களைச் சார்ந்தவை.



**பழமை வாய்ந்த நகரமான டமாஸ்கஸில் அமைந்துள்ள டமாஸ்கஸின் பெரிய மஸ்ஜித் எனப்படும் உமையாத் மஸ்ஜித் உலகின் மிகப்பெரிய மற்றும் பழமை யான மஸ்ஜிதுகளில் ஒன்றாகும். இது சில முஸ்லிம்களால் இஸ்லாத்தின் நான்காவது புனிதமான இடமாக கருதப்படுகிறது.**

# இஸ்லாத்தில் அடிப்படை மனித உரிமைகள்

அல்லாஹ்வின் படைப்புகளில் மனிதகுலம் கண்ணியமும் மரியாதையும் பெற்று விளங்குகிறது. அல்லாஹ் ஃகுர்ஆனில் கூறுகிறான் (அல்ஃகுர்ஆன் 17:70).

**நாம் ஆதத்தின் வழித்தோன்றல்களுக்கு கண்ணியம் அளித்துள்ளோம், மேலும், தரையிலும் கடலிலும் அவர்களுக்கு வாகனங்களை வழங்கினோம். தூய பொருள்களிலிருந்து அவர்களுக்கு ஆகாரம் வழங்கினோம், மேலும், நாம் படைத்த பெரும்பாலான படைப்புகளைவிட அவர்களுக்கு அதிகச் சிறப்புகளையும் வழங்கினோம்.**

இந்த கண்ணியத்தை மதித்து பாதுகாப்பதில், இஸ்லாம் அனைத்து மனிதர்களுக்கும் அவர்களின் நம்பிக்கை, இனம் அல்லது அந்தஸ்தையும் கருத்தில் கொள்ளாமலேயே அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. திருக்ஃகுர்ஆனில் பரிந்துரைக்கப்பட்டுள்ள இஸ்லாத்தின் முக்கிய அடிப்படை உரிமைகள் பின்வருமாறு:

1. ஆன்மாவின் புனிதத்தன்மையும் வாழும் உரிமையும். பிரிவு 15 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ள வசனத்துடன் 5:32 மேலும், அல்லாஹ் கூறுகிறான்.

   **...வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொல்லாதீர்கள் ... மேலும் அல்லாஹ் கண்ணியத்திற்குரியதாக்கிய எவ்வுயிரையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்கள், நீங்கள் சிந்தித்துச் செயல்படவேண்டும் என்பதற்காக இவ்வாறு அல்லாஹ் உங்களுக்கு அறிவுறுத்துகிறான் (அல்குர்ஆன் 6:151).**

2. வாழ்க்கையின் அடிப்படை தேவைகளுக்கான உரிமை. சக மனிதர்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகள் இருப்பதை முஸ்லிம்கள் உறுதி செய்வது கடமையாகும்.

   **மேலும், அவர்களுடைய செல்வங்களில் யாசிப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் உரிமையுண்டு,. (அல்குர்ஆன் 51:19).**

   ஏழைகளுக்கு உதவுவதும், தேவைப்படுபவர்களைக் கவனிப்பதும் ஒரு அதரவுச்செயல் அல்ல, மாறாக, அது ஏழைகள் மற்றும் தேவைகளையுடையவர்களின் உரிமை.

3. அதன் அனைத்து அம்சங்களிலும் சுதந்திரத்திற்கான உரிமை,

   **ஆயினும், அவன் கடினமான மலைப்பாதையைக் கடந்துசெல்லத் துணியவில்லை. கடினமான அந்த மலைப்பாதை எதுவென்று உமக்குத் தெரியுமா? அதுதான் ஒரு அடிமையை விடுவிப்பதாகும். (அல்ஃகுர்ஆன் 90:11-13).**

அடிமைத்தனம் பல வடிங்களைக்கொண்டுள்ளது. அவற்றில் தனியொருவர் மற்றும் பொருளாதார அடிமைத்தனம், கொத்தடிமையான கட்டாய உழைப்பு, பாலியல் வன்கொடுமை மற்றும் பிறவகையிலான சுரண்டல்களும் அடங்கும்

முஹம்மது (ஸல்) அவர்கள்

> **தீர்ப்பு நாளில் மூன்று வகையான மக்களுக்கு எதிராக நான் ஒரு வாதியாக இருப்பேன். இந்த மூவரில், சுதந்திரமான ஒரு மனிதனை அடிமைப்படுத்தியவர் ஒருவர்.**

இவ்வாறு, இஸ்லாம் 7 ஆம் நூற்றாண்டில் அடிமைத்தனத்தை ஒழித்தது, ஆனால், மேலைநாடுகளில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அடிமைத் தனம் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.[38]

4. எல்லா மனிதர்களின் சமத்துவம்: எல்லா மக்களும் சமமானவர்களாகக் கருதப்படுகிறார்கள், இறைவனுக்கு முன்னால் சிறப்புக்கான ஒரே தகுதி பண்பின் தூய்மை மற்றும் உயர்ந்த ஒழுக்கப்பண்புகள்.



**சீனாவின் ஸியான்நகரத்தின் பெரிய மஸ்ஜித். கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் சீனாவில் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று, சீனாவில் 20 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்கள் உள்ளனர்.**

**மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம், பிறகு, நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாக வும் அமைத்தோம். நிச்சயமாக, இறைவன் பார்வையில் உங்களில் அதிக கண்ணியமானவர்கள் உங்களில் அதிக இறையச்சம் கொண்ட வர்கள்தாம். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக வும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான் "(அல்ஃகுர்ஆன் 49:13).**

5. சமுதாயத்தில் ஒருவரின் சமுதாயப் படிநிலையைப் பொருட்படுத்தாமல், அனைத்து சமூக மற்றும் பொருளாதார விவகாரங்களிலும் நீதி மற்றும் நியாயத்திற்கான உரிமை.

**இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் நீதியைக் கடைபிடிப்பவரா கவும் அல்லாஹ்வுக்கு சான்று வழங்குபவராகவும் நீதிக்காக உறுதி யாக நிற்கவும், அது உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, அல் லது நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக, இருந்தாலும் சரியே, அவர் செல்வந்தவராகவோ ஏழையாகவோ இருந்தாலும் சரியே, ஏனெனில் அல்லாஹ் அவர்கள் நலனில் உங்களைவிட அதிக அக் கறை உள்ளவனாக இருக்கின்றான். எனவே, உங்கள் மன இச்சை களைப் பின்பற்றி நீதி தவறிவிடாதீர்கள், நீங்கள் உண்மைக்குப் புறம் பாக சாட்சி சொன்னாலும், சாட்சியளிக்காமல் விலகிச்சென்றாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்யும் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாக இருக்கினறன். (அல்குர்ஆன் 4:135).**

6. தனிநபரின் மரியாதை, கண்ணியம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றின் பாதுகாப்பு.

**இறைநம்பிக்கையாளர்களே! எந்த ஆண்களும் மற்ற ஆண்களைப் பார்த்து பரிகாசம் செய்யவேண்டாம், ஒருவேளை அவர்கள் இவர் களைவிடச் சிறந்தவர்களாக இருக்கலாம்: எந்தப் பெண்களும் மற்ற பெண்களைப் பார்த்து பரிகாசம் செய்யவேண்டாம், ஒருவேளை அவர் கள் இவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கலாம்: நீங்கள் ஒருவரை யொருவர் குத்திப்பேசாதீர்கள், ஒருவருக்கொருவர் மோசமான பட் டப்பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள்: இறைநம்பிக்கை கொண்ட பின்னர் மோசமான பெயர்களைச் சூட்டுவது மிகவும் கெட்ட விஷய மாகும். எவர்கள் இந்த நடத்தையைக் கைவிடவில்லையோ அவர் கள்தாம் (உண்மையில்) கொடுமைக்காரர்கள் (அல்குர்ஆன் 49:11).**

மேலும், வசனம் 49:12 ல் அல்லாஹ் கூறுகிறான்,

**இறைநம்பிக்கை கொண்டோரே! அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்துவிடுங்கள், ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக் கின்றன. மேலும், ஒருவருக்கொருவர் உளவு பார்ப்பதில் ஈடுபடாதீர் கள். மேலும், உங்களில் ஒருவர் மற்றவரைப்பற்றி புறம் பேசவேண்**

**டாம். உங்களில் எவரேனும் இறந்துவிட்ட தன் சகோதரனின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? இல்லை, நீங்களே அதனை வெறுக்கிறீர்கள். ஆனால், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்: நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை மன்னிப்பவனாகவும், கிருபையாளனாகவும் இருகிறான்.**

7. கருத்துச் சுதந்திரம் மற்றும் எது சரியானது என்று பேசுவது.

**இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருகின்றீர்கன். அவர்கள் நன்மையைப் புரியுமாறு ஏவுகிறார்கள், தீமையிலிருந்து தடுக்கிறார்கள்...(அல்குர்ஆன் 9:71).**

மேலும், வசனம் 4:148 ல் அல்லாஹ் கூறுகிறான்:

**அநீதி இழைக்கப்பட்டவனைத்தவிர வேறு யாரும் தீங்கான சொற்களை வெளிப்படையாக பேசுவதை அல்லாஹ் விரும்புதில்லை. மேலும், அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கிறான்.**

8. விசுவாச நம்பிக்கைகளின் சுதந்திரம் மற்றும் ஒருவரின் விசுவாசக் கொள்கைகளை கடைபிடிக்கும் சுதந்திரம். இஸ்லாத்தின் உண்மையின் புறம் மனிதகுலத்தினரை அழைப்பது தங்கள் கடமை என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். இருப்பினும், யாரையும் ஒரு நம்பிக்கையின்பால் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை, ஏனென்றால் நம்பிக்கை என்பது ஒருவரின் மனமார மெய்மையில் பற்றுறுதிகொண்டு நேர்மையுடன் நம்பிக்கை கொள்வதாகும். அல்லாஹ் கூறுகிறான் ...(அல்குர்ஆன் 2:256).

**மார்க்கத்தில் யாதொரு கட்டாயமோ நிர்ப்பந்தமோ இல்லை. தவறான வழியிலிருந்து நேரானவழி தெளிவாக பிரிக்கப்பட்டுவிட்டது.**

இஸ்லாத்தின் இந்த விசுவாச நம்பிக்கை சுதந்திரம் திருக்ஃகுர்ஆனில் பல வசனங்களில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.[39]

இந்த இஸ்லாமிய மதிப்புக்கூறுகளும் ஃகுர்ஆனிலும் நபிமொழிகளிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளவை உலகளாவியவை மற்றும் அவை மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தின் அத்தியாவசிய கூறுகளாக இருக்கின்றன.

# இஸ்லாத்தில் கலாச்சார பன்முகத் தன்மை

மக்களின் பழக்கவழக்கங்கள், இனம், மொழிகள், உடை, உணவு, கலைகள், நாட்டுப்புறக்கதைகள் மற்றும் பல்வேறு கலாச்சார வெளிப்பாடுகள் ஆகியவற்றில் உள்ள பன்முகத்தன்மையை இஸ்லாம் ஒப்புக்கொள்கிறது, இது முறையானது மட்டுமல்ல, அல்லாஹ்வின் அருட்கொடைகளின் அடையாளமாகும். இருப்பினும், இஸ்லாமிய போதனைகள் மற்றும் கொள்கைகளுக்கு முரணான எந்த ஒரு கலாச்சாரத்தின் அம்சங்களையும் இஸ்லாம் ஏற்கவுமில்லை, கண்டிக்கவும் செய்கிறது. அல்லாஹ் கூறுகிறான்.

> **வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும், உங்கள் மொழிகளும் உங்கள் நிறங்களும் மாறுபட்டிருப்பதும் அவனுடைய சான்றுகளில் உள்ளவையே. நிச்சயமாக, இவற்றிலெல்லாம், அறிவுடையோருக்கு நிறைய சான்றுகள் உள்ளன! " (அல்குர்ஆன் 30:22)**

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்;

> **மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம், பிறகு, நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். நிச்சயமாக, இறைவன் பார்வையில் உங்களில் அதிக கண்ணியமானவர்கள் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்கள்தாம். நிச்சயமாக, அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாகவும், தெரிந்தவனாகவும் இருக்கின்றான் "(அல்ஃகுர்ஆன் 49:13)**

நவீன உலகமயமாக்கப்பட்ட உலகில், பல்வேறு இன, குலமரபு மற்றும் கலாச்சார பின்னணியிலிருந்து வரும் முஸ்லிம்களில் காணப்படும் வேறுபாடுகளை மக்கள் அடிக்கடி கவனத்தில் கொள்கின்றனர். இஸ்லாமிய உலகில் நிலவும் கலாச்சார பன்முகத்தன்மையை உணர்த்துவதற்காக கலாச்சாரம் எது மார்க்கம் எது மற்றும் மார்க்கத்திற்கும் கலாச்சாரத்திற்கும் இடையிலான இடைவிளைவு ஆகியவற்றை வேறுபடுத்திப் பார்ப்பது முக்கியமானதாக ஆகிவிடுகிறது.

உலகெங்கிலும் உள்ள கலாச்சாரங்களில் இஸ்லாம் தன்னை வெளிப்படுத்தும் விதத்தில் பல வேறுபாடுகள் உள்ளன. இதில் எவரும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு உலகளாவிய மார்க்கமாக இருப்பதால், இஸ்லாம் உலகின் ஒவ்வொரு மூலையிலும் பரவியுள்ளது. இந்த பெருக்கம் கலாச்சாரங்களின் பன்முகத்தன்மையை உள்ளடக்கியது, இவை அனைத்தும் இஸ்லாமிய கட்டமைப்பிற்குள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதாவது, ஆதரவான நாட்டையும் பொருட்படுத்தாமல், இஸ்லாத்தின் அடிப்படையான - நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட நடைமுறையின் இன்றியமையாதவைகள்- வழக்கமாகக் கொண்டிருக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் பொது உடன்பாட்டுக்கூறு என்ற வகையில் செயல்படுகின்றன.

உதாரணமாக, முஸ்லிம்கள் அனைவரும் ஒரே இறைவன்மீது நம்பிக்கை கொள்கிறார்கள். அவர்கள் வானவர்களை நம்புகிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே

ஃகுர்ஆனைப் ஓதி அதன் போதனைகளை ஏற்று நடக்கிறார்கள். அவர்கள் அனைவரும் முஹம்மது (ஸல் அவர்கள் மீது நம்பிக்கை வைத்து பின்பற்றுகிறார்கள், மரணத்திற்குப்பின் வாழ்க்கையையும், நியாயத்தீர்ப்பு நாளில் தனிப்பட்ட பொறுப்புணர்வையும் நம்புகிறார்கள். அவர்கள் அனைவரும் இறைவன் விதித்த விதியையும் நம்புகிறார்கள். இஸ்லாத்தின் ஐந்து தூண்களான கடமைகளை நிறைவேற்றுவது உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களுக்கும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையே. நீங்கள் ஓமான் அல்லது இந்தோனேசியா அல்லது செனகல் அல்லது சீனாவில் இருந்தாலும் அதே தொழுகைக்கான அழைப்பைக் கேட்கலாம். உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் ரமஜ்தான் மாதத்தில் ஒன்றாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள், வருடாந்திர புனித ஹஜ் யாத்திரைக்காக ஒன்றாகவே மக்காஹ்விற்கு வருகிறார்கள். எனவே, இஸ்லாத்தில் கலாச்சார பன்முகத் தன்மைக்குள்ளான அடிப்படை நம்பிக்கை மற்றும் நடைமுறைகளின் ஒற்றுமையின் வலுவான உணர்வு உள்ளது.

சந்தேகமின்றி, ஒரு கலாச்சாரமற்ற வெற்றிடத்திற்குள் மதம் ஒருபோதும் இருப்பது கிடையாது. இது எப்போதுமே ஒரு கலாச்சார அமைப்பிற்குள் வெளிப்பாட்டைக் காண்கிறது. அதேநேரத்தில், பெரும்பான்மையான மக்களிடையே காணப்படும் ஒழுக்கப்பண்புகள் மற்றும் மார்க்க போதனைகளைக் குறிப்பிடாமல் கலாச்சாரங்கள் ஒருபோதும் உருவாகவோ மலர்வுறவோ முடியாது. எனவே, மத ரீதியாக நடுநிலையான கலாச்சாரங்களோ அல்லது கலாச்சாரமே இல்லாத மதங்களோ எதுவும் இல்லை[40]. எந்த நேரத்திலும் இடத்திலும் முஸ்லிம்களுக்கு (மற்றும் முஸ்லிமல்லாதவர்களுக்கு) மிகப்பெரிய சவால்களில் ஒன்று இஸ்லாத்தின் காலமற்ற மற்றும் உலகளாவிய போதனைகளையும் கொள்கைகளையும் அவற்றின்மீது பெரும்பாலும் முன்வைக்கப்படும் இந்த போதனைகள் மற்றும் கொள்கைகளின் விளக்கத்தின் கலாச்சார அடுக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாகும். முஹம்மது நபி (ஸல்) அவர்களும்கூட, ஃகுர்ஆனிலோ அல்லது சுன்னாவிலோ விவரிக்கப்படாத சூழ்நிலைகளை முஸ்லிம்கள் தவிர்க்கமுடியாமல் எதிர்கொள்வார்கள் என்று அங்கீகரித்தும் எதிர்பார்த்தும் உள்ளார்கள். விமர்சனப் பகுப்பாய்வு தேவைப்படும் நுண்ணறிவு மற்றும் உணர்திறன் வாய்ந்த சட்டவியல் அறிஞர்களின் அறிவுத்திறன் தேவைப்படும் புதிய கலாச்சார மற்றும் சட்ட சூழ்நிலைகள் எப்போதும் இருக்கும். நிச்சயமாக, நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் அனுபவித்ததைவிட உலகப் பகுதிகள் மற்றும் சகாப்தங்களில் புதிய பிரச்சினைகள் இருக்கும். எனவே, கலாச்சார நுணுக்கங்களை விளக்குவதும் பதிலளிப்பதும் முஸ்லிம்கள் எப்போதும் கையாண்டு வந்த பணிகளாகும்.

பார்வையாளர்கள் குறிப்பாக மேலை நாடுகளிலிருந்து வருபவர்கள், முஸ்லிம் சமூகங்களை மதிப்பீடு செய்யும்போது வழக்கமாகவே இரண்டு அணுகுமுறைகளில் ஒன்றை எடுத்துக்கொள்வார்கள். முதல் அணுகுமுறை, முஸ்லிம்கள் ஒரு சீரான, தனியான மற்றும் மாறாத ஒரு அமைப்பாக பார்க்கப்படுகிறார்கள். முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் வெவ்வேறு புவியியல் மற்றும் கால சூழ்நிலைகளிலும், அவர்கள் ஒரே மாதிரியானவர்கள்[41]. இந்த அணுகுமுறை நவீன முஸ்லிம் உலகில் காணக்கூடிய கலாச்சார பன்முகத்தன்மையை புறக்கணிக்கிறது. இரண்

டாவது அணுகுமுறை, முதலாவதுடன் கணிசமாக வேறுபடுகிறது. இஸ்லாம் அதன் வேதங்களிலிருந்து பிரிக்கப்பட்டு முக்கியமாக, அதைப் பின்பற்றும் மக் களுடன் அடையாளம் காணப்படுகிறது. முஸ்லிம்கள் மாறுபட்ட மக்கள் என்ற வகையில், துருக்கிய இஸ்லாம், லெபனானிய இஸ்லாம், ஓமானிய இஸ்லாம், இந்தோனேசிய இஸ்லாம் போன்ற வேறுபட்ட "இஸ்லாம்கள்" உள்ளன. இந்த பார்வையின்படி, இஸ்லாத்தின் தனியொன்றான உலகம் இல்லை, ஆனால் பல "இஸ்லாம்களின்" உலகம். இஸ்லாத்திற்கு ஆதரவான எத்தனை சூழ்நிலைகள் உள்ளனவோ அத்தனை "இஸ்லாம்கள்" உள்ளன[42]. இங்கே, கலாச்சார பன்முகத் தன்மையின் தொடரும்கோடு இஸ்லாம் தேசிய தனித்துவளங்களாக உடைக்கப் படும் காலக்கட்ட அளவிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இன்னும் சரியான அணுகு முறை, நேரம் மற்றும் இடைவெளியில் இஸ்லாத்தின் தனித்துவமான அனுப வங்களைப்பற்றி பேசுவதாகும். ஃகுர்ஆன் மற்றும் ஹதீஸின் உரை மூலங் களில் இஸ்லாம் ஒரு மதமாக பாதுகாக்கப்பட்டுள்ளது, அதில் சுன்னா (நபியின் வாழ்க்கைமுறையின் எடுத்துக்காட்டுகள்) முறையாகப் பதிவுசெய்யப்பட்டுள் ளது. உரை வடிவத்தில் இஸ்லாம் மாறாது, ஆனால் முஸ்லிம்கள் ஒரு வெற் றிடத்தில் இருப்பதில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் ஒரு குறிப் பிட்ட இடத்திலும் வாழ்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நில அமைப்பின் நிலைமை மற்றும் சூழ்நிலைகள், காலத்தின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் ஆகியவை குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து முஸ்லிம்கள் உத்வேகம் தேடும் ஒரு சூழலை வழங்குகின்றன. இந்த விஷயத்தில், "உரை" மற்றும் "சூழல்" இரண்டும் இஸ்லாத்தின் தனித்துவமான அனுபவங்கள் புதிய புரிதல் மற்றும் அதே மாறாத உரையின் நுண்ணறிவான விளக்கத்தின் மூலம் உருவாக்கப்படும் ஒரு சாத னத்தை வழங்குகின்றன.[43]

ஒரு தனி மட்டத்தில், இஸ்லாமியம் குறித்த ஒரு முஸ்லிமுடைய அனுபவம் அதன் போதனைகள் பற்றிய அவரது அறிவு, புரிந்துகொள்ளும் நிலை மற்றும் அந்த போதனைகளின் உள்மயமாக்கல் மற்றும் அந்த போதனைகள் எந்த அளவிற்கு நடைமுறையில் உள்ளன என்பதைப் பொருத்தது. இவ்வாறே, ஒவ் வொரு முஸ்லிம் சமூகமும் அதன் கால மற்றும் புவியியல் சார்ந்த காரணி களைப்பொருத்து இஸ்லாத்தை அனுபவிக்கின்றது. ஆகவே, முஸ்லிம்கள் ஒரு சீரான அமைப்புமல்ல, பல்கூட்டான "இஸ்லாம்களும்" இல்லை. மாறாக, தனி நபர்கள் மற்றும் முஸ்லிம் சமூகங்களால் இஸ்லாத்தின் தனித்துவமான அனு பவங்கள் உள்ளன. இந்த அனுபவங்கள் தவிர்க்க முடியாதவை, அவை முஸ்லிம் உலகில் நாம் காணும் கலாச்சார பன்முகத்தன்மையை விளக்குகின்றன. இந்த பன்முகத்தன்மை, உண்மையில், இஸ்லாத்தின் முக்கிய கொள்கைகளையும் போதனைகளையும் பேணுகையில் வெவ்வேறு கலாச்சாரங்களுடன் நம்பமுடி யாத அளவிற்கு மாற்றியமைக்கப்படுவதற்கு ஒரு சான்றாகும். முஸ்லிம்கள் இந்த சமநிலையை கடவுளின் உறுதி மற்றும் கருணைக்கு சான்றாக பார்க் கிறார்கள். இஸ்லாம் மிகவும் கலாச்சார பண்பு மற்றும் அது எப்போதும் ஒரு கலாச்சாரத்தை மேம்படுத்தவும் பாடுபடுகிறது. வருந்தத்தக்க வகையில், சில முஸ்லிம்கள் கலாச்சார நெறிமுறைகளை தங்களுக்கு தெளிவான அறியாமை அல்லது வரலாற்று விழிப்புணர்வு இல்லாததால் இஸ்லாமிய மூல ஆதாரங்க

ளுடன் இணைக்க மறந்துவிடுகிறார்கள் அல்லது தவறிவிடுகிறார்கள். இது நிகழும்போது, இஸ்லாத்தின் மெய்க்கருத்து மற்றும் போதனைகளுக்கு முரணான கலாச்சார பழக்கவழக்கங்கள் உருவாகி, ஒரு திசைதிருப்பப்பட்ட அல்லது அழிவுகரமான மரபு உண்மையில் இஸ்லாமியமானது என்ற தோற்றத்தை உருவாக்கலாம்[44]. இதுபோன்ற சில மோசமான கலாச்சார நடைமுறைகள் சில முஸ்லிம் சமூகங்களுக்குள் இஸ்லாத்துடன் அல்லது அதன் போதனைகளுடன் தவறாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளில் கட்டாயத் திருமணங்கள், குழந்தை திருமணங்கள், கவுரவக் கொலைகள், ஆண் குழந்தைக்கு விருப்பம் மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைவு ஆகியவை அடங்கும். இந்த நடைமுறைகள் அனைத்தும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு மாற்றமானவை, இருப்பினும் அவை தவறான கருத்துக்களை அதிகரிக்கவும் இஸ்லாத்தைப்பற்றிய எதிர்மறையான மாறா மரபுமுறையாக கையாளப்பட்டுவரும் எதிர்ச்செயல்களை வலுப்படுத்தவும் உதவுகின்றன.



**தாய்லாந்தின் நெகோன்-ஸ்ரீ-தம்மரத், ∴குர்ஆனை ஓதிக்கொண்டிருக்கும் ஒரு மஸ்ஜிதின் கல்வி மையத்தில் இளம் முஸ்லீம் மாணவர்கள்**

# மதம் ஏன் முக்கியமானது?

மதம் ஏன் முக்கியமானது என்பதற்கு ஆறு காரணங்கள் உள்ளன

1. நமது மதிப்புக்கூறுகள், நடத்தை மற்றும் செயல்கள் நமது உள்ளார்ந்த மன சாட்சியின் விதிமுறையாக நாம் நம்புவதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த விதிமுறை மரபுரிமையாகப்பெற்ற நம் கலாச்சாரத்தால் வடிவமைக்கப் பட்டுள்ளது. அந்த நம்பிக்கை எதுவாக இருந்தாலும், கலாச்சார விதிமுறை விசுவாசத்தால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒரு கலாச்சார விதிமுறை (அல்லது மட்டக்குறி) இல்லாமல் நமது வாழ்க்கையின் நோக்குநிலை குழப்பமடைந்து, சமுதாயத்தால் உணரப்படும் திசையின் உணர்வு, வெறுமை, மதிப்புகள் மற்றும் விதிமுறைகளின் முறிவுக்கு வழிவகுக்கும், இதனால் சமூக மற்றும் தனிநபரின் உளக்கோளாறு உருவாகிறது. எனவே, ஆரம்பத்தில் மதம் முக்கியமானது, ஏனெனில் இது நமது கலாச்சார நெறி மற்றும் உலகக்கண்ணோட்டத்தை வரையறுக்கும் நம்பிக்கையை வரையறுக்கிறது. சொல்லப்போனால் இது நமது சமூக மற்றும் தனிப்பட்ட ஒருமைப்பாட்டுக்கான உத்தரவாதம்.

2. இறைவனைப்பற்றிய அறிவின் ஒரே ஆதாரம் மதம்: அவன் யார், அவனுடைய பண்புகள் என்ன, அவனுடைய இயல்பு என்ன? எனவே, மதம் முக்கியமானது, ஏனெனில் மதத்தை மறுப்பது கடவுளை மறுப்பதற்கு ஒத்ததாகும்.

3. மனிதனின் புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட, ஆயினும் உண்மையான விஷயங்களைப்பற்றிய அறிவின் ஒரே ஆதாரம் மதம். மனித ஆன்மாவின் நித்திய இயல்பு, மரணத்திற்குப்பின் வாழ்க்கை, வானவர்கள் மற்றும் பலவற்றைப்பற்றிச் சொல்வது மதம்தான். இவ்வகையில், மார்க்கம் இல்லாமல் ஒருவர் நம்முடைய உடல் ரீதியான கருத்துக்கு அப்பாற்பட்ட இந்த யதார்த்தங்களை முற்றிலும் மறந்துவிடுகிறார்.

4. வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றி மதம் நமக்கு எடுத்துச்சொல்கிறது: நான் ஏன் இங்கே இருக்கிறேன்? நான் இறுதியில் எங்கே போகிறேன்? இந்த வாழ்க்கையில் நான் தேர்ந்தெடுத்ததற்கான விளைவுகள் என்ன? வாழ்க்கையில் நோக்கத்தின் இந்த உணர்வு இல்லாததால் பலர் விரக்தியில் உள்ளனர்.

5. மதம் வாழ்க்கைக்கானமுறை என வரையறுக்கப்படுகிறது; மனிதனின் கண்ணியத்தையும் கவுரவத்தையும் பாதுகாப்பையும் பண்புகாத்துப் பேணுவதையும் பாதுகாப்பு, இணக்கமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கான நிலைமைகளை உருவாக்குவதையும் நோக்கமாகக்கொண்ட வாழ்க்கை நெறிமுறையாகும். நாம் வாழ்வதற்கான பண்புத்தரங்களையும் சீரான நீதி முறையையும் மார்க்கம் வரையறுக்கிறது. மதத்தை புறக்கணிப்பது மனித தீமைகளின் முழு பட்டியலுக்கும், வழிவகுக்கிறது; சுரண்டல், அநீதி, அடக்குமுறை, பேராசை, பாகுபாடு, ஊழல், மற்றும் பட்டியல் நீண்டுகொண்டே

செல்கிறது. நம்முடைய கூட்டு நன்மைக்கு மார்க்கம் அவசியமானது.

6. இறுதியாக, மதம் முக்கியமானது, ஏனென்றால் நம்முடைய அடுத்த வாழ்க்கைக்கு நாம் எவ்வாறு தயாராகலாம் என்பதைப்பற்றி கூறுகிறது. பிரிவு 9 இல் கூறப்பட்டுள்ள வகையில், மரணத்திற்குப்பின் வாழ்க்கை என்பது ஒரு உண்மை, மேலும், அதனைத்தொடர்ந்து நிகழவிருப்பவை இந்த வாழ்க்கையில் நாம் செய்யும் தேர்வுகளைப்பொருத்தது. நம்முடைய படைப்பாளன் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறான், நம் வாழ்க்கையை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும், மறுமையில் நம்முடைய செயல்களின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்றபதையும் மார்க்கம் நமக்கு மிகத் தெளிவாகச் சொல்கிறது.

மதம் இல்லாத வாழ்க்கை என்பது வாழ்க்கையின் நோக்கம் மற்றும் நம்முடைய வாழ்க்கையைப்பற்றிய பரந்த பார்வையை மறந்துவிடுவதாகும், அத்துடன், வாழ்க்கை என்ற வகையில் வரவிருக்கும் விஷயங்களைப்பற்றிய பார்வை இல்லாத ஒன்றாகும். ஃகுர்ஆனின் பின்வரும் வசனங்கள் நமக்கு அறிவுறுத்தும் வகையில், மதத்தை ஒதுக்கித்தள்ளுவது புத்திசாலித்தனம் அல்ல.(67:6-12)

> **தங்கள் இறைவனை (மற்றும் இரட்சகனை) நிராகரிப்பவர்களுக்கு நரகத்தின் தண்டனை உண்டு. தீமை என்பது அத்தகைய இடமாகும். அவர்கள் அதில் எறியப்படும்போது, அதன் சீற்றத்தின் (பயங்கரமான) அதிர்வுகளைக் கேட்பார்கள். ஆவேசத்துடன் சுடர்விட்டெரியும் நிலையில் ஒவ்வொரு முறையும் ஒரு கூட்டம் அதில் செலுத்தப்படும்போது அதன் காவலர்கள் "எச்சரிப்பவர் எவரும் உங்களிடம் வரவில்லையா?" என்று கேட்பார்கள். அவர்கள் கூறுவார்கள்: "ஆம்: ஒரு எச்சரிப்பவர் எங்களிடம் வந்தார், ஆனால் நாங்கள் அவரை நிராகரித்து," அல்லாஹ் எந்த ஒரு தகவலையும் அனுப்பவில்லை: நீங்கள் ஒரு தீவிர மாயையைத்தவிர வேறொன்றும் இல்லை என்று கூறிவிட்டோம்.! அவர்கள் மேலும் கூறுவார்கள்: "நாங்கள் அதனைக் கேட்டிருந்தால் அல்லது எங்கள் அறிவைப் பயன்படுத்தியிருந்தால் (இப்போது) எரியும் நெருப்பின் தோழர்களில் நாம் இருந்திருக்கமாட்டோம். பின்னர் அவர்கள் தங்கள் பாவங்களை ஒப்புக்கொள்வார்கள்: ஆனால் எரியும் நெருப்பின் தோழர்களுக்கு மன்னிப்பு வெகுதொலைவில் இருக்கும்! மறைவான தங்கள் இறைவனுக்கு அஞ்சுவோரைப் பொருத்தவரை, அவர்களுக்கு மன்னிப்பும் பெரிய வெகுமதியும் இருக்கிறது.**

# ஒருவர் எவ்வாறு முஸ்லிமாக முடியும்?

இஸ்லாம் விசுவாசத்தின் ஆறு அடிப்படைகள் (அல்லது தூண்கள்) மற்றும் மார்க்கத்தின் ஐந்து கடமைகளை அடிப்படையாகக்கொண்டது, அவை இந்த புத்தகத்தின் பிரிவு 2 இல் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை ஒருவர் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொண்டவுடன், பின்வருவனவற்றை உறுதி யாக அறிவிப்பதன் மூலம் ஒருவர் முஸ்லிமாக மாறுகிறார்:

**அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹமதன் ரசூலுல்லாஹி**

**அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரிய தெய்வம் வேறில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல் லாஹ்வின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.**

இந்த உறுதிமொழி அரபியில் ஷஹாதஹ் எனப்படும், அதாவது விசுவாசத் தின் உறுதிமொழி மற்றும் வாக்குறுதி. இது முதலில் அரபிமொழியிலும் பின்னர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவுபவர்களால் புரிந்துகொள்ளப்படும் மொழியிலும் கூறப்படுகிறது.

ஒருவர் ஷஹாதஹ்வை உச்சரித்தவுடன், முஸ்லிமாகிவிட்டார், இனிமேல் நம்பிக்கை, விசுவாசத்தின் அடிப்படைகள் மற்றும் மார்க்கத்தின் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்புயையவராக ஆகிவிடுகிறார்.

ஒரு முஸ்லிம் அல்லாதவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவர் அல் லது அவள் உண்மையில் அவருடைய அல்லது அவளுடைய "பிறந்த மதம்" எனப்படும் இயல்பான மதத்திற்கு மாறுகிறார், ஏனென்றால், எல்லோரும் ஒரு முஸ்லிமாகவே பிறக்கின்றனர். அதாவது, பிறக்கும்போதே ஒவ்வொருவரும் இயல்பாகவே அல்லாஹ்வின் விருப்பத்திற்கு அடிபணிந்து, அடிப்படை ஒழுக் கத்தைப்பற்றிய விழிப்புணர்வைக் கொண்டுள்ளனர் (அரபியில் ஃபித்ரதுன்). ஒரு வர் வளரும்போது, பெற்றோர்களும் சுற்றியுள்ள கலாச்சாரமும்தான் ஒருவரை குறிப்பிட்ட மதத்திற்கு வழிநடத்தும். ஆகவே, உண்மையைத் தேடுவதும், தர்க்க ரீதியானதை ஏற்றுக்கொள்வதும், நம்பிக்கை மற்றும் மார்க்க விஷயங்களில் இயலுணர்வு கொள்வதும் தனிநபரின் பொறுப்பாகும்.

# நம்பிக்கை பற்றிய உண்மை

1. பிறப்பு வாய்ப்பை அடிப் படையாகக் கொண்ட குருட்டு நம்பிக்கை மற் றும் மூதாதையர்களைப் பின்பற்றுவது நம்பிக்கை அல்ல.
2. உண்மையான நம்பிக்கை அறிவாற்றல், பகுத்தறிவு மற்றும் தர்க்கத்தின் அடிப் படையில் இருக்கவேண் டும்.
3. ஒருவருடைய விசுவா சத்தின் அடிப்படை உறுதி யான ஆதாரத்தால் வளப் படுத்தப்படவேண்டும்.

குறிப்பு:

இஸ்லாத்தில், நம்பிக்கையும் பகுத்தறிவும் பரஸ்பரம் விலகியிருப்பவையல்ல. ஒருவர் நம்பிக்கையை நிரூபிக்கவும் பலப்படுத்தவும் தன் பகுத்தறிவைப் பயன் படுத்தவேண்டும்.

# சொற்களஞ்சியம்

**அல்லாஹ்:** படைப்பாளன் மற்றும் பிரபஞ்சத்தின் இரட்சகனுக்குரிய தனிப்பெயர். (பார்க்க பிரிவு 3)

**ஆயதுன்:** திருக்ஃகுர்ஆனிலுள்ள ஒரு வசனம். இதன் பொருள் 'இறைவனின் அத்தாட்சி'.

**க்ஹலீஃபதுன்:** முஸ்லிம் சமூகத்தின் தலைவர். இந்தச் சொல் அரபியில் 'க்ஹலீஃபதுன்' எனப்படும் இதன் பொருள் 'பிரதிநிதியாகச் செயல்படுபவர்.

**ஹதீத்ஸ்:** ஹதீஸ் (அல்லது நபிமொழி) மற்றும் சுன்னஹ் ((முறையே) நபிகள் நாயகத்தின்(ஸல்) பொன்மொழிகள் மற்றும் வாழ்க்கையின் எடுத்துக்காட்டுகள். அவை நபியவர்களின் போதனைகளின் அமைப்பை உருவாக்குகின்றன, அவை கூட்டாக 'நபியின் சுன்னஹ்' என்றழைக்கப்படுகின்றன. (பார்க்க பிரிவு 8)

**ஹஜ்:** மக்காஹ்வுக்கு முஸ்லிமகளால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் புனித யாத்திரை. (பார்க்க பிரிவு 2)

**ஹிஜ்ரதுன்:** கி.பி. 622 இல் மக்காஹ்விலிருந்து மதீனாவுக்கு முஸ்லிம்கள் ஹிஜ்ரா செய்து மேற்கொண்ட குடியேற்றம். இது ஹிஜ்ரா ஆண்டுக்குறிப்பேடு எனப்படும் முஸ்லிம்கள் பிறை சார்ந்த ஆண்டுக்கணக்கீட்டின் தொடக்கத்தைக் குறிக்கும். (பார்க்க பிரிவு 4)

**இபாதி:** இஸ்லாமியச்சட்ட மத்ஹபுகளில் ஒன்று. (பார்க்க பிரிவு 18)

**இஸ்லாம்:** படைப்பாளனான அல்லாஹ்வின் ஏகத்துவத்தின்பால் அழைக்கும் மார்க்கத்தின் பெயர் மற்றும் அவனுடைய நாட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிவதாகும். (பார்க்க பிரிவு 2)

**ஜிஹாத்:** அல்லாஹ்வுக்காக முழுமுயற்சி மேற்கொள்ளுதல். இவ்வகையில், ஒரு விசுவாசியின் ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் அங்கீகரிக்கப்படுவதையும் நோக்கமாகக்கொண்டு செய்யப்படுவது ஜிஹாத் எனப்படும். (பார்க்க பிரிவு 16)

**கஅபதுன்:** ஏக இறைவனை வணங்குவதற்காக பூமியில் கட்டப்பட்ட முதல் இறையில்லம். இது மக்காஹ்வில் உள்ள மகத்தான மஸ்ஜிதின் வளாகத்திற்குள் அமைந்துள்ளது, வழக்கமாகவே இது கருப்பு துணியால் போர்த்தப்பட்டிருக்கும்

**மதீனா:** சவூதி அரேபியாவில் மக்காஹ்விலிருந்து வடக்கே 400 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு நகரம். இது இஸ்லாத்தின் இரண்டாவது புனிதமான மஸ்ஜித், மஸ்ஜித் நபவி அமைந்துள்ள நகரம் (அரபியில் அல்மஸ்ஜித் அந்-நபவி)

**மக்காஹ்:** சவுதி அரேபியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நகரம். இங்குதான் கஅபாவும் இஸ்லாத்தின் முதல் புனிதமான மஸ்ஜித், மஸ்ஜிதுல் ஹராம் அமைந்துள்ளது, (அல்லது அரபியில் மஸ்ஜித் அல் ஹராம்).

**முஸ்லிம்:** இஸ்லாமிய மார்க்கத்தின் கொள்கைகளில் விசுவாசம்கொண்டு கட்டளைகளைப் பின்பற்றும் ஒருவர்.

**ஃகிப்லதுன்:** முஸ்லிம்கள் தொழுகையில் மக்காஹ்வை நோக்கி நிற்கும் திசை.

**ஃகுர்ஆனுன்:** நபிகள் நாயகத்திற்கு (ஸல்) அருளப்பட்ட இறுதி வேதம். (பார்க்க பிரிவு 6)

**ஷரீஅதுன்:** அடிப்படை நம்பிக்கைகள் (கோட்பாடு), வழிபாட்டு வடிவங்கள், நெறிமுறைகள், சமூக-பொருளாதாரக்கொள்கைகள் மற்றும் தண்டனைக் குறியீடு ஆகியவற்றை உள்ளடக்கிய இஸ்லாமிய விதிமுறை. (பார்க்க பிரிவு 17).

**ஷியா :** இஸ்லாமிய சட்ட ஃபிஃக்ஹுமத்ஹபுகளில் ஒன்று. (பார்க்க பிரிவு 18).

**சுன்னி:** இஸ்லாமிய சட்ட ஃபிஃக்ஹுமத்ஹபுகளில் ஒன்று. (பார்க்க பிரிவு 18).

**சூரதுன்:** குர்ஆனிலுள்ள ஒரு அத்தியாயம்.

**உம்மதுன:** முஸ்லிம் உலகிலுள்ள அனைத்து முஸ்லிம் சமுதாயம்.

# இறுதி குறிப்புகள்

1. இறைத்தூதர்களின் பெயர்கள் குறிப்பிடப்படும்போதெல்லாம், முஸ்லிம்கள் “அவர்கள்மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக” என்று கூறுவது (பார்க்க ஃகுர்ஆன் 33:56, 37:181)

2. அல்ஃகுர்ஆன் 2:132, 136, 22:78

3. விசுவாசத்தின் அடிப்படைகள் ஃகுர்ஆனில் பல வசனங்களில் அறிவிக்கப்பட்டுள்ளன, எ.கா. 2:3-4,2:285, 4:136, 54:49 மற்றும் பிற வசனங்கள்.

4. நம்முடைய செயல்களெல்லாம் இறைவனால் விதிக்கப்படுவதில்லை என்பது ஃகுர்ஆனில் தெளிவாக உள்ளது. எ.கா 4:62,, 10:44, 13:11, 18:29, 30:41 மற்றும் பிற வசனங்கள்.

5. மார்க்கத்தின் கடமைகள் குர்ஆனில் பல வசனங்களில் அறிவிக்கப்பட்டுள்ளன, எ.கா; 2:3, 2:43, 2:183, 2:196, 3:97, 22:78 மற்றும் பிற வசனங்கள்.

6. தக்வா என்றால் அச்சம் அல்லது பாதுகாப்பு. அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அவனை அஞ்சி அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என உணர்வுப்பூர்வமாக நம்புவது. இந்த உணர்வு பக்தி அல்லது நேர்மையின் பண்பினை அடைவதற்கான உந்துசக்தியாகும், அதாவது நன்மை செய்வதும் தீமையை தவிர்ப்பதும்.

7. அல்ஃகுர்ஆன் 7:158, 21:107, 33:40, 34:28

8. தலைமை ஏற்கும் வாய்ப்புக்கான சலுகையினை மக்காஹ்வின் பிரமுகர்களில் ஒருவரான உத்பா பின் ரபீஅஹ் (அபூ சுஃப்யானின் மாமனார்) வழங்கினார்.

9. அல்ஃகுர்ஆன் 29:50-51

10. The Holy Qur’an, Translation and Commentary, by A. Yusuf Ali, The Islamic Foundation, London, 1975. Commentary on verse 7:157.

11. அல்ஃகுர்ஆன் 3:3, 4:47, 5:48, 15:9, 26:192-196, 76:23 மற்றும் பிற வசனங்கள்.

12. அல்லாஹ்வுடனும் மற்ற படைப்புகளுடனும் மனிதனுடைய உறவைப்பற்றி, ஃகுர்ஆனில் பல வசனங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது.எ.கா; 1:2, 2:21-22, 2:257,7:54, 50:21, 82:10-12, 18:50, 6:112, 12:5, 6:38, 2:164, 31:10, 36:71-73, மற்றும் பிற வசனங்கள்.

13. அல்ஃகுர்ஆன் 2:38-39,2:81-82,17:9-10 மற்றும் பிற வசனங்கள்.

14. அல்ஃகுர்ஆன் 3:137,10:71-73;11:25-49,12:1-113,17:2-8,71:1-28 மற்றும் பிற வசனங்கள்.

15. The Geological Concept of Mountains in the Qur'an, El-Naggar, p. 5.

16. For further reading on this subject please refer to: (1) Qur'an & Modern Sciences, by Dr. Zakir Naik, (2) The Bible, The Qur'an and Science, by Maurice Bucaille, (3) The Qur'an: Unchallengeable Miracle, by Caner Taslaman, translated by Ender Gurol.

17. அல்ஃகுர்ஆன் 2:34, 17:61

18. அல்ஃகுர்ஆன் 14:44-46, 74:8-10, 80:33-46

19. அல்ஃகுர்ஆன் 13:22-23, 36:55-56, 52:21

20. அல்ஃகுர்ஆன் 5:48, 16:36, 10:47

21. அல்ஃகுர்ஆன் 3:64-65;3:98-100,4:47 மற்றும் பிற வசனங்கள்.

22. அல்ஃகுர்ஆன் 2:75,2:79,2:146,159,174, 3:71, 4:46,5:13 மற்றும் 5:15. கிறிஸ்தவ பைபிள் அறிஞர்களும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றனர், பார்க்க '(1) 'Misquoting Jesus' and (2) 'Jesus Interrupted' by Bart D. Ehrman.

23. அல்ஃகுர்ஆன் 5:48.

24. அல்ஃகுர்ஆன் 11:118-119

25. அல்ஃகுர்ஆன் 3:59,4:171,5:75,5:116-117,19:30,

26. The Bible (KJV); Matthew 24:36, John 5:30, 14:28, 17:3 and 20:17, Acts 2:22. For further reading on this subject visit the following site: http://www.islam-guide.com/ch3-10-1.htm. You can also read 'The First and Final Testament', by Dr. Lawrence Brown.

27. அல்ஃகுர்ஆன் 3:45, 4:171, 5:72, 19:30.

28. அல்ஃகுர்ஆன் 19:27-33 , 3:49;5:110.

29. அல்ஃகுர்ஆன் 5:110 , 57:27

30. ஈசா (அ) 'இஸ்ரவேல் வழித்தோன்றல்களிடையே' அனுப்பப்பட்டார்கள் என்பதற்கு பைபிளின் எல்லா பதிப்புகளும் சாட்சியமளிக்கின்றன. எ.கா the Bible (KJV), Matthew 10:5-6 and Matthew 15:22-26.

31. விஞ்ஞானிகளில் நாத்திகத்தின் வலுவான ஆதரவாளராக Sir Antony Flew இருந்தார். 2004 ஆம் ஆண்டில் கடவுள் மீது தனது நம்பிக்கையை அறிவித்தார், 2007 இல் There is God: How the World's Most Notorious Atheist Changed His Mind' எனும் நூலை எழுதினார்.

32. அல்ஃகுர்ஆன் 7:172 , 30:30

33. அல்ஃகுர்ஆன் 3:86,10:9, 13:27,17:97,18:17, 48:4, 74:31.

34. அல்ஃகுர்ஆன் 17:70, 23:115, 29:2, 30:8

35. வரலாற்றில் பெண்கள் அனுபவித்த அநீதிகளுக்கான எடுத்துக்காட்டுகள் (1) இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியாவில் பெண் குழந்தைகள் உயிருடன் புதைக்கப்பட்டனர். (2) ரோம நாகரிகம் பெண்களை அடிமைகளாகக்கருதியது, கிரேக்கர்கள் பெண்களை ஒரு விளைபொருளாகக்கருதினர். (3) கி.பி. 587. இல் பிரான்சில் பெண்கள் மனிதர்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்க ஒரு மாநாடு நடத்தப்பட்டது. (4) 1850 க்கு முன்னர் பெண்கள் இங்கிலாந்தில் குடிமக்களாக கருதப்படவில்லை, அவர்களுக்கு 1882 வரை தனி உரிமைகள் இல்லை. (5) சீன கலாச்சாரத்தில் ஆண்கள் தங்கள் மனைவிகளை அடிமைகளாக விற்க அனுமதிக்கப்படுவது மட்டுமல்லாமல், அவர்களைஉயிருடன் புதைக்கவும் அனுமதிக்கப்பட்டனர் (6) இந்துக்கள் பெண்களை மரணம், நரகம், விஷம் அல்லது நெருப்பு ஆகியவற்றைவிட மோசமான துன்பமாக கருதினர்.

36. அல்ஃகுர்ஆன் 2:190,2:193, 2:217, 4:75 , 8:39

37. அல்ஃகுர்ஆன் 8:67-70. 8 மற்றும் 9 ஆம் அத்தியாயங்களின் பெரும் பகுதிகள் (அத்துடன் மற்ற அத்தியாயங்கள்), போருக்கான சூழ்நிலைகள், போரின் நடைமுறை, போர் நிறுத்தம் தொடர்பான தீர்ப்புகள், புகலிடம் கோருவோர், போர்ப்பொருட்களை நிர்வகித்தல் மற்றும் போர்க்கைதிகளைக் கையாளுவது தொடர்பான சட்டங்களை வரலாற்றில் முஸ்லிம்கள் தான் முதன்முதலாக அறிமுகப்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

38. பாரக்க abolition timeline: http://en.wikipedia.org/wiki/Abolition_of_slavery_timeline.

39. அல்ஃகுர்ஆன் 10:99, 109:1-6 மற்ற வசனங் கள்

40. குறிப்பு VI பக்கம் 183

41. குறிப்பு VII பக்கம் 4

42. குறிப்பு VII பக்கம் 4

43. குறிப்பு VIII பக்கம் 110-114

44. குறிப்பு VIII பக்கம் 116-118

# குறிப்பு

I. The Holy Qur'an, Translation and Commentary, by A. Yusuf Ali, The Islamic Foundation, London, 1975.

II. Towards Understanding The Qur'an, by Sayyid Abul A'la Maududi, The Islamic Foundation, London, 1992.

III. Qur'an and Modern Sciences: Conflict or Conciliation? By Dr. Zakir Naik (2008), Islamic Research Foundation, Mumbai, India.

IV. Ulum Al-Qur'an, An Introduction to the Sciences of the Qur'an. By Ahmed Von Denfer, The Islamic Foundation, London, 1983.

V. Muhammad in the Hindu Scriptures. Dr வேத்பிரகாஷ் உபாத்யாய, ஏ.எஸ். நூருதீன், மலேசியா, 2007.

VI. Tariq Ramadan, Radical Reform: Islamic Ethics and Liberation, Oxford University Press, Oxford, 2009.

VII. Clinton Bennet, Muslims and Modernity: An Introduction to the Issues and Debates, Continuum, New York, 2005.

VIII. Mehmet Ozalp, Islam between Tradition and Modernity, Barton Books, Australia, 2012.




“அர்-ரஹ்மான்”, அளவிலாக் கருணையாள். அல்லாஹ்வின் இயற்பண்புகளில் ஒன்று.

# குறிப்புகள்

# تعريف الإسلام باللغة التاميلي



அணு டி.என்.ஏவின் மூலக்கூறு அமைப்பு

விற்பனைக்கு இல்லை